விலை : 20.00
பக்கங்கள் : இருபது

# வலம்புரி
Valampurii

website : www.valampurii.lk
E-mail: valampurii@yahoo.com

Registered as a Newspaper in Srilanka

சங்கு 14 வள்ளுவர் ஆண்டு 2044 ஆனி 31 திங்கட்கிழமை (15.07.2013) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 208

ராம்கோ
MADRAS CEMENTS LTD
RAMCO CEMENT
ராம்கோ சீமெந்தைப் பயன்படுத்துங்கள்; உங்கள் பணத்தை மீதப்படுத்துங்கள்.

# தமிழர்களை அடிமைப்படுத்தும் முயற்சியில் இலங்கை அரசாங்கம்!



## ஜெயலலிதா மன்மோகனுக்கு கடிதம்

(சென்னை)

இலங்கை அரசின் நடவடிக்கை தமிழர்களை மீண்டும் அடிமைப்படுத்தும் வகையில் உள்ளது.

அவர்களின் பாதுகாப்புக்கு பங்கம் ஏற்படும் வகையில் இலங்கை செயற்படுகிறது.

இது குறித்து இந்திய அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும் என தமிழக முதல்வர் ஜெ.ஜெயலலிதா இந்தியப் பிரதமர் மன்மோகன் சிங்கிற்கு கடிதம் எழுதியுள்ளார்.

(விரிவான செய்தி 15-ம் பக்கத்தில்)



## ஆளுநரின் தலையீடு குறித்து ஜனாதிபதியிடம் முறைப்பாடு

(கொழும்பு)

மாகாண சபைகளுக்கு அதிகாரங்கள் இருக்கும் நிலையில் கிழக்கு மாகாண சபை முதலமைச் சரும், அமைச்சர்களும் அந்த அதிகாரங்களைப் பயன்படுத்துவதில் எந்த தடைகளும் கிடையாது என்று ஜனாதிபதி தம்மிடம் கூறியதாக மாகாண ஆளும் கட்சி உறுப்பினர்கள் தெரிவித்துள்ளனர்.

மாகாண ஆளுநர் தலையீடு காரணமாக தாம் தமது பணிகளை மேற்கொள்ள முடியவில்லை என்று கூறி கிழக்கு மாகாண ஆளும் கட்சி உறுப்பினர்கள் சபை அமர்வுகளை புறக்கணித்து வந்ததை அடுத்து ஜனாதிபதியுடன் அவர்கள் நடத்திய சந்திப்பு ஒன்றிலேயே ஜனாதிபதி இந்த உத்தரவாதத்தை அளித்ததாக அவர்கள் கூறியுள்ளனர்.

ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவைக் கிழக்கு மாகாண ஆளும் கட்சி உறுப்பினர்கள் கடந்த சனிக்கிழமை இரவு கண்டியிலுள்ள ஜனாதிபதியின் அதிகாரபூர்வ இல்லத்தில் சந்தித்தனர்.

கிழக்கு மாகாண சபை நிர்வாகத்தில் ஆளுநரின் தலையீடு காரணமாக, தாம் மாகாண சபை நிர்வாகத்தை முன்னெடுப்பதில் நெருக்கடிகளை எதிர்நோக்குவதாக மாகாண அமைச்சர்கள் ஏற்கெனவே குற்றச்சாட்டுகளை முன்வைத்திருந்தனர்.

இந்த நிலையில் ஜனாதிபதியுடன் நடந்த இந்தச் சந்திப்பு தொடர்பாக கருத்துத் தெரிவித்த மாகாண அமைச்சர் ஹாபிஸ் நசீர் அஹமட், மாகாண சபைக்குரிய ஐந்து அமைச்சுக்களுக்கும் உரிய அமைச்சர்களே பொறுப்பாக இருப்பது மட்டுமன்றி பொறுப்பு (20ஆம் பக்கம் பார்க்க)

## தேசிய மட்ட தமிழ்த்தினப் போட்டி வடக்கு மாகாணம் முதலிடம்!

### 25 தங்கம் வென்றனர் மாணவர்கள்

(யாழ்ப்பாணம்)

தேசிய மட்ட தமிழ்த்தினப் போட்டியில் 25 தங்கப் பதக்கங்களை வென்று வடக்கு மாகாணம் முதலிடத்தைப் பெற்றது.

தேசிய மட்டத்திலான அகில இலங்கைத் தமிழ்த்தினப் போட்டி கொழும்பு (20ஆம் பக்கம் பார்க்க)

## கட்சிக்கு புதிய தலைமை வேண்டும் தமிழரசுக் கட்சி போர்க்கொடி

(யாழ்ப்பாணம்)

வட மாகாண சபைத் தேர்தலில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் முதலமைச்சர் வேட்பாளராக மாவை சேனாதிராஜாவை களமிறக்காவிட்டால் இலங்கைத் தமிழரசுக் கட்சியின் மத்திய செயற்குழுவை உடனடியாகக் கூட்டுமாறும், தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கு புதிய தலைமை வேண்டும் எனவும் வலியுறுத்தப்பட்டுள்ளது.

வடக்குத் தேர்தலில் முதலமைச்சர் வேட்பாளர் யார் என்பதைத் தெரிவு செய்வதில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்குள் இழுபறி நிலை தொடர்கின்றது.

முதலமைச்சர் வேட்பாளரை தீர்மானிப்பதற்காக கடந்த வியாழக்கிழமையும், வெள்ளிக்கிழமையும் கொழும்பில் நடைபெற்ற கூட்டமைப்பின் ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டங்களில் எந்தவித முடிவுகளும் எட்டப்படவில்லை. அதேவேளை, நேற்றுமுன்தினம் சனிக்கிழமை மாலை 4 மணிக்கு நடைபெறவிருந்த கூட்டமும் இன்று திங்கட்கிழமை வரை ஒத்திவைக்கப்பட்டுள்ளது.

இந்நிலையில், கூட்டமைப்பின் முதலமைச்சர் விவகார இழுபறி தொடர்பில் இலங்கைத் தமிழரசுக் கட்சியின் முக்கியஸ்தர்கள் இருவர் கருத்துத் தெரிவித்துள்ளனர்.

அவர்கள் தெரிவித்த கருத்துக்கள் வருமாறு, வடக்கில் மக்களோடு மக்களாக வாழ்ந்து, தமிழரின் விடுதலைக்காக தந்தை செல்வா வழியில் போராடி வரும் மாவை சேனாதிராஜாவையே முதலமைச்சர் வேட்பாளராகக் களமிறக்க வேண்டும் என்பதில் இலங்கைத் தமிழரசுக் கட்சியின் யாழ். மாவட்டக் கிளை உறுதியாகவுள்ளது என சீ.வீ.கே. சிவஞானம் தெரிவித்துள்ளார்.

அதேவேளை, வடக்கில் ஒவ்வொரு மாவட்டங்களிலும் உள்ள மக்களும் மாவை சேனாதிராஜாவையே முதலமைச்சர் வேட்பாளராக நிறுத்த வேண்டும் என்பதில் குறியாகவுள்ளனர்.

இந்நிலை (20ஆம் பக்கம் பார்க்க)

## ஷிராணிக்கு எதிராக ஊழல் வழக்கு!

(கொழும்பு)

முன்னாள் பிரதம நீதியரசர் ஷிராணி பண்டாரநாயக்கவுக்கு எதிராக ஊழல் வழக்குத் தொடுப்பதற்கான நடவடிக்கைகளை அரசாங்கம் தீவிரப்படுத்தியுள்ளது.

இதன் ஒரு கட்டமாக நாளை மறுதினம் அவருக்கு எதிரான விசாரணைகளை மேற்கொள்ளும் ஆணைக்குழு முன்னிலையில் ஆஜராகி, வாக்குமூலம் அளிக்குமாறு ஷிராணிக்கு அரசாங்கத்தின் சார்பில் உத்தரவிடப்பட்டுள்ளது.



அவ்வாறு அவர் ஆஜராகாத பட்சத்தில் ஷிராணி பண்டாரநாயக்க மீது சுமத்தப்பட்டுள்ள குற்றச்சாட்டுகள் தொடர்பில் ஒருதலைப்பட்சமாக வழக்குத் தொடரவும் அரசாங்கம் முடிபெடுத்துள்ளது.

ஷிராணி பண்டாரநாயக்க்வின் மீதான தனிப்பட்ட பழிவாங்கல் காரணமாக அரசாங்கம் மேற்கொளளும் இவ்வாறான நடவடிக்கைகள் காரணமாக சர்வதேச ரீதியாக அவருக்கு ஆதரவு அதிகரித்துச் செல்வது குறிப்பிடத்தக்கது. (எ-8)

## புதியதோர் பயணத்தில் அரசும் ஐ.தே.கவும்!

### குற்றஞ்சாட்டுகிறார் பொன்சேகா

(கொழும்பு)

அரசாங்கமும் பிரதான எதிர்க் கட்சியான ஐக்கிய தேசியக் கட்சியும் புதியதொரு பயணத்தை தொடங்கியுள்ளன.

இவ்விரு கட்சிகளும், தங்களுடன் இணைந்து செயற்படுபவர்களுக்கு மாத்திரமே சலுகைகளையும் வசதிகளையும் செய்து வருகின்றன என்று ஜனநாயக மக்கள் முன்னணியின் தலைவரும் முன்னாள் இராணுவ தளபதி (20ஆம் பக்கம் பார்க்க)



## மூன்று நாள் காய்ச்சல் குடும்பப் பெண் மரணம்

(யாழ்ப்பாணம்)

மூன்று நாள் காய்ச்சல் காரணமாக குடும்பப் பெண்ணொருவர் உயிரிழந்துள்ளார்.

இதில் அராலி மத்தி ஊரத்தி என்னுமிடத்தினைச்சேர்ந்த லோகேஸ்வரன் விஜயகுமாரி (வயது - 25) என்ற குடும்பப்பெண்ணே உயிரிழந்தவராவார்.

குறித்த குடும்பப் பெண்ணுக்கு கடந்த 3 நாட்களிற்கு மேலாக காய்ச்சல், நெஞ்சுவலி என்பன இருந்துள்ளது.

தனது சுகவீனத்திற்த மருந்தெடுப்பதற்காக கொட்டைக்காடு கிராம வைத்தியசாலைக்கு சென்று அவர் சிகிச்சை பெற்றுள்ளார்.

எனினும் நேற்று முன்தினம் குறித்த பெண்மணி திடீர் சுகவீனமுற்று கொட்டைக்காடு வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டார்.

பின்னர் மேலதிக சிகிச்சைக்காக அம்புன்ஸ் மூலம் குறித்த குடும்பப் பெண் யாழ்.போதனா வைத்தியசாலைக்கு கொண்டு வரப்பட்ட போதிலும் அவர் கொண்டு வரும் வழியில் உயிரிழந்து விட்டதாக உறவினர்களிற்கு தகவல் கூறப்பட்டுள்ளது. இது குறித்த விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. (எ-4)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# மனோதத்துவ வைத்தியம்

(General Psychotheraphy)

பிரபல மனோதத்துவ நிபுணர்



Dr.P.ஆறுமுகம்

T.P.: 0719315664 , 0777569205

17.07.2013 முதல் 22.07.2013 வரை 6 நாட்கள் மட்டுமே இருப்பார். உடன் பதிவுகளை மேற்கொள்ளவும்.

மீண்டும் யாழில்

பதிவுக் கட்டணம் ரூபா: 300/-


ஆரம்பநிலை மனநோய் விரைவில் சுகமாக்கலாம். நீரிழிவு நோய்க்கு திறமான மூலிகை மருந்து உண்டு. ஆஸ்துமா, மாதவிடாய்க் கோளாறுகள், வெள்ளைபடுதல், குழந்தைப் பேறின்மை, வாதநோய், தலையிடி, பல்முரசு கரைதல் போன்ற நோய்களுக்கு வைத்தியம் உண்டு.

இளைஞர்கள் ஞாபகத்திறன் குறைவு, கல்வியில் நாட்டம் குன்றிப் பயம், நடுக்கம், நரம்புத் தளர்ச்சி உண்டாகி ஆளுமை குறைந்து தாழ்வு மனப்பான்மை உண்டாகக் காரணமான இளமையில் ஏற்படும் தவிர்க்க முடியாத தவறுகளைத் திருத்தி வாழ்வில் வெற்றிபெற பிரபல மனோதத்துவ நிபுணர் Dr.P.ஆறுமுகம் அவர்களைச் சந்தியுங்கள்.

தாம்பத்திய பாதிப்புக்கள் (பிறவியில் ஆண்மையற்றவர்களைத் தவிர) எந்தவித மோசமான தாம்பத்திய கோளாறுகளையும் மனோதத்துவரீதியில் திறமான மூலிகை மருந்துகளாலும் 45 நாட்களில் சுகமாக்கலாம். பலர் சுகமாகியுள்ளனர். ஆண்களுக்கு ஏற்படும் விந்து உயிரணுக்கள் குறைபாடுகளுக்கு சிறந்த மூலிகை மருந்து கொடுக்கப்படுவதால் யாழ்ப்பாணத்தில் பல பேருக்கு குழந்தைகள் கிடைத்தமைக்கு ஆதாரங்கள் உண்டு.

**நாதன் இன்**

(பழைய கமால் லொஜ்) 392/A, மணிக்கூட்டு கோபுர வீதி, யாழ்ப்பாணம். (சிவதர்சன் எலக்ரிக்கல் கடைக்கு அருகில்) (பெருமாள் கோவிலுக்கும் வெலிங்டன் சந்திக்கும் இடையில்)

மட்டக்களப்பு, வந்தாறுமூலை கிழக்குப் பல்கலைக் கழகத்தில் கடந்த சனிக்கிழமை பௌத்த மாணவர்களினதும், விரிவுரையாளர்களினதும் வணகக வழிபாடுகளுக்காக புத்தர் சிலை ஸ்தாபிக்கப்பட்டது.


# வீனஸ் கல்லூரி

2ம் ஒழுங்கை கனகபுரம், கிளிநொச்சி.

AL-2013

"இறுதிக் கருத்தரங்கு"

வரலாறு

காலம் : 16-07-2013; நேரம் : 9.00 - 3.00

ஆசிரியர் : S.S. தாஸ்

(3272)


# அத்தியடியில் அடிக்கல் நாட்டும் நிகழ்வு

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் அத்தியடி ஸ்ரீ சிதம்பர வீரகத்தி விநாயகர் ஆலயத்தில் இன்று நண்பகல் 12 மணிக்கு, மணிக்கூட்டுக் கோபுரங்களுக்கான அடிக்கல் நாட்டு நிகழ்வு இடம்பெறவுள்ளது.

மேற்படி ஆலய நிர்வாக சபையின் முன்னெடுப்பில் இந்த நிர்மாண வேலைகள் நடைபெறவுள்ளன. (நு)


# பிள்ளையார் இன்

*12 மணி முதல் 3 மணிவரை மிகச் சிறந்த சைவ அசைவ உணவு வகைகள் வழங்கப்படுகின்றன.*

*சனி, ஞாயிறு தினங்களில் புஃவே (Buffet) முறையில் இந்திய சமையற்கலை வல்லுநர்களால் தயாரிக்கப்பட்ட உணவு வகைகள் வழங்கப்படும்.*

சைவ உணவு: 150/- அசைவ உணவு 175/-

தொடர்புகளுக்கு: இல.31, மானிப்பாய் வீதி, யாழ்ப்பாணம். 021 222 2829


# சக்தி ரிவியில் யூ- ரிப்போட்டர் யாழில் நேற்று அறிமுகம்

சக்தி ரிவியில் யூ-றிப்போட்டர் அறிமுகத்தினை யாழ். மாவட்டத்தில் முதன்முறையான நேற்றைய தினம் அந் நிறுவனம் அறிமுகப் படுத்தியுள்ளது. இந்நிகழ்வு நேற்று காலை 9 மணிக்கு யாழ். மத்திய கல்லூரியில் இடம்பெற்றுள்ளது.

கிராம மட்டங்களில் இடம் பெறும் பிரச்சினைகள், பற்றாக்குறைகள் என்பவற்றினை தேசிய, சர்வதேச ரீதியாக வெளிக்கொணரும் முகமாகவே சக்தி ரி.வி இதனை யாழ்ப்பாணத்தில் தற்போது முன்னெடுத்துள்ளது. அவரவர் கிராமங்களில் இடம் பெறுகின்ற பிரச்சினைகளினை அதனை நேரடியாக கண்ணுற்றோர் அல்லது அது தொடர்பான விபரம் அறிந்தோர் அச் செய்தியினை தமது குரல், ஒளிப்பதிவு மூலம் நியூஸ் பெஸ்ற் ஊடாக உலகின் கவனத்திற்கு கொண்டு செல்ல முடியும் என சக்தி ரி.வி நிறுவனத்தினர் தெரிவித்தனர்.

இந்நிகழ்வில் சக்தி ரி.வியின் பணிப்பாளர்கள், ஒளிப்பதிவாளர்கள் உட்பட பலர் கலந்து கொண்டு மாணவர்களுக்கு விளக்கமளிக்கப் பட்டு உள்ளது. (எ-4)

# வடக்கிலிருந்து தெற்கிற்கு பொத்தம் பாதயாத்திரை

(யாழ்ப்பாணம்)

இங்கிலாந்து கிரிக்கெட் அணியின் முன்னாள் தலைவரும் கிரிக்கெட் வர்ணணையாளருமான இயன் பொத்தம் வடக்கிலிருந்து தெற்கிற்கு பாதயாத்திரையை மேற்கொள்ளவுள்ளார்.

இந்து சமுத்திர அனர்த்த நிவாரண அறநிதியத்திற்கு நிதி திரட்டும் வகையிலேயே அவர் இந்த பாதயாத்திரையை மேற்கொள்ளவுள்ளார்.

நவம்பர் மாதம் முதலாம் திகதியே தனது பாதயாத்திரையை மாங்குளத்திலிருந்து ஆரம்பிக்கவிருக்கின்றார்.

2004ஆம் ஆண்டு சுனாமி அனர்த்தம் ஏற்பட்ட போது இங்கிலாந்து கிரிக்கெட் அணியின் முன்னாள் தலைவரான இயன் பொத்தம் இலங்கைக்கு உதவியளித்தார் என்பது குறிப்பிடத்தக்கது. (எ-8)

# பாட்டுப்பாடும் அமைச்சர்

(யாழ்ப்பாணம்)

யாழில் சுதந்திரக் கட்சி சார்பில் வட மாகாண சபைத் தேர்தலில் போட்டியிடும் வேட்பாளர்களுக்காக பிரசாரத்தில் ஈடுபட்டுள்ள அமைச்சர் மேர்வின்சில்வா 'யாழை விட்டு போக விருப்பவில்லை. இங்கு ஒரு பெண் பார்க்கவும்' என பொது மக்களிடம் கோரியுள்ளார்.

யாழ். குருநகர் பகுதியில் நேற்றுமுன் தினம் சனிக்கிழமை இடம்பெற்ற பொது மக்களுடனான சந்திப்பின் போதே அவர் இந்தக் கோரிக்கையை விடுத்தார்.

இங்கு தொடர்ந்து உரையாற்றிய அவர், யாழ். மாவட்டத்திற்கு நான் பல தடவைகள் வருகை தந்திருக்கிறேன். இந்த முறை நான் வருகை தந்ததை என் வாழ்நாளில் மறக்க முடியாது.

எனது பழைய நண்பர்கள், நான் திரிந்த இடங்கள் எல்லாம் சுற்றி வரும் வாய்ப்பு எனக்கு கிடைத்திருக்கின்றது.

எனக்கு யாழை விட்டு போகவே விருப்பமில்லாமல் இருக்கின்றது. இதனால் எனக்கு இங்கு ஒரு மணப்பெண் தேவை என்று அவர் கோரிக்கை விடுத்ததோடு 'என்னைக் கண்டு நீ வாழ உன்னைக் கண்டு நான் இன்பம் பொங்கும் இன்பத்தீபாவளி' என்ற பாடலைப் பாடி அங்கு கூடியிருந்த மக்களை மகிழ்வித்துள்ளார். (எ-8)

# தொலைபேசி மிரட்டல் குறித்து முறையிட பொலிஸார் பணிப்பு

(யாழ்ப்பாணம்)

தொலைபேசி மூலம் தொடர்புகொண்டு அச்சுறுத்தி கப்பம் பெறும் முயற்சிகள் அதிகரித்துள்ள நிலையில், அவ்வாறான அழைப்புக்கள் கிடைக்கப்பெறும் பட்சத்தில் அது குறித்து அருகிலுள்ள பொலிஸ் நிலையத்துக்கு உடனடியாக அறிவிக்குமாறு பொலிஸார் அறிவித்துள்ளனர்.

தொலைபேசி மூலமாக பலரை அச்சுறுத்தி பணம் பறிப்பது தொடர்பில் அதிகளவான முறைப்பாடுகள் கிடைக்கப் பெற்றுள்ள நிலையில், பொலிஸ் தலைமையகம் விசேட அறிக்கையொன்றை வெளியிட்டுள்ளது.

அவ்வறிக்கையிலேயே மேற்கண்டவாறு குறிப்பிடப்பட்டுள்ளது. அதில் மேலும் குறிப்பிடப் பட்டுள்ளதாவது.

தமிழ், முஸ்லிம் வர்த்தகர்கள் உட்பட பல பேரிடம் தொலைபேசி மூலம் தொடர்பு கொண்டு, அவர்களை அச்சுறுத்தி பணம் பறிப்பது தொடர்பில் பல முறைப்பாடுகள் கிடைத்துள்ளன.

இவ்வாறு, பணம் கேட்டு அச்சுறுத்தும் நபர்கள் பற்றி உடனடியாக அருகில் இருக்கும் பொலிஸ் நிலையத்தில் அல்லது பொலிஸ் முறைப்பாட்டு பிரிவின் தொலைபேசி இலக்கங்களுடன் தொடர்பு கொண்டு முறைப்பாடு செய்யவும்.

இவ்வாறு பணம் பறிக்கும் நபர்கள் தொடர்பில் இரகசிய பொலிஸார், பயங்கரவாத தடுப்பு பிரிவு அதிகாரிகள், கொழும்பு குற்றத்தடுப்பு பிரிவு பொலிஸார் விசாரணைகளை நடத்தி வருவதோடு சந்தேக நபர்களைக் கைது செய்வதான நடவடிக்கைகளிலும் ஈடுபட்டுள்ளனர்.

இந்நிலையில், மேற்கண்டவாறான தொலைபேசி அழைப்புக்கள் கிடைக்கப் பெறும் பட்சத்தில், அது குறித்து எவ்வித தயக்கமுமின்றி பொலிஸில் முறையிடவும், அல்லது கீழ்க் காணும் தொலைபேசி இலங்களுடன் தொடர்பு கொண்டு அறிவிக்கவும்.

011-2444480 அல்லது 011-2818283 ஆகிய இலக்கங்களுடன் தொடர்பு கொண்டு அறிவிக்குமாறு பொலிஸ் தலைமையகம் தனது அறிக்கை மூலம் பொது மக்களைக் கேட்டுள்ளது. (எ-8)

# முன்னாள் போராளியை காணவில்லையென முறையீடு

(யாழ்ப்பாணம்)

விடுதலைப்புலிகளின் முன்னாள் போராளியொருவர் காணாமல் போயுள்ளார்.

கிளிநொச்சி உடையார்கட்டைச் சேர்ந்த குமாரசாமி குகனேஸ்வரன் (வயது 31) என்ற குடும்பஸ்தரே காணாமல் போயுள்ளார்.

பிரஸ்தாப குடும்பஸ்தர் அடையாள அட்டையைப் பெற்றுக் கொள்வதற்கு கொழும்பிற்கு பயணமாகியுள்ளார். பின்னர் அங்கிருந்து அடையாள அட்டையுடன் கடந்த 10ஆம் திகதி புதன்கிழமை இரவு யாழ் நோக்கி பிரயாண பேருந்தில் ஏறியுள்ளார். அதில் பின்னரே மேற்படி குடும்பஸ்தர் தொடர்பான எவ்வித தகவலும் தெரியவில்லை.

பேருந்தில் ஏறிய குடும்பஸ்தர் தன் மனைவியிடம் தொலைபேசி வழியாக இறுதியாக உரையாடியுள்ளார். எனினும் அதன் பின்னர் அவரது தொலைபேசி இலக்கம் துண்டிக்கப் பட்ட நிலையிலேயே வைக்கப்பட்டுள்ளது.

இக்காணாமல் போன சம்பவம் தொடர்பில் அச்சுவேலி பொலிஸ் நிலையத்தில் அவரது மனைவியினால் முறைப்பாடு செய்யப் பட்டுள்ளது.

போரின் பின்னர் முகாமில் தடுத்து வைக்கப்பட்டிருந்த இவர் கடந்த மே மாதம் 19ம் திகதியன்று புனர்வாழ்வு அளிக்கப்பட்டு விடுதலை செய்யப்பட்டிருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது. (எ-8)

# தந்திச் சேவைக்கு இந்தியாவில் டாட்டா

(சென்னை)

இந்தியாவின் தந்தித்துறையில் நேற்று ஞாயிற்றுக்கிழமை இரவு கடைசித் தந்திகள் அனுப்பப்பட்டன. மாறிவரும் காலச்சூழ்லில் தந்தி சேவைக்கான தேவை மிகவும் குறைந்து விட்ட நிலையில் யூலை 15 முதல் அச்சேவை முடிவுக்குக் கொண்டுவரப்பட்டுள்ளது.

நாட்டில் ஆளுக்கொரு கைபேசி என்றாகி விட்ட நிலையில் தந்தி தேவையில்லை எனப் பலர் கருதுகின்றனர். ஆனால் வழக்கறிஞர் சிலர் தங்களுக்கு அது மிகப் பயனுள்ளதாக இருப்பதாகத் தெரிவிக்கின்றனர்.

தொழிற்சங்கத் தலைவர் ஸ்ரீதர் சுப்பிரமணியன் தந்தி [illegible] ஈர்க்கப் பயன்படுத்தப்படுவது குறித்து விளக்கினார்.

இதுபோன்ற பல பயன்பாடுகள் இருப்பதால் சேவை தொடரவேண்டும் என்கிறார் பி எஸ் என் எல் ஊழியர் சங்கத்தின் சென்னை வட்ட செயலாளர் சுப்பிரமணியன்.

ஆனால் தந்தி சேவை 'கட் கட கட்' என்ற மோர்ஸ் சங்கேத மொழியைக்கைவிட்டு இப்போது இணையத்தளத்தை ஆதாரமாகக் கொண்டே செயல்படுவதாக சுட்டிக்காட்டி, அதில் உள்ள குறைபாடுகளையும் எடுத்துக்கூறும் அவர் எப்படியும் தந்தி தேவை குறைந்துவிட்டதென்பதை ஏற்றுக்கொள்கிறார்.

கவிஞர் மனுஷ்யபுத்திரன் லாப நஷ்ட [illegible] தந்திக்கு உணர்வுரீதியான செயற்பாடும் இருக்கிறதென்கிறார். (எ-8)

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# இன்று ஒரு தகவல்

## இதய வாசல்

ஒரு பெரியவர் இருந்தார்.

அவர் மிகவும் ஏழை. ஆதலால் ஒரு குடிசையில் வாழ்ந்தார்.

ஒரு நாள் இரவு நல்ல மழை பெய்து கொண்டிருந்தது.

அந்தப் பெரியவரும் மனைவியும் அந்தக் குடிசைக்குள் தூங்கிக் கொண்டிருந்தார்கள்.

அந்த நேரம் பார்த்து யாரோ திடீரென்று கதவை தட்டும் சத்தம் கேட்டது.

பெரியவர் விழித்துக் கொண்டார்.

மனைவியை எழுப்பினார்.

"வெளியே யாரோ வழிப்போக்கர்...நமக்குத் தெரியாத நண்பர் வந்திருக்கிறார் போல இருக்கு... கதவைத் திற" என்றார்.

அதற்கு அந்த அம்மா...

"உள்ளே இடமே இல்லையே... நம்மிருவருக்குமே இங்கே இடம் போதாதே. அப்படி இருக்கும் போது இன்னும் ஒரு ஆள் எப்படி உள்ளே இருக்க முடியும்?" என்றார்.

அதற்கு அவர் சொன்னார்.

"இது ஏழையின் குடிசை... இதில் எத்தனை பேர் வந்தாலும் இடமுண்டு" என்றார்.

"நான் யதார்த்தமாக பேசுகிறேன்...நீங்கள் தத்துவம் பேசுகிறீர்களா" என்றார் அந்த அம்மா...

அதற்கு அவர் சொன்னார்.

மனதில் இடம் இருந்தால் இந்தக் குடிசையே அரண்மனை மாதிரி நம்மால் உணர முடியும். உள்ளம் குறுகியிருந்தால் ஒரு பெரிய அரண்மனை கூட சிறியதாகத்தான் தெரியும்.

நமது வீட்டு வாசல் தேடி வந்திருக்கும் ஒரு மனிதனை நாம் எப்படி போ என்று சொல்ல முடியும்? இதுவரைக்கும் இந்தக் குடிசையில் நாம் இரண்டு பேர் படுத்திருந்தோம்.

இந்த இடத்தில் நிச்சயமாக மூன்று பேர் படுக்க முடியாது. ஆனால் குறைந்தது மூன்று பேர் அமரலாம். அதனால் நாம் எல்லோரும் எழுந்து அமர்ந்து இருந்தால் இன்னும் ஒரு நபருக்கு இடம் கிடைக்கும் என்றார்.

அந்த அம்மா கதவைத் திறந்தார்.

அந்த நபர் உடல் முழுவதும் நனைந்து போய் நின்று கொண்டிருந்தார்.

கதவைத் திறந்ததும் அவன் உள்ளே நுழைந்தான்.

மூன்று பேரும் அமர்ந்திருந்து சம்பாஷிக்க ஆரம்பித்தார்கள்.

சிறிது நேரம் சென்ற பின் இன்னும் இரண்டு பேர் வந்து கதவை தட்டினார்கள்.

உடனே அந்தப் பெரியவர் "வேறு யாரோ வந்திருக்கிறார்கள் போல இருக்கிறது. போய் கதவை திறவுங்கள்" என்றார்.

சிறிது நேரத்திற்கு முன் உள்ளே வந்தவன் சொன்னான்.

"கதவைத் திறப்பதா... இங்கே இடமே இல்லையே" என்றான்.

சிறிது நேரத்திற்கு முன் இவன் வெளியே நின்று கொண்டிருந்தான். இந்தப் பெரியவரின் மனதினால்தான் நமக்கு உள்ளே இடம் கிடைத்தது என்பதை மறந்து விட்டான்.

"எதற்காக கதவைத் திறக்க வேண்டும்? வேண்டாமே" என்றான்.

அன்புதான் உங்களுக்கு இடம் கொடுத்தது. அந்த அன்பு இன்னும் இருக்கிறது. அது உங்களோடு முடிந்து போகவில்லை. தயவு செய்து கதவைத் திறந்து விடுங்கள்.

நாம் இப்போது சற்று விலகித்தான் உட்கார்ந்து இருக்கிறோம். இனிமேல் சற்று நெருங்கி உட்காரலாம் சரியாகி விடும் என்றார்.

அந்தப் பெரியவர் கதவைத் திறந்தார்.

அந்த இரண்டு பேரும் உள்ளே வந்தார்கள். சிறிது நேரத்திற்குப் பின் ஒரு கழுதை வந்து கதவை தலையால் முட்டியது. உடம்பு முழுவதும் நனைந்து குளிரில் நடுங்கிக் கொண்டிருந்தது.

இப்பொழுது அந்தப் பெரியவர் கதவோரமாக உட்கார்ந்திருந்த ஆளிடம் "கதவைத் திறவுங்கள். யாரோ ஒரு புது நண்பர் வந்திருக்கிறார்" என்றார்.

அந்த நபர் வெளியே எட்டிப்பார்த்துவிட்டு "கழுதை ஒன்று நிற்கிறது. அதற்காக நாம் திறந்து விட வேண்டியதில்லை" என்றான்.

"இங்கே மிருகங்களைக்கூட மனிதர்களாக நடத்தித்தான் எனக்குப் பழக்கம். தயவு செய்து திறந்து விடுங்கள்" என்றார்.

"இங்கே இடமில்லையே என்று சொன்னார்கள்" எல்லோரும்.

அதற்கு அவர் சொன்னார்.

"இங்கே நிறைய இடம் இருக்கிறது. உட்காருவதற்குப் பதிலாக எல்லோரும் நிற்கலாம். கவலைப்படாதீர்கள். அப்படித் தேவைப்பட்டால் நான் வெளியே இருந்து கொள்கிறேன்" என்றார்.

"அன்பிற்கும் உண்டோ அடைக்கும்தாழ்" என்றார் திருவள்ளுவர். அது இதுதான்.

வாழ்க்கையில் அமைதியான நேரம் எது தெரியுமா? எந்த விதமான நிபந்தனைகளும் இல்லாமல் அன்பு செலுத்துகிற நேரம் இருக்கு பாருங்க... அதைவிட அமைதியான நேரம் வேறெதுவுமில்லை என்றார் ஒரு பெரியவர்.

*தென்கச்சி கோ.சுவாமிநாதன்*

# இலத்திரனியல் அடையாள அட்டை ஒக்டோபர் முதல் ஆரம்பமாகும்

இலங்கையில் இலத்திரனியல் தேசிய அடையாள அட்டை வழங்குவதற்கான ஆரம்பப் பணிகள் எதிர்வரும் ஒக்டோபர் மாதம் முதல் ஆரம்பமாகவுள்ளதாக ஆட்பதிவுத்திணைக்களத்தின் ஆணையாளர் நாயகம் ஆர்.எஸ்.எம்.சரத்குமார யாழில் தெரிவித்துள்ளார்.

ஆட்பதிவுத் திணைக்களத்தின் நடமாடும் சேவைகள் மற்றும் விழிப்புணர்வுக் கருத்தரங்கும் இலத்திரனியல் தேசிய அடையாள அட்டை எதிர்காலத்தில் வழங்குவது தொடர்பான கலந்துரையாடலும் நல்லூர் பிரதேச செயலக மாநாட்டு மண்டபத்தில் நேற்று முன்தினம் இடம் பெற்றது.

இதில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இங்கு தொடர்ந்தும் கருத்து தெரிவித்த அவர்,

இதுவரை காலமும் ஆட்பதிவுத் திணைக்களத்தால் ஆட்பதிவு அடையாள அட்டையே வழங்கப்பட்டது. தேசிய அடையாள அட்டை என்பது எதிர்காலத்தில் வழங்கப்படவுள்ள இலத்திரனியல் அடையாள அட்டையாகும்.

கடந்தகாலயுத்தம்காரணமாக வட பகுதியில் பலருக்கு ஆட்பதிவுத் திணைக்களத்தின் அடையாள அட்டைகளைப் பெறமுடியவில்லை.

இதனை வழங்க வேண்டியது ஆட்பதிவுத் திணைக்களத்தின் கட்டாய கடமையாகும். இதன் அடிப்படையிலேயே ஆட்பதிவுத் திணைக்களத்தின் முதலாவது பிராந்திய அலுவலகம் வவுனியாவில் அமைக்கப்பட்டுள்ளது.

ஆட்பதிவுத் திணைக்களத்தின் இரண்டாவது பிராந்திய அலுவலகம் விரைவில் கிழக்கு மாகாணத்தில் உள்ள மட்டக்களப்பில் அமையவுள்ளது என்றார் அவர். (அ-4)

## இராசி பலன்

15.07.2013

(ஆனி 31, திங்கட்கிழமை)

சூரிய உதயம் காலை 6.01 மணிக்கு

சப்தமி பிற்பகல் 5.14 மணிவ்ரை

அத்தம் மாலை 6.07 மணிவரை

இராகுகாலம் 7.30-9.00 மணிவரை

சுபநேரம் 12.00-1.30 மணிவரை

**மேடம்** தேக ஆரோக்கியத்தில் தெளிவு பிறக்கும் நாள், கடன்களை வசூலிக்க எடுத்த முயற்சி வெற்றி தரும், நல்லவர்களின் அறிவுரையும் ஆதரவும் கிடைக்கும், உறவினர் வருகையுண்டு.

**இடபம்** பிள்ளைகளின் நீண்ட நாளைய கோரிக்கைகளை நிறைவேற்றி வைப்பீர்கள், கல்யாணக் கனவு நனவாகலாம், அரசு வழியில் அனுகூலமுண்டு, வழிபாட்டால் நிம்மதி காண வேண்டிய நாள்.

**மிதுனம்** தொலைபேசி வழித்தகவலால் சந்தோசம் அதிகரிக்கும், வியாபாரத்தை விரிவுபடுத்தும் எண்ணம் உருவாகும், பண வரவு திருப்தி தரும், பொதுக் காரியங்களில் நாட்டம் காட்டுவீர்கள்.

**கடகம்** கனிவாகப் பேசி காரியம் சாதிப்பீர்கள், நேற்றைய பிணக்கொன்று இன்று நல்ல முடிவுக்கு வரும், உறவினர்களின் உதவிகள் ஒத்தாசைகள் கிடைக்கப் பெறுவீர்கள், பயணங்களால் பலனுண்டு.

**சிங்கம்** ஆடம்பரப் பொருட்கள் வாங்கும் எண்ணம் உருவாகும், பேச்சில் இனிமை தென்படும், குடும்பத்தில் குதூகலம் தரும் சம்பவங்கள் இடம்பெறலாம், தொழிலில் அதிக பிரயாசை காட்டுவீர்கள்.

**கன்னி** கோரிக்கைகள் நிறைவேற கோயிலுக்கு செல்ல வேண்டிய நாள், பணத்தேவைகள் கடைசி நேரத்தில் பூர்த்தியாகும், குடும்பத்தினரை அனுசரித்துச் செல்வது நல்லது, போசன நன்மையுண்டு.

**துலாம்** புண்ணிய காரியங்களுக்காக சில செலவுகள் ஏற்படலாம், வேலைச்சுமை கூடும், கூட்டாளிகளிடம் நிதானத்துடன் நடந்து கொள்வது நல்லது, சயன சுகக் குறைவான நாள்.

**விருச்சிகம்** எடுத்த காரியங்களில் முன்னேற்றம் காண்பீர்கள், சகோதர ஒற்றுமை பலப்படும், வருமானம் திருப்தி தரும், தொலைபேசி வழித் தகவல் மகிழ்ச்சி தரும், கௌரவமான சூழ்நிலை உருவாகும்.

**தனுசு** வருங்கால நலன் கருதி எடுத்த முயற்சிகளில் முன்னேற்றம் காண்பீர்கள், அரை குறைகளில் இருந்த பணிகளை மீதியும் தொடர்வீர்கள், அதிகாரிகள் அனுகூலமாக நடந்து கொள்வர்.

**மகரம்** போட்டியாக செயற்பட்டவர்கள் மனம் மாறுவர், மருத்துச் செலவுகள் குறைந்து மனநிம்மதியை கொடுக்கும், பயணங்களால் பலனுண்டு, மாற்றினத்தவர்கள் மூலம் சுப தகவல்கள் வந்து சேரலாம்.

**கும்பம்** துயரங்கள் தீர அம்பிகையை வழிபட வேண்டிய நாள், குடும்பத்தினரிடம் கோபத்தை குறைத்துக் கொள்வது நல்லது, போசன சுகமுண்டு, ஆரோக்கியம் சம்பந்தப்பட்ட வகையில் கவனமெடுக்க வேண்டிய நாள்.

**மீனம்** விலகிச் சென்றவர்கள் விரும்பி வந்து இணைவர், குடும்ப ஒற்றுமை பலப்படும், முயற்சிகளில் முன்னேற்றம் காண்பீர்கள், பயணங்களால் பலனுண்டு, போசன சுகமுண்டு.

வளவன்

# க.பொ.த.உயர்தரப் பரீட்சைக்கான அனுமதி அட்டைகள் அனுப்பி வைப்பு

## பரீட்சைகள் திணைக்களம் அறிவிப்பு

கல்விப் பொதுத் தராதர உயர் தரப் பரீட்சைக்கு விண்ணப்பித்த விண்ணப்பதாரர்களுக்கான பரீட்சை அனுமதிப் பத்திரங்கள் தபாலில் அனுப்பி வைக்கப்பட்டுள்ளதாக பரீட்சைகள் திணைக்களம் தெரிவித்துள்ளது.

பாடசாலை பரீட்சார்த்திகளுக்கான பரீட்சை அனுமதிப்பத்திரங்கள் பாடசாலை அதிபர்களுக்கு விநியோகிக்கப்பட்டுள்ளன. இதேவேளை தனியார் பரீட்சார்த்திகளுக்கான பரீட்சை அனுமதிப் பத்திரங்கள் அவர்களது தபால் முகவரிக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளதாக அத் திணைக்களம் தெரிவித்துள்ளது.

பாடசாலை பரீட்சார்த்திகள் அதிபர்கள் ஊடாக பரீட்சைக்கான அனுமதிப் பத்திரங்களைப் பெற்றுக் கொள்ள முடியும் என பரீட்சைகள் திணைக்களம் கூறியுள்ளது. பரீட்சைகள் நடைபெறும் காலத்தில் பரீட்சை அனுமதிப்பத்திரம் இல்லாத மாணவர்கள் பரீட்சை மண்டபத்திற்குள் எக்காரணம் கொண்டும் அனுமதிக்கப்படமாட்டார்கள் என பரீட்சைகள் திணைக்களம் தெரிவித்துள்ளது.

பரீட்சை அனுமதிப் பத்திரங்களில் ஏதேனும் பிழைகள் இருப்பின் உடனடியாக அறியத் தருமாறு பரீட்சார்த்திகளிடம் அத் திணைக்களம் கோரிக்கை விடுத்துள்ளது. இவ்வருடத்திற்கான க.பொ.த உயர் தரப் பரீட்சை எதிர்வரும் ஓகஸ்ட் மாதம் 5 ஆம் திகதியிலிருந்து 31 ஆம் திகதி வரை இடம்பெறவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (அ-2)

# விழுந்தாலடி வீதியை புனரமைத்து தருக

கரணவாய் குஞ்சர் கடைக்கு அருகில் உள்ள விழுந்தாலடி வீதி புனரமைக்கப்படாமையால் இவ் வீதியால் பயணிப்போர் பெரும் சிரமங்களை எதிர்கொள்ள வேண்டி உள்ளது. இவ்வீதி புனரமைக்கப்படாமையால் பாடசாலை மாணவர்கள், விவசாயி கள் மற்றும் பயணிகள் பெரும் சிரமங்களை எதிர்கொண்டே பயணிக்க வேண்டிய நிலை உள்ளது.

எனவே துறை சார்ந்த அதிகாரிகள் இதனை கருத்திற் கொண்டு உடன் நடவடிக்கை எடுத்து வீதியை புனரமைத்து போக்குவரத்துக்கு உதவ வேண்டுமென பயணிகளும் அப்பகுதி மக்களும் வேண்டுகோள் விடுத்துள்ளனர். (அ-ம-60)

# சந்தைகளில் நேற்றைய விலை விபரம்

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி | நெல்லியடி | சாவகச்சேரி | கிளிநொச்சி |
|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 60 | 60 | 40 | 40 |
| உருளைக்கிழங்கு | 100-160 | 100 | 80 | 100 |
| பச்சைமிளகாய் | 80 | 100 | 140 | 150 |
| தக்காளி | 150 | 120 | 140 | 140 |
| மரவள்ளிக்கிழங்கு | 50 | 60 | 40 | 40 |
| கோவா | 120 | 100 | 120 | 120 |
| கரட் | 70-80 | 100 | 120 | 160 |
| பூசணி | 40 | 40 | 50 | 40 |
| புடோல் | 60 | 40 | 60 | 40 |
| வாழைக்காய் | 50 | 70 | 50 | 60 |
| சின்ன வெங்காயம் | 170 | 240 | 130-200 | 200 |
| பெரிய வெங்காயம் | 100 | 120 | 90 | 120 |
| பாகற்காய் | 100 | 60 | 80 | 120 |
| வெண்டிக்காய் | 60 | 60 | 60 | 60 |
| கருணைக் கிழங்கு | 90 | 100 | 100 | — |
| பயற்றங்காய் | 40 | 80 | 60 | 80 |
| லீக்ஸ் | 120 | 120 | 140 | 140 |
| பீற்றூட் | 60 | 60 | 80 | 80 |
| கறிமிளகாய் | 80 | 100 | 140 | 160 |
| முருங்கைக்காய் | 160 | 120 | 200 | 160 |
| போஞ்சி | 110 | 120 | 160 | 140 |
| கத்தரிதம்புள்ள | — | 25 | — | — |
| கீரை - 1 பிடி | 20-30 | 10 | 20 | 20 |
| தேசிக்காய் | 80 | 100 | 80 | 80 |
| தேங்காய் (ஒன்று) | 40 | 45-60 | 30-40 | 30-40 |
| இராசவள்ளி | 90 | 100 | 120 | 120 |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எல்.ஓ.எல்.சி கம்பனியுடன் ஒன்றிணையும் செலான் வங்கி




செலான் வங்கியானது இலங்கை முழுவதிலுமுள்ள தனது பல்லாயிரக்கணக்கான வாடிக்கையாளர்களுக்கு பரந்த வகைகளிலான காப்புறுதி சேவைகளை வழங்கும் நோக்கில் அண்மையில் LOLC Insurance Co. நிறுவனத்துடன் ஒன்றிணைந்துள்ளது. உபாய ரீதியிலான இந்தக் கூட்டிணைவின் ஒரு அங்கமாக, LOLC இன்சூரன்ஸ் நிறுவனத்தைச் சேர்ந்த சேவை வழங்கும் பிரதிநிதி ஒருவரை செலான் வங்கி நாடெங்கும் இதற்கெனப் பொறுப்பாக நியமிக்கவுள்ளது. இந்நபர், செலான் வங்கி வாடிக்கையாளர்களின் காப்புறுதிசார் தேவைகளை கவனத்திலெடுத்து சேவையாற்றுவார்.

செலான் வங்கியின் பொது முகாமையாளரும் பிரதம நிறைவேற்று அதிகாரியுமான கபில ஆரியரத்ன கூறுகையில்,

LOLC நிறுவனத்துடன் கைகோர்ப்பதையிட்டு நாம் மிகுந்த மகிழ்ச்சியடைகின்றோம்.

அவர்கள் தமது வங்கியியல் மற்றும் காப்புறுதி தொடர்பான தேவைகள் அனைத்தையும் ஒரே கூரையின் கீழ் பெற்றுக்கொள்ளும் சௌகரியம் இப்போது அவர்களுக்கு கிடைக்கின்றது. அதன் மூலம், செலான் வங்கிக்கான அவர்களது விஜயமானது மேலும் வசதியானதாகவும் வெகுமதியளிப்பதாகவும் அமையவுள்ளது" என்றார்.

ஆயுள் மற்றும் பொதுக் காப்புறுதிகள் ஆகிய இரண்டிலும் வாடிக்கையாளர்களுக்கு பரந்தளவிலான விடயங்களை உள்ளடக்கிய காப்புறுதி காப்பீட்டை வழங்கும் வகையில் இச் சேவைகள் அனைத்தும் வடிவமைக்கப்பட்டுள்ளன.

LOLC குழும முகாமைத்துவப் பணிப்பாளரும் LOLC இன்சூரன்ஸ் கம்பனியின் தலைவருமான திரு. கபில ஜயவர்தன கூறுகையில், "செலான் வங்கியுடன் ஒன்றிணைந்து செயலாற்றுவதையிட்டும் அதேபோல, கூடுமானவரை அதிகமான இலங்கையர்களுடன் எமது சேவைகளின் சிறப்புத்துவத்தை பகிர்ந்து கொள்வது குறித்தும் நாம் மிகுந்த மகிழ்ச்சியடைகின்றோம். தொடர்ச்சியாக அதிகரித்துச் செல்கின்ற வாடிக்கையாளர் தளத்திற்கு நாடெங்கிலும் பரந்தளவிலான பிரசன்னத்துடன் ஒருங்கிணைந்ததாக செலான் வங்கி வழங்கும் இச்சேவை ஒரு இலகுவான பணி இலக்கு என்பதில் எவ்வித சந்தேகமும் இல்லை" என்றார்.

"இது செலான் வங்கியுடனான வங்கிக் காப்புறுதி சேவை வழங்கலில் ஒரு ஆரம்பம் மட்டுமே. இந்த சேவை பிரிவை நாம் விஸ்தரித்து வருகின்ற அதேவேளை, எமது வாடிக்கையாளர்களுக்கு தற்போது நாம் வழங்கி வரும் சௌகரியமிக்க சேவையை மேம்படுத்தும் நோக்கில் மிக விரைவில் மேலும் பல காப்புறுதிச் சேவைகளை விஸ்தரிக்கவுள்ளோம்" என்று ஆரியரத்ன அழுத்தமாகக் கூறினார்.

கொழும்பு பங்குச் சந்தையில் பட்டியலிடப்பட்டுள்ள செலான் வங்கியானது அண்மையில் தனது 25 வருட சேவையை பூர்த்தி செய்துள்ளது.

அதேவேளை, சமகால தொடர்பிணைப்பு வசதியைக் கொண்ட வலைப்பின்னலுடன் இணைக்கப்பட்டுள்ள 112 கிளைகள் மற்றும் 37 விரிவாக்கல் அலுவலகங்களை உள்ளடக்கிய செலான் வங்கியின் 149 சேவை நிலையங்களும் அதற்கு ஆதர வாக செயற்படுகின்ற 154 ATM நிலையங்களும் - இலங்கை முழுவதிலுமுள்ள பல்லாயிரக் கணக்கான திருப்திபெற்ற வாடிக்கையாளர்களுக்கு செலான் வங்கியின் செயலூக்கத்தையும் பரந்த வகைகளிலான உற்பத்திகள் மற்றும் சேவைகளையும் வழங்குவதில் முழு அளவில் தயார் நிலையில் உள்ளன எனவும் அவர்கள் தெரிவித்தனர்.

## வரி அதிகரிப்பு

இந்த வருடத்தின் முதல் நான்கு மாதங்களில் அத்தியாவசியப் பொருட்கள் மீதான வரித் தொகை 39 சதவீதமாக அதிகரிக்கப்பட்டுள்ளதாக ஐக்கிய தேசிய கட்சி குற்றம் சுமத்தியுள்ளது.

கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் ஹர்ச டி சில்வா இதனைத் தெரிவித்துள்ளார்.

அரசாங்கம் பொது மக்கள் மீதான வரித்தொகை பாரிய அளவில் அதிகரித்து வருகிறது.

இது மக்களின் வாழ்வாதாரத்தை சீர்குலைப்பதாக இருக்கிறது என்று அவர் தெரிவித்துள்ளார்.

## யூனில் பணவீக்கம் வீழ்ச்சி

தொகைமதிப்பு மற்றும் புள்ளி விபரத் திணைக்களத்தினால் கணிக்கப்பட்டவாறான கொழும்பு நுகர்வோர் விலைச்சுட்டெண்ணினால் (2006/07=100) அளவிடப்பட்டவாறான பணவீக்கம் ஆண்டிற்கு ஆண்டு அடிப்படையில் முன்னைய மாதத்தின் 7.3 சதவீதத்திலிருந்து 2013 யூனில் 6.8 சதவீதத்திற்கு வீழ்ச்சியடைந்துள்ளது. ஆண்டுச் சராசரி அடிப்படையில் பணவீக்க வீதமும் முன்னைய மாதத்தில் பதிவு செய்யப்பட்ட 8.8 சதவீதத்திலிருந்து 2013 யூனில் 8.6 சதவீதமாக வீழ்ச்சியடைந்துள்ளது.

ஆண்டிற்கு ஆண்டு அடிப்படை மற்றும் ஆண்டுச் சராசரி அடிப்படையிலான மையப் பணவீக்கம் 2013 மேயில் முறையே 5.7 சதவீதம் மற்றும் 6.6 சதவீதத்திலிருந்து 2013 யூனில் முறையே 4.3 சதவீதம் மற்றும் 6.4 சதவீதமாக வீழ்ச்சியடைந்துள்ளது.

உண்மை நியதிகளில் சுட்டெண் 2013 மேயின் 173.9 சதவீதத்திலிருந்து 176.5 சதவீதமாக அதிகரித்தமையின் காரணமாக 2013 யூனில் கொழும்பு நுகர்வோர் விலைச் சுட்டெண் முன்னைய மாதத்தினைவிட 1.5 சதவீதத்தினால் அதிகரித்துள்ளது.

சுட்டெண்ணில் ஏற்பட்ட மாதாந்த அதிகரிப்பிற்கு உணவு வகை மற்றும் வெறியமல்லாக் குடிபானங்களின் துணை வகைகளின் விலைகள் 3.2 சதவீதத்தால் அதிகரித்தமையே முக்கியமாகப் பங்களித்தது.


உணவு வகைகளிடையே அநேக வகைக் காய்கறிகள், உடன மீன், முட்டை, சிறிய வெங்காயம், பெரிய வெங்காயம், உருளைக் கிழங்கு, தேங்காய், பச்சை மிளகாய் மற்றும் எலுமிச்சம்பழம் என்பனவற்றின் விலைகள் இம்மாத காலப்பகுதியில் அதிகரித்தது. எவ்வாறெனினும், பல வகை பழங்களின் விலைகளில் ஒரு வீழ்ச்சி பதிவு செய்யப்பட்டது. உணவல்லா வகையினிடையே பொழுதுபோக்கு மற்றும் கலாசாரம் (0.5 சதவீதத்தினால்) தளபாடங்கள், வீட்டு உபயோகச் சாதனங்கள் மற்றும் வழமையான வீட்டு உபயோகப் பொருட்களின் பேணல் (0.4 சதவீதத்தினால்) சுகாதாரம் (0.1 சதவீதத்தினால்) மற்றும் பலவகைப் பொருட்கள் மற்றும் பணிகள் (0.1 சதவீதத்தினால்) ஆகிய துணைத் துறைகளின் விலைகள் சிறிதளவில் அதிகரித்தன. எனினும், இம்மாத காலப் பகுதியில் ஆடைகள் மற்றும் காலணி 0.5 சதவீதத்தினால் வீழ்ச்சியடைந்தது. அதேவேளை வீடமைப்பு, நீர், மின்வலு, வாயு மறறும் ஏனைய எரிபொருட்கள் போக்குவரத்து தொடர்பூட்டல் மற்றும் கல்வி ஆகிய துணை வகைகளின் விலைகள் மாற்றமடையாது காணப்பட்டன.




# ஜோன் கீல்ஸ் லாண்டின் — கட்டமைப்பு முன்கூட்டியே நிறைவு

ஜோன் கீல்ஸ் லாண்ட் நிறுவனமானது, தனது 'OnThree20' எனும் வானுயர்ந்த அடுக்குமாடி குடிமனைத் தொகுதியின் மிகவும் மேம்பட்ட கட்டமைப்புப் பணிகள் நிறைவடைவது தொடர்பில் அறிவித்துள்ளது.

இதன்படி, திட்டமிட்டிருந்ததை விடவும் முன்கூட்டியே இப் பணிகள நிறைவடைந்துள்ளன. 'கொழும்பு நகர மத்தியிலமைந்த ஒரு பாலைவனச்சோலை' என வர்ணிக்கப்படும் 'OnThree20' ஆனது, ஜோன் கீல்ஸ் குழுமத்தின் சொத்து தொடர்பான வணிகப் பிரிவாக திகழும் ஜோன் கீல்ஸ் லாண்ட் நிறுவனத்தின் மனநிறைவைத் தருகின்ற மற்றுமொரு நவீன குடியிருப்புத் தொகுதி அபிவிருத்தித் திட்டமாகும்.



பரபரப்பான தலைநகரும் வர்த்தக மாவட்டமுமான கொழும்பின் மையப் பகுதியாகவுள்ள யூனியன் பிளேஸில் உபாய ரீதியாக அமைக்கப்பட்டுள்ள 'OnThree20' அடுக்குமாடித் தொகுதியானது 475 குடியிருப்புக்களை உள்ளடக்கிய ஒவ்வொன்றும் 37 மாடிகளைக் கொண்ட 3 கோபுரங்களைக் கொண்டுள்ளது.

தற்போது இங்குள்ள 80 வீதமான குடிமனைகள் விற்பனை செய்யப்பட்டுள்ளது.

இங்குள்ள குறிப்பிடத்தக்க சிறப்பம்சங்கள் மற்றும் வசதிகளுள் - விசாலமான இயற்கை தோற்றமுள்ள பூந்தோட்டம், ஒரு வணிக நிலையம், ஒரு நடை பாதை, ஒரு மிகவும் முன்னேற்றகரமான உடற்பயிற்சி மையம், ஒரு நீராவி பிடிக்கும் அறை, ஒரு ஸ்குவாஷ் விளையாட்டுத் தளம், ஒரு உள்ளக விளையாட்டு அறை, ஒரு பெரிய கழக இல்லம், செழிப்பான பசுமைக்கு மத்தியலமைந்த மூன்று நீச்சல் தடாகங்கள் மற்றும் பல வசதிகள் உள்ளடங்குகின்றன.

OnThree20' அடுக்குமாடித் தொகுதியின் உருவாக்குனரான ஜோன் கீல்ஸ் லாண்ட் (John Keells Land) நிறுவனம், மிகப் புகழ்பெற்ற கூட்டு நிறுவனமான ஜோன் கீல்ஸ் ஹோல்டிங்ஸின் ஒரு உப நிறுவனமாகும்

இலங்கையில் பங்குச் சந்தையில் பட்டியலிடப்பட்ட மிகப் பெரிய கூட்டு நிறுவனமாக ஜோன் கீல்ஸ் ஹோல்டிங்ஸ் திகழ்கின்றமை குறிப்பிடத்தக்கது.

## பங்குச் சந்தை விபரம்

(வார இறுதியில்)

| துறை | கடந்த வாரம் | இந்த வாரம் |
|---|---|---|
| அனைத்துப் பங்கு விலைச்சுட்டி | 6,048.18 | 6,028.74 ⇩ |
| எஸ் & பி 20 சுட்டி | 3,383.46 | 3,385.43 ⇧ |

விலை அசைவுகளின் அடிப்படையில் | புரள்வு (ரூபா.மில்.) 1,466.585

[illegible] எஸ்எம்பி லீசிங்(0.40), ரச்ஷூட் (4.30), ரன்ஹிரின்(60.00), ஹெல்ஷே (22.70), கொமர்ஷியல் டெவலப்.(68.60)

[illegible] பிசி பார்மா (2.00), பிசிஹவுஸ் ஹோல்டிங்(1.60), யூனியன் கெமிக்கல்(428.50), சிஐஎப்எல்(1.40), அஸ்ஹோட் ஹோல்டிங்(130.50).

மேலதிக தகவல்கள்: www.cse.lk

## தங்க அனுசரணையாளராக ஜனசக்தி




இலங்கையின் முன்னணி காப்புறுதி நிறுவனமான ஜனசக்தி, இலங்கை வர்த்தக சபை (FCCISL) நடத்தும் Sri Lankan Entrepreneur of the Year 2013 நிகழ்வின் தங்க அனுசரணையாளராக இணைந்துள்ளது.

இவ் விருது வழங்கும் நிகழ்வில் உள்நாட்டு வியாபார பிரமுகர்களிடையே காணப்படும் 'முயற்சியாண்மை மனப்பாங்கு' அடையாளப்படுத்தப்படுகிறது. எதிர்வரும் நவம்பர் மாதம் 28-ம் திகதி நடைபெறவுள்ள இவ் விருதுகள் வழங்கும் நிகழ்வின் தொனிப்பொருளாக 'உங்கள் விடாமுயற்சியே தேசத்தின் இயக்கம்' அமைந்துள்ளது.

## வெளிநாட்டு நாணயமாற்று வீதம்

(வார இறுதியில்)

| நாணயம் | கொ/வு விலை ரூபா. | வி/னை விலை ரூபா. |
|---|---|---|
| ஐக்கிய அமெரிக்க டொலர் | 129.37 | 132.57 |
| பவுண்ட்(ஐக்கிய இராச்சியம்) | 195.85 | 201.62 |
| யூரோ (ஐரோ.ஒன்றியம்) | 168.47 | 174.13 |
| சுவிஸ் பிராங் | 135.62 | 140.89 |
| கனேடிய டொலர் | 124.00 | 128.53 |
| அவுஸ்திரேலிய டொலர் | 117.78 | 122.38 |
| சிங்கப்பூர் டொலர் | 102.06 | 105.65 |
| ஜப்பான் யென் | 1.29 | 1.34 |
| இந்திய ரூபாய் | சுட்டி விலை 2.18 | |
| ஐக்.அரபு இராச்சிய டிராம் | சுட்டி விலை 35.56 | |

மூலம்: இலங்கை மத்திய வங்கி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சட்டங்கள் அதிகரிக்கும் போதே மோசடிகளும் அதிகரிக்கின்றன

(கொழும்பு)

சட்டங்கள் அதிகரிக்கும் போதே மோசடிகளும் அதிகரிக்கின்றன. அரச நிறுவனங்களின் செயற்பாடுகள் மக்களை கஷ்டப்படுத்துவதாகவும் வீண் அலைச்சலுக்கு உட்படுத்துவதாகவும் அமையக் கூடாது என ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ தெரிவித்தார்.

சுற்றாடல் மற்றும் புதுப்பிக்கத்தக்க சக்தித்துறை அமைச்சின் செயற்பாட்டு மீளாய்வுக் கூட்டம் நேற்று முன்தினம் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ தலைமையில் அமைச்சின் கேட்போர் கூடத்தில் நடைபெற்றது.

அங்கு அவர் தொடர்ந்து உரையாற்றுகையில்,

மக்களுக்கு அசௌகரியம் ஏற்படாத வகையில் அரச நிறுவனங்களின் செயற்பாடுகள் அமைய வேண்டும் எனத் தெரிவித்தார்.

நாட்டின் வனப் பிரதேசத்தில் 48 ஆயிரம் ஹெக்டேயர்கள் தற்போது குறைவடைந்துள்ளதாக சுட்டிக்காட்டிய ஜனாதிபதி சூழலைப் பாதுகாத்து அடுத்த தலைமுறைக்கு சுபீட்சமான எதிர்காலத்தைப் பெற்றுக் கொடுக்க அனைவரும் அர்ப்பணிப்புடன் செயற்பட வேண்டுமெனவும் அவர் குறிப்பிட்டார்.



வனப்பாதுகாப்பு, சுற்றாடல் பாதுகாப்பு, நீர்ப்பாசன திட்டங்கள் மற்றும் நீரூற்றுக்கள் மாணிக்கக் கற்கள் துறை, கனிப்பொருட்கள் மற்றும் மணல் அகழ்தல், யானை- மனிதர்களுக்கிடையில் இடம்பெறும் மோதல்கள் உள்ளிட்ட பல்வேறு விடயங்கள் இந்நிகழ்வில் கலந்துரையாடலுக்கு எடுத்துக் கொள்ளப்பட்டன.

எதிர்வரும் 2020 ஆம் ஆண்டிற்குள் வனப் பிரதேசத்தை 100 இற்கு 35 வீதத்தால் அதிகரிக்கும் திட்டத்தை அமைச்சர் சுசில் பிரேமஜயந்த ஜனாதிபதியிடம் தெளிவுபடுத்தினார்.

வீதிகளை நிர்மாணிக்கும் போதும் நீர்ப்பாசனத்திட்டங்களை மேற்கொள்ளும் போதும் சுற்றாடலைக் கருத்திற் கொண்டே திட்டங்களை செயற்படுத்த வேண்டும் எனவும் ஜனாதிபதி தெரிவித்தார்.

நாட்டில் வருடாவருடம் பல இலட்சக் கணக்கில் மரங்கள் நடப்படுகின்றன. எனினும் அவை முறையாகப் பராமரிக்கப்படுவதில்லை. மரங்கள் நடப்படுவது மட்டுமன்றி அவைகளைப் பராமரிக்கவும் விசேட திட்டமொன்று செயற்படுத்தப்பட வேண்டுமென தெரிவித்தார்.

சில நிறுவனங்கள், நிறுவனங்களுக்கிடையிலேயே பேசித்தீர்க்கக் கூடிய விடயங்களை நீதிமன்றம் வரை கொண்டு செல்கின்றன.

அனைத்தையும் நீதிமன்றத்துக்கு கொண்டு சென்று நீதிமன்றத்தின் நடவடிக்கைகளை அதிகரிக்க இடமளிக்கக்கூடாது. நீதிமன்றம், பாராளுமன்றம் மற்றும் நிறுவனங்களுக்கு உள்ள அதிகாரங்கள் தொடர்பில் அதிகாரிகள் தெளிவு பெற வேண்டியுள்ளதெனவும் ஜனாதிபதி தெரிவித்தார்.(அ-2)


## மனதார பாராட்டி வாழ்த்துகின்றேன்





02.06.2013 அன்று சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர் நியமனம் பெற்றுத் தந்த யாழ். மாவட்ட ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி அமைப்பாளர் திரு. அங்கஜன் இராமநாதன் அவர்களுக்கும் மற்றும் இணைப்பாளர் உதயசீலன் அவர்களுக்கும் எனது நன்றிகளையும் பாராட்டுக்களையும் தெரிவிப்பதோடு உங்கள் சேவை மென்மேலும் தொடர வேண்டும் என எல்லாம் வல்ல இறைவனைப் பிரார்த்திக்கின்றேன்.

வாழ்த்துபவர்:

புதிதாக சமுர்த்தி நியமனம் பெற்ற உத்தியோகத்தர்

த.சுஜீவன், கிளாலி வீதி, எழுதுமட்டுவாழ்.

(3362)



## நன்றித்தாழ் பணிகின்றோம் ஏற்றிடுக!!
## எங்கள் சாணக்கிய அரசியல் தந்தையே!



பாரம்பரிய கைத்தொழில்கள் மற்றும்
சிறுதொழில் முயற்சி அபிவிருத்தி
அமைச்சர் கௌரவ
கே.என்.டக்ளஸ் தேவானந்தா அவர்கள்



ஈழமக்கள் ஜனநாயகக் கட்சி
யாழ். மாவட்ட அமைப்பாளர்
திரு. கந்தசாமி கமலேந்திரன்



ஈழமக்கள் ஜனநாயகக்கட்சியின் வடமராட்சி
அமைப்பாளரும் பருத்தித்துறை பிரதேச சபை
எதிர்க்கட்சித்தலைவரும்
திரு. ஜயாத்துரை ஸ்ரீரங்கேஸ்வரன்



யாழ். மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர்
சில்வேஸ்திரி அலென்ரின் (உதயன்)

வித்துவ அரசியலின் சத்தியரே! அவர் விழிகளாய் நிற்கும் தோழர்களே! எங்கள்
பெரு நன்றிக்குரிய நாயகர்களே! தங்கள் நன்றித்தாழ் பணிகின்றோம் ஏற்றிடுக!
இணைந்து நடக்கும்- இங்கிதங்களே! இரண்டறக் கலக்காத தனித்துவங்களே!
இருப்பதை தக்க வைக்கும் தங்கங்களே! மேலும் இழப்பதை தடுத்து நிற்கும் இமயங்களே!
வளங்களை பெற்றுத் தரும் வள்ளல்களே! மனம் நிறைய வாழ்த்துகின்றோம்!
நன்றி ஐயா!

உங்களால் ஏற்றம் பெற்று நிரந்தர நியமனம் பெற்ற சுகாதார தொண்டர்கள்,
நிரந்தர நியமனம் பெற்ற கல்விசாரா சிற்றூழியர்கள்,
வடமராட்சி கிழக்கு.

(சி/4001)



இவர்களுக்கு மணமகள் தேவை | கல்யாண மாலை | இவர்களுக்கு மணமகன் தேவை

| மணமகள் தேவை | மணமகன் தேவை |
| --- | --- |
| பிறப்பு: 1980 இந்து(V)<br>நட்சத்திரம்: உத்தரம் 3<br>உயரம்: 5' 8"<br>செ 7<br>தகைமை/தொழில்: A/L,<br>நிளஅளவையாளர்<br>தொ.இ:B2015 | பிறப்பு: 1987 இந்து(V)<br>நட்சத்திரம்: மகம்<br>கி.பா : 34.75<br>தகைமை/தொழில்: O/L<br>கணனி அச்சகதட்டெழுத்தாளர்<br>தொ.இ: G2020 |
| பிறப்பு: 1983 இந்து(V)<br>நட்சத்திரம்: சுவாதி 4<br>சூ,செ 1<br>உயரம்: 5' 6"<br>தகைமை/தொழில்:<br>பொறியியலாளர் (சவுதி)<br>தொ.இ:B2017 | பிறப்பு: 1978 இந்து(V)<br>நட்சத்திரம்: கேட்டை 2<br>உயரம்: 5' 2"<br>கி.பா : 10.5 செ 2<br>தகைமை/தொழில்:<br>கல்வியல்கல்லூரி<br>ஆசிரியை (சைவபோசனம்)<br>தொ.இ:G2024 |
| பிறப்பு: 1983 இந்து (V)<br>நட்சத்திரம்: அத்தம் 1<br>உயரம்: 5' 10"<br>கி.பா : 41.5 சூ.செ 8<br>தகைமை/தொழில்: BA<br>ஆசிரியர்<br>தொ.இ:B2021 | பிறப்பு: 1982 இந்து(V)<br>நட்சத்திரம்: விசாகம் 1<br>கி.பா : 13.75<br>உயரம்: 5' 3" செ 4<br>தகைமை/தொழில்: BSc பட்டதாரி<br>நிகழ்ச்சி திட்ட உதவியாளர்<br>தொ.இ:G2027 |
| பிறப்பு: 1981 இந்து (Viswakula)<br>நட்சத்திரம்: ஆயிலியம் 2<br>கி.பா : 28 செ 12<br>தகைமை/தொழில்: O/L<br>மின் இணைப்பாளர்<br>தொ.இ:B2022 | பிறப்பு: 1978 இந்து(V)<br>நட்சத்திரம்: பூரம் 3<br>கி.பா : 62<br>தகைமை/தொழில்: A/L<br>பிரான்ஸ் (Not visa)<br>தொ.இ: G2031 |

சகல தொடர்புகளுக்கும்:-
கல்யாண மாலை
(சர்வதேச இலவச திருமண சேவை)
இல. 144, பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்
தொடர்பு:- 021 720 1005
E-mail:- kalyanamalai.jaffna@gmail.com
குறிப்பு: எமது காரியாலயம் காலை 9.00 - 5.00 மணிவரை திறக்கப்படும்.
( ஒவ்வொரு செவ்வாய்க்கிழமையும் கல்யாணமாலை விடுமுறை தினம் என்பதனையும் அறியத்தருகின்றோம் )
ஊடக அனுசரணை வலம்புரி


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தீவக பிரதேசத்தில் நடமாடும் கண்சிகிச்சை


(யாழ்ப்பாணம்)

விஷன் 2020 திட்டத்தின் அனுசரணையுடன் தீவகப் பிரதேச வைத்தியசாலைகளில் கண் வைத்திய நிபுணர்கள் கொண்ட குழுவினரால் நடமாடும் கண்சிகிச்சை நடத்தப்படவுள்ளது.

இதற்கமைய நாளை செவ்வாய்க்கிழமை காலை 8 மணிக்கு ஊர்காவற்றுறை ஆதார வைத்தியசாலை,17 ஆம் திகதி காலை 8 மணிக்கு வேலணை பிரதேச வைத்திய சாலை, பிற்பகல் 2 மணிக்கு புங்குடுதீவு பிரதேச வைத்தியசாலை,18 ஆம் திகதி வியாழக்கிழமை காலை 8 மணிக்கு நயினாதீவு பிரதேச வைத்தியசாலை, பிற்பகல் 2 மணிக்கு அனலைதீவு பிரதேச வைத்தியசாலை, 19 ஆம் திகதி காலை 8 மணிக்கு காரைநகர் பிரதேச வைத்தியசாலை ஆகிய இடங்களில் இச் சேவை இடம் பெறவுள்ளன.

எனவே, பொதுமக்கள் இச் சேவையை பெற்று பயனடையலாம் என சுகாதார சேவைகள் பணிமனை பிராந்தியப் பணிப்பாளர் ஆ.கேதீஸ்வரன் அறிவித்துள்ளார். (அ)



நன்றி:- மிரர்

# நாகர்கோவில் மக்கள் ஒன்றியத்தின் ஏற்பாட்டில் அபிவிருத்தி நடவடிக்கை

(யாழ்ப்பாணம்)

**உயர் பாதுகாப்பு வலயமாக கடந்த பல வருடங்களாக இருந்த வடமராட்சி கிழக்கு நாகர்கோவில் பகுதியை கடந்த 2011 ஆம் ஆண்டு கிராம மக்களை பார்வையிட இராணுவம் அனுமதித்தது.**

யுத்த அழிவுகளுடன் காணப்பட்ட நாகர்கோவில் பகுதியை அபிவிருத்தி செய்துவந்த நாகர்கோவில் மக்கள் ஒன்றியம், தற்போது அங்கு வசிக்கும் மக்களுக்காக பல்வேறு அடிப்படை வசதிகளை செய்துவருகின்றது.

அவ்வரிசையில், மாணவர்களுக்கான இலவச மாலைநேர வகுப்புக்கள், இலவச மருத்துவமனை, இலவச கணனி வகுப்புக்கள் ஆகிய மூன்று சேவைகளையும் புலம்பெயர் மக்கள் மற்றும் நலன் விரும்பிகளின் உதவியுடன் செய்து நேற்றைய தினம் வைபவ ரீதியாக ஊர்மக்கள் முன்னிலையில் மக்கள் ஒன்றியம் திறந்து வைத்துள்ளது.

மேலும் இவ் இலவச சேவை நிலையங்களைத் திறந்து வைக்கும் நிகழ்வுக்கு யாழ். மாகாண கல்வி அதிகாரி உட்பட மற்றும் யாழ். அரசியல் வாதிகள், ஓய்வு பெற்ற வைத்திய அதிகாரிகள், அரச , அரச சார்பற்ற தொண்டு நிறுவனங்களும் இன்னும் பலர் கலந்து கொண்டுள்ளனர் என நாகர்கோவில் மக்கள் ஒன்றியம் தெரிவித்துள்ளது.

இந்நிகழ்வில் மாணவர்களின் பேச்சுப் போட்டிகளும் மற்றும் கலை நிகழ்வுகளும் நடைபெற்றன.

போட்டிகளில் வெற்றி பெற்ற மாணவர்களுக்கு பரிசில்களும், மேலும் மாணவர்கள் அனைவருக்கும் இலவச கற்றல் உபகரணங்களும் வழங்கப்பட்டதாக மக்கள் ஒன்றியம் தெரிவித்துள்ளது.

இலவச மருத்துவமனைக்கு நெல்லியடி கிளை லயன்ஸ் கழகத்தினால் ஒரு தொகை மருந்து வகைகள் இலவசமாக வழங்கப் பட்டமையும் குறிப்பிடத்தக்கது. (அ-2)

# மோ.சைக்கள் களவாடப்பட்ட விவகாரம்; வழக்கு ஒத்திவைப்பு

வடமராட்சி மாலுசந்தியில் கடந்த வருடம் களவாடப்பட்ட TVS மோட்டார் சைக்கிளுடன் தொடர்பான வழக்கை மறுதவணைக்கு ஒத்தி வைக்குமாறு நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.


மாலுசந்தி மைக்கல் விளையாட்டுக்கழக மைதானத்தில் கடந்த வருடம் ஒகஸ்ட் மாதம் 26 ஆம் திகதி நடைபெற்ற உதைபந்தாட்ட இறுதிப் போட்டியை பார்வையிட வந்த இமையாணன் கிழக்கு பகுதியை சேர்ந்த இளைஞர் ஒருவரின் மோட்டார் சைக்கிள் களவாடப்பட்டிருந்தது.


இதனையடுத்து, உரும்பிராய் பகுதியை சேர்ந்த இளைஞர் ஒருவரின் வீட்டில் இருந்து மோட்டார் சைக்கிள் மீட்கப்பட்டதுடன் களவாடிய இளைஞரும் நெல்லியடி பொலிஸாரால் கைது செய்யப்பட்டார். பின்னர் பருத்தித்துறை நீதிமன்றினால் குறித்த இளைஞர் விளக்கமறியலில் வைக்கப்பட்டிருந்தார்.

இவ் வழக்கு விசாரணை கடந்த வெள்ளிக்கிழமை பருத்தித்துறை நீதவான் நீதிமன்ற நீதவான் திருமதி ஸ்ரீநிதி நந்தசேகரம் முன்னிலையில் மீண்டும் விசாரணைக்காக எடுத்துக் கொள்ளப்பட்டது. இதன் போது மன்றில் ஆஜரான சந்தேகநபர் மன்றில் சுற்றவாளி என தெரிவித்ததையடுத்து, இவ்வழக்கை மறு தவணைக்கு நீதவான் ஒத்திவைத்தார். (அ-ம-24)









புங்குடுதீவு மான்மியம் நூல் வெளியீட்டு விழாவில் வடக்கு மாகாண ஆளுநரின் செயலாளர் வாழ்த்துரை வழங்குவதையும் வாழ்நாள் பேராசிரியர் பொ.பாலசுந்தரம்பிள்ளை ஆய்வுரை வழங்குவதையும், புங்குதீவு மான்மியம் நூலினை வாழ்நாள் பேராசிரியர் பொ.பாலசுந்தரம் வெளியிட்டு வைக்க, தொழிலதிபர் குருநாதசிவம் பெற்றுக் கொள்வதையும் நிகழ்வில் கலந்து கொண்ட பிரமுகர்களையும் படங்களில் காணலாம்.

(படங்கள்:-என்.குமார்)

# திடீர் விபத்து நிதிக்கு விண்ணப்பிக்கலாம்

(கரணவாய்)

கரவெட்டி பிரதேசத்தில் வறுமைக் கோட்டிக்கு உட்பட்ட குடும்பங்களில் 18 வயதுக்கு உட்பட்டவர்களுக்கு திடீர் விபத்து ஏற்படுகின்ற போது திடீர் விபத்து நிதியுதவியை பெற்றுக் கொள்ள விண்ணப்பிக்க முடியும் என கரவெட்டி பிரதேச செயலக சமூக சேவைகள் பிரிவு அறிவித்துள்ளது.

திடீர் விபத்து ஏற்படுகின்ற போது விண்ணப்பித்தால் ஒரு இலட்சத்து 50 ஆயிரம் ரூபா பெற்றுக் கொள்ள முடியும் எனவும் ஒரு குடும்பத்திற்கு ஒரு தடவை மட்டுமே இந்நிதி கிடைக்குமெனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ம-60)

# விளம்பரப் பலகை உடைப்பு

(கரணவாய்)

கரணவாய் ஜே/350 கிராம சேவையாளர் அலுவலகத்திற்கு முன்பாக தேர்தல் திணைக்களத்தில் வழங்கப்பட்ட வாக்கு உங்கள் உரிமை என்ற விளம்பரப்பலகையை இனந்தெரியாதோர் எடுத்துச் சென்று சேதமாக்கியுள்ளனர்.

இச்சம்பவம் கடந்த புதன்கிழமை இடம் பெற்றுள்ளது.

மேற்படி விளம்பரப் பலகை சேதமாக்கப்பட்டு காணியொன்றினுள் போடப்பட்டுள்ளமை சுட்டிக்காட்டத்தக்கது. (அ-9-60)

# வருடாந்த பெருவிழா

(யாழ்ப்பாணம்)

அல்லைப்பிட்டி புனித கார்மேல் அன்னை ஆலய வருடாந்த பெருவிழா நாளை செவ்வாய்க்கிழமை கொண்டாடப் படவுள்ளது.

இதன்படி இன்று திங்கட்கிழமை மாலை 5 மணிக்கு நற்கருணைப் பெருவிழாவும் மறுநாள் செவ்வாய்க்கிழமை காலை 6.30 மணிக்கு திருநாள் கூட்டுத் திருப்பலியும் ஒப்புக் கொடுக்கப்படவுள்ளது.

யாழ். ஆயர் அதிவணக்கத்துக்குரிய தோமஸ் சவுந்தர நாயகம் ஆண்டகை தலைமையில் கூட்டுத் திருப்பலியும் அதனைத் தொடர்ந்து அன்னையின் திருச்சொரூபப் பவனியும் ஆசீர்வாதமும் இடம்பெறுமென பங்குத் தந்தை அறிவித்துள்ளார். (அ-2)

# சிங்கர் பிளஸ் கிளை திறப்பு விழா

(யாழ்ப்பாணம்)

சிங்கர் பிளஸ் காட்சியறை தனது புதிய கிளை ஒன்றை இன்று காலை 9.30 மணிக்கு இல-01, ஸ்ரான்லி, வீதி யாழ்ப்பாணம் எனும் முகவரியில் திறந்து வைக்கவுள்ளது. (அ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


# அதிகார பகிர்வு விடயம் இலங்கைக்கு பொருந்தாது

## மேனனிடம் கூறினாராம் கோத்தபாய ராஜபக்ஷ



(கொழும்பு)

**13 ஆவது அரசியல் அமைப்புக்குள் வருகின்ற பொலிஸ் அதிகாரங்களை பகிரல் விடயம் இலங்கைக்கு பொருத்தமானதல்ல. எனவே, அது தொடர்பில் இணக்கப் பேச்சுக்களுக்கு இடமில்லை என்று இலங்கையின் பாதுகாப்பு செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷ இந்தியாவிடம் தெரிவித்துள்ளதாக ஆங்கில ஊடகம் ஒன்று செய்தி வெளியிட்டுள்ளது.**



இலங்கைக்கு அண்மையில் விஜயம் செய்திருந்த இந்திய பாதுகாப்பு ஆலோசகர் சிவ்சங்கர் மேனனிடம் கோத்தபாய இந்தக் கருத்தை குறிப்பிட்டுள்ளார்.

பாதுகாப்புச் செயலாளர் கோத்தபாயவுக்கும் மேனனுக்கும் தனியே இடம்பெற்ற பேச்சுவார்த்தையின் போதே இந்தக் கருத்து வெளிப்படுத்தப்பட்டுள்ளது. பொலிஸ் அதிகாரங்களைப் பகிர்வதன் காரணமாக தமிழ்த் தரப்புக்கு எவ்வித பயனும் ஏற்படப் போவதில்லை என்று கோத்தபாய சுட்டிக்காட்டினார்.

இதற்கு பதில் வழங்கிய மேனன் இந்த விடயம் தொடர்பில் தனியான பொறிமுறை ஒன்று குறித்து ஆராயப்படும் என்று தெரிவித்துள்ளார்.

இதேவேளை இந்தச் சந்திப்பு இருவருக்கும் இடையில் நடத்தப்பட்ட சந்திப்பு என்பதால் இரண்டு தரப்பிலும் அறிக்கைகள் எவையும் வெளியிடப்படவில்லை என்று அவ்வூடகம் குறிப்பிட்டுள்ளது.

இதேவேளை கடந்த 8 ஆம் திகதி இலங்கைக்கு வருகைதந்த இந்திய பாதுகாப்பு ஆலோசகர் சிவ்சங்கர் மேனன், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு, ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ, முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் ஹக்கீம் உள்ளிட்ட பலரை சந்தித்திருந்தார்.

இந்தச் சந்திப்புக்களில் ஜனாதிபதியை சந்திக்கும் போது, இலங்கை- இந்தியாவுக்கு அளித்த வாக்குறுதியை காப்பாற்ற வேண்டும் என வலியுறுத்தினர்.

மேலும் வடக்கு மாகாண தேர்தல் நம்பகமாகவும் நியாயமாகவும் சுதந்திரமாகவும் நடத்த வேண்டும் என கேட்டுக் கொண்டார்.

தமிழர்கள் உட்பட இலங்கையின் அனைத்து சமூகத்தவர்களும் சமத்துவமும் நீதியும் சுயமரியாதையும் பெற்று வாழ்வதை உறுதிப்படுத்தக் கூடிய அரசியல் தீர்வை வழங்குமாறு அவர் கோரியிருந்தமை குறிப்பிடத்தக்கது. (அ-2)

# இலங்கையை எதிர்த்த நாடுகளை தேர்தல் கண்காணிப்புக்கு அழைக்கத் தடை

## தேர்தல் ஆணையாளர் தெரிவிப்பு

(கொழும்பு)

வடமாகாண சபைத் தேர்தல் கண்காணிப்புப் பணிகளில் ஐ.நா.மனித உரிமைகள் பேரவையில் இலங்கைக்கு எதிராக வாக்களித்த நாடுகளின் பிரதிநிதிகளை அழைக்கக்கூடாது என கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

தேர்தல் ஆணையாளர் மகிந்த தேசப் பிரியவிடம் இக்கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. எனினும் அக்கோரிக்கை எங்கிருந்து விடுக்கப்பட்டது என அவர் குறிப்பிடவில்லை.

அரசியல் கட்சிகளின் செயலாளர்களுடனான சந்திப்பின் போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

இவ்விடயம் தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்,

தேர்தல் கண்காணிப்புப் பணிகளில் தெற்காசிய தேர்தல் முகாமைத்துவ சபை, ஆசியான் தேர்தல் கண்காணிப்பு அதிகார சபை ஆகியன அழைக்கப்படும்.

அதேவேளை பவ்ரல், கபே உள்ளிட்ட ஐந்து உள்ளூர் தேர்தல் கண்காணிப்புக் குழுக்களும் இந்தத் தேர்தல் கண்காணிப்பில் ஈடுபடவுள்ளன.

தேர்தலுக்கு முன்னரே தேர்தல் கண்காணிப்பாளர்கள் இலங்கைக்கு வருவர். வேட்பு மனுக்கள் சமர்ப்பிக்கப்படுவதில் இருந்து வெளிநாட்டுக் கண்காணிப்பாளர்களை ஈடுபடுத்த தேர்தல் திணைக்களத்திடம் போதிய நிதி இல்லை.

தேர்தல் இடம்பெறும் மாகாணங்களில் எட்டு பிரதேசங்களை பதற்றமான- பாதுகாப்பு அதிகரிக்கப்பட வேண்டிய பிரதேசங்களாக இலங்கை தேர்தல் திணைக்களம் அடையாளம் கண்டுள்ளது. அவற்றில் வடக்கு, நாவலப்பிட்டி ஹங்குராங்கெத்த, லக்கல, ஆனமடுவ, புத்தளம், குருநாகல, நிக்கவரெட்டிய ஆகிய பிரதேசங்கள் அடங்கும்.

தேர்தல் பணிகளில் இராணுவத்தினர் ஈடுபடுத்தப்படமாட்டார்கள் என்றும் அவர் மேலும் தெரிவித்தார். (அ-2)

# பேருந்துகள் பயணிகளுடன் எரிபொருள் நிரப்ப தடை

(கொழும்பு)

பயணிகளை ஏற்றுவதற்கு முன்னர் தேவையான எரிபொருளை நிரப்பிய பின்னரே பேருந்துகளை பேருந்து நிலையத்துக்கு கொண்டு வர வேண்டும். பயணிகளை ஏற்றிக் கொண்டு செல்லும் வழியில் எரிபொருள் நிரப்புபவர்களுக்கு எதிராக ஒழுக்காற்று நடவடிக்கை எடுக்கப்படும்.

இவ்வாறு போக்குவரத்து அதிகார சபையின் தலைவர் அமில ரண்மண்டல தெரிவித்தார்.

டீசலை நிரப்பி ரேடியேட்டர்களுக்கு தேவையான தண்ணீரை நிரப்பி வாகனத்தின் நிலை குறித்து உறுதிப்படுத்திய பின்னரே தனியார் பேருந்துகள் சேவையை ஆரம்பிக்க வேண்டும் என்று மேல் மாகாண தனியார் பேருந்து போக்குவரத்து அதிகார சபையின் தலைவர் தெரிவித்தார்.

பயணிகளை ஏற்றிக் கொண்டு பயணிக்கும் போது எரிபொருள் நிரப்பு நிலையங்களில் வாகனத்தை நிறுத்தி எரிபொருளை நிரப்புவதன் மூலம் பயணிகளை அசௌகரியப் படுத்தக் கூடாது என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

ஒரு தனியார் பேருந்து சேவை ஆரம்பிப்பதற்கு முன்னர் அங்குள்ள நேர கண்காணிப்பாளர் அந்தப் பேருந்தில் எரிபொருள் இருக்கின்றதா, ரேடியேட்டருக்கு நீர் நிரப்பப்பட்டுள்ளதா, டயர்கள் சிறந்த நிலையில் உள்ளனவா என்று பரீட்சித்த பின்னரே பேருந்துகள் அங்கிருந்து புறப்பட நடவடிக்கை எடுக்க வேண்டும்.

இந்த விதிமுறைகளை மீறுபவர்களுக்கு எதிராக கடும் ஒழுக்காற்று நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் அவர் எச்சரிக்கை செய்தார். (அ-2)

# வத்தளையில் விபத்து; இருவர் உயிரிழப்பு

(வத்தளை)

வத்தளை பிரதேசத்தில் இடம்பெற்ற வீதி விபத்தில் இருவர் உயிரிழந்துள்ளனர்.

இவ்விபத்துச் சம்பவம் நேற்று காலை நீர்கொழும்பு- கொழும்பு பிரதான வீதியில் இடம் பெற்றுள்ளது.

மோட்டார் வண்டி ஒன்றும் வான் ஒன்றும் மோதுண்டதில் இவ் விபத்து நேர்ந்துள்ளதாகப் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

வத்தளையைச் சேர்ந்த 23 மற்றும் 30 வயதானவர்களே இதன் போது மரணமடைந்துள்ளனர். இவர்கள் ராகம வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டிருந்த நிலையிலேயே மரணமடைந்தனர். (அ-2)

# கொக்குவில் இந்துவின் பரிசளிப்பு விழா இன்று

(யாழ்ப்பாணம்)

கொக்குவில் இந்துக் கல்லூரியின் வருடாந்த பரிசளிப்பு விழா இன்று காலை 9 மணிக்கு பஞ்சலிங்கம் மண்டபத்தில் பாடசாலை அதிபர் வே. ஞானகாந்தன் தலைமையில் நடைபெறவுள்ளது.

இந் நிகழ்விற்கு பிரதம விருந்தினராக மருத்துவ அலுவலகர் வைத்தியர் நல்லதம்பி அரவிந்தன், சிறப்பு விருந்தினராக பாடசாலையின் பழைய மாணவரும் மங்களா காட்சியறை உரிமையாளருமான குமாரசாமி ஜெயந்தன் ஆகியோர் கலந்து கொண்டு சிறப்பிக்கவுள்ளனர். பரிசில்களை திருமதி சுபாசினி அரவிந்தன் வழங்கி வைப்பார். (அ)

# விநாயக புராணம் இசை பேருரை

கொக்குவில் மேற்கு அருள்மிகு ஸ்ரீ சித்தி விநாயகர் ஆலய வருடாந்த மஹோற்சவம் கடந்த 12 ஆம் திகதி ஆரம்பமாகி தொடர்ச்சியாக 11 நாட்கள் நடைபெற்று வருகின்றது.

இத் திருவிழாக்காலங்களில் தினமும் இரவு 8 மணிக்கு நல்லைக் குருமணியின் பிரதம வாரிசு கானகதா வாரிதி பிரம்மஸ்ரீ சிவ.வை. நித்தியானந்த சர்மாவின் **விநாயக புராணம்** எனும் தலைப்பில் தெய்வீகத் தொடர் இசைப் பேருரை இடம்பெறும். (அ)

# 3 மாகாண சபைகளிலும் ஜே.வி.பி. போட்டி

மூன்று மாகாண சபைகளிலும் போட்டியிடுவதற்கு ஜே.வி.பி. வேட்பாளர்களைத் தெரிவு செய்ய நால்வரைக் கொண்ட குழுவொன்று அமைக்கப்பட்டுள்ளது. வடமாகாணத்தில் சகல மாவட்டங்களிலும் ஜே.வி.பி. வேட்பாளர்களை நிறுத்தவுள்ளதாக விஜிதஹேரத் எம்.பி. தெரிவித்தார்.

கே.டி.லால்காந்த, விஜித ஹேரத், சுனில் ஹந்துன்நெத்தி, ஆர்.சந்திரசேகரன் ஆகியோர் வேட்பாளர்களைத் தெரிவு செய்யும் குழுவில் அங்கம் வகிக்கின்றனர். (அ-2)

# சுனாமியில் ஏற்பட்ட இறப்புக்களுக்கு வானிலை அவதான நிலையமே பொறுப்பு

(கொழும்பு)

இலங்கை மீது 2004 ஆம் ஆண்டு சுனாமி தாக்கம் ஏற்பட்ட போது ஆயிரக்கணக்கான மக்கள் உயிரிழந்தமைக்கு இலங்கை வானிலை அவதான நிலையமே பொறுப்பேற்க வேண்டும் என்று ஐக்கிய தேசியக் கட்சி குற்றம் சுமத்தியுள்ளது.

கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் விஜயதாச ராஜபக்ஷ இந்தக் குற்றச்சாட்டை சுமத்தியுள்ளார்.

சுனாமி தாக்கம் ஏற்பட போவதை உணர்ந்த ஹவாய் காலநிலை மத்திய நிலையம் இலங்கை வானிலை அவதான நிலையத்துடன் தொடர்பு கொண்டது.

எனினும் இலங்கை வானிலை அவதான நிலையத்தினால் ஹவாய் நிலையத்துக்கு வழங்கப்பட்டிருந்த தொலைபேசி இலக்கங்களுடன் தொடர்பை ஏற்படுத்த முடியவில்லை.

இதன் காரணமாக காலை 7.15 மணியளவில் சுனாமி இலங்கையைத் தாக்கி பல உயிர்களைக் காவு கொண்டது.

இதனை ஆவண ரீதியாக நிரூபிக்க முடியும் என்று விஜயதாச ராஜபக்ஷ குறிப்பிட்டுள்ளார். (அ-2)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# குற்றச் செயல்களில் ஈடுபட்டவர்கள் வேட்பு மனுதாக்கல் செய்யமுடியாது

## அரசியல் கட்சிகள் தீர்மானம்

(கொழும்பு)

**வடக்கு மக்கள் தேர்தல் குறித்து ஆர்வம் காட்ட வில்லை என சிங்கள பத்திரிகையொன்று செய்தி வெளியிட்டுள்ளது. வடமேல் மற்றும் வடமத்திய மாகாணங்களில் மாகாணசபை தேர்தல் சூடு பிடித்துள்ளது. எனினும் வடக்கில் தேர்தல் தொடர் பில் மக்கள் பெரியளவில் நாட்டம் காட்டவில்லை என பாதுகாப்புத் தரப்பினர் தெரிவித்துள்ளனர்.**

வடக்கில் குறிப்பாக முல்லைத் தீவு,யாழ்ப்பாணம், கிளிநொச்சி, மன்னார் ஆகிய மாவட்டங்களில் தேர்தல் பிரசார நடவடிக்கைகள் இன்னமும் ஆரம்பிக்கப்படவில்லை. தேர்தல் தொடர்பான ஒரு சுவரொட் டியைக் கூட காணமுடியவில்லை எனத் தெரிவிக்கப்படுகி றது.

தேர்தல் தினம் அறிவிக்கப் பட்ட தன் பின்னர், சில வேளைகளில் தற்போதைய நிலையில் மாற்றம் ஏற்படலாம் என தெரிவிக்கப்படுகிறது.

குற்றச் செயல்களில் ஈடுபட்டவர் களுக்கு எதிர்வரும் மாகாண சபைத் தேர்தலில் வேட்புமனுக்களை தாக் கல் செய்ய அனுமதிய ளிக்கப்ப டமாட்டாது என தெரிவிக்கப்படுகிறது.

குறிப்பாக நீதிமன்றில் குற்ற வாளி என அறிவிக்கப்பட்ட நபர்க ளுக்கும் பல்வேறு குற்றச்சாட்டுக்கள் தொடர்பில் விசாரணைக்கு உட்படுத் தப்பட்டு வரும் அரசியல்வாதிகளு க்கும் வேட்பு மனுக்களை தாக்கல் செய்ய அனுமதியளிக்கப்படமாட் டாது என ஐக்கிய தேசியக் கட்சி, ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமை ப்பு போன்ற கட்சிகள் தீர்மானத்தை எடுத்துள்ளன.

மதத் தலைவர்கள் மற்றும் ஏனைய தரப்பினரின் வேண்டு கோளுக்கு இணங்க இந்தத் தீர் மானம் எடுக்கப்பட்டுள்ளது.

கடந்த காலங்களில் மாகாண அரசியல்வாதிகளுக்கு எதிராக பல் வேறு குற்றச்சாட்டுக்கள் சுமத்தப் பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

இதேவேளை , வடமேல் மற்றும் மத்திய மாகாணசபைகளில் அங் கம் வகித்த ஆளும் கட்சி உறுப்பினர் களுக்கு எதிராக ஜனாதிபதி ஆணை க்குழு விசாரணைகளை ஆரம்பித் துள்ளது. (அ-2)

# துணை தூதரகத்துக்கு வெடிகுண்டு மிரட்டல்

(சென்னை)

சென்னையில் உள்ள இலங்கை துணைத் தூதரகத்துக்கு வெடிகுண்டு மிரட்டல் விடுக்கப்பட்டதையடுத்து, அங்கு பாதுகாப்பு உஷார்படுத்தப்பட் டுள்ளது.

சென்னை நுங்கம்பாக்கத்தில் இலங்கை துணைத் தூதரகம் அமைந் துள்ளது. இதற்கு எப்பொழுதும் பொலிஸ் பாதுகாப்பு வழங்கப்பட்டிருக்கும்.

இந்நிலையில் இலங்கைத் துணை தூதரகத்துக்கு கடந்த வெள்ளிக் கிழமை வந்த ஒரு தபால் அட்டையில், பீகார்மாநில புத்த காயாவில் நடந்தது போல இலங்கை துணைத் தூதரகத்திலும் வெடி குண்டு தாக்குதல் நடத்தப்படும் என்று தெரிவிக்கப்பட்டிருந்தது.

இதனையடுத்து தூதரகத்துக்கு வழங்கப்பட்டிருந்த பாதுகாப்பு மேலும் அதிகரிக்கப்பட்டுள்ளது.

அத்துடன் மிரட்டல் தபால் அனுப்பியவர்கள் குறித்தும் பொலிஸார் விசாரித்து வருகின்றனர். (அ-2)

# தங்கம் வென்று சாதனை



(யாழ்ப்பாணம்)

கடந்த 6 ஆம் திகதி கொழும்பு றோயல் கல்லூரியில் நடைபெற்ற தேசிய மட்ட தமிழ் தின பேச்சுப் போட்டியில் (பிரிவு-4) யா/கனகரத் தினம் மத்திய மகாவித்தியாலயத் தில் தரம் 10 இல் பயிலும் ரகுமாறன் கோபிகா என்ற மாணவி கவிஞர் கண்ணதாசனின் தத்துவப் பாடல் கள் என்ற தலைப்பில் (உடன் தலைப் புக் கொடுத்து பேசுதல்) பேசி முத லாமிடத்தைப் பெற்று தங்கப்பதக்க மும் பெற்றுள்ளார்.

இவர் சிறு வயது முதலே தியாகி அறக் கொடை நிறுவன சிறுவர் இல் லத்திலிருந்து கல்வி கற்று வருபவர் என்பது குறிப்பிடத்தக்கது. (அ)

# பொதுநலவாய மாநாட்டில் ஊடகவிழுமியங்கள் பின்பற்றப்படும்

## இலங்கை அரசு உறுதியளிப்பு

இலங்கையில் எதிர்வரும் நவம் பர் மாதம் நடைபெறவுள்ள பொது நலவாய நாடுகளின் மாநாட்டு நிகழ் வுகளை சேகரிக்கும் சர்வதேச செய்தி யாளர்களுக்கு பொதுநலவாய விழு மியங்களின் அடிப்படையில் முழு மையான வாய்ப்புகளை வழங்க இலங்கை அரசாங்கம் உறுதியளித் துள்ளது.

பொதுநலவாய நாடுகளின் ஊட கம் மற்றும் வெளிப்படுத்தல் தலை மையகம் இந்தத் தகவலை வெளி யிட்டுள்ளது. இலங்கையில் போரு க்கு பின்னர் இடம் பெறுகின்ற அபி விருத்திகளை நேரடியாக கண்டு கொள்ள சர்வதேச செய்தியாளர் களுக்கு நவம்பர் மாத நிகழ்வு பாரிய வாய்ப்பை வழங்குகின்றது.

எனவே, சர்வதேச ஊடகவியலா ளர்கள் இந்த வாய்ப்பைப் பயன்ப டுத்திக் கொள்ள வேண்டும் என்று பொதுநலவாய ஊடகத் தலைமை யகம் குறிப்பிட்டுள்ளது.

இந்நிலையில் பொதுநலவாய நாடுகளின் நிகழ்வுகளை செய்தி யாக்க செல்லும் ஊடகவியலாளர் கள் தொடர்பான தரவுகளை பொது நலவாய நாடுகளின் ஊடக தலை மையகமே ஆராயவுள்ளது.

அதேநேரம், இலங்கையின் உள் ளூர் ஊடகவியலாளர்களுக்கான அனுமதியை இலங்கையின் தக வல் திணைக்களம் மேற்கொள்ளும் என்றும் பொதுநலவாய ஊடக தலை மையகம் தெரிவித்துள்ளது. (அ-2)

# முதியோர் அ.அட்டை கண்டெடுப்பு

(யாழ்ப்பாணம்)

வட்டு தெற்கு முதலி கோவிலடி யைச் சேர்ந்த பொன்னன் சண் முகநாதன் என்பவரது VW/DS/ 25/12/00730 எனும் இலக்கமுடைய முதியோர் அடையாள அட்டை கண் டெடுக்கப்பட்டு வலம்புரி அலுவல கத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

உரியவர் அலுவலக நேரத்தில் வருகை தந்து தகுந்த ஆதாரத்தை காட்டி அதனைத் பெற்றுக் கொள்ள வும். (அ)



Mother ஸ்ரீ செயற்றிட்டத்தின் கீழ் கிளி/முருகானந்தாக் கல்லூரியும் அ/ஹக தஸ்டிகிலிய முஸ்லிம் மகாவித்தியாலயமும் இணைந்து நடத்திய இன ஐக்கியத் துக்கான ஒன்று கூடல் நிகழ்வின் போது....

# மூதூர் படுகொலை; சாட்சியங்களின் பட்டியலை தயாரிக்க பணிப்புரை

(திருகோணமலை)

திருகோணமலை மூதூரில் கட ந்த 2006 ஆம் ஆண்டு 17 தன் னார்வ பணியாளர்கள் கொல்லப் பட்ட சம்பவம் தொடர்பான சாட்சி யாளர்களின் பட்டியலை தயாரிக் குமாறு குற்றப் புலனாய்வுத் துறை யினருக்கு பணிப்புரை விடுக்கப் பட்டுள்ளது.

ஜனாதிபதியின் செயலாளர் லலித் வீரதுங்கவின் தலைமையிலான கற்றுக் கொண்ட பாடங்கள் மற்றும் நல்லிணக்க ஆணைக்குழுவின் நடவடிக்கைக்குழு இந்த பணிப்பு ரையை விடுத்துள்ளது.

இந்நிலையில் சாட்சியாளர் களின் வாக்கு மூலங்களின் அடிப் பிடையில் குறித்த விசாரணை சட் டமா அதிபரிடம் பாரப்படுத்தப்பட் டுள்ளதாக ஜனாதிபதியின் செயலா ளர் தெரிவித்துள்ளார்.

இதற்கு சட்டமா அதிபரின் பதில் எதிர்பார்க்கப்படுவதாக குறிப்பிட்டார்.

சர்வதேச ரீதியாக மேற்கொள் ளப்பட்ட அழுத்தங்களை அடுத்தே இந்த கொலை சம்பவம் குறித்த விசாரணைகள் மேற்கொள்ளப்பட் டன எனத் தெரியவருகிறது. (அ-2)

# தெரிவுக்குழுவில் கூட்டமைப்பு பங்கேற்க வேண்டியது அவசியம்

## இந்தியா அதையே விரும்புகிறது என்கிறார் அமைச்சர் கெஹலிய

13 ஆவது திருத்தச் சட்டத்துக்கு அப்பாற்பட்ட தீர்வை (13 பிளஸ்) இந்தியா வலியுறுத்தவில்லை என்று ஊடகத்துறை அமைச்சர் கெஹ லிய ரம்புக்வெல தெரிவித்துள்ளார்.

கொழும்பில் நேற்றுமுன்தினம் செய்தியாளர்களிடம் உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு குறிப் பிட்டார். அவர் தொடர்ந்து கூறுகை யில்,

இனப்பிரச்சினைக்கு தெரிவுக் குழு வின் ஊடாகவே தீர்வு வரவேண்டும் என்பதே இந்தியாவினது கருத் தாக வுள்ளது.

13 ஆவது திருத்தச் சட்டத்துக்கு அப்பாற்பட்ட தீர்வை இந்தியா வலியு றுத்தவில்லை. மாகாணங்களுக்கான அதிகாரப் பகிர்வு அனைத்துக் கட்சி தெரிவுக்குழுவின் கையில் தான் உள் ளது.

தெரிவுக்குழு மூலம் தான் இனப் பிரச்சினைக்குத் தீர்வுகாணப்பட வேண்டும் என்று இந்தியத் தலை வர்களிடம் ஜனாதிபதி மஹிந்த ராஜ பக்ஷ தெரிவித்துள்ளார்.

இந்தியா கூட தெரிவுக்குழுவில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு இடம் பெறவேண்டும் என்றே விரும்புகி றது என்று அவர் தெரிவித்தார்.

13 ஆவது திருத்தச் சட்டத்தைப் பலவீனப்படுத்தினால் இந்திய அரசா ங்கம் கடுமையான நடவடிக்கையை மேற்கொள்ளும் என்று வெளியான தகவல்களை சுட்டிக்காட்டி அது எத்த கைய நடவடிக்கையாக இருக்கும் என்று கெஹலிய ரம்புக்வெலவிடம் செய்தியாளர் ஒருவர் கேள்வி எழுப் பிய போது இந் தியாவின் பக்கத்தில் இருந்து அவ் வாறான எந்த அறி விப்போ அறி குறியோ வரவில்லை என்று பதி லளித்துள்ளார். (அ-2)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# பொதிகை மலை



## ஆன்மீகம் 61

அன்னை சித்தர்
இராஜ்குமார் குருஜி

அதைப்போலவே எம் குருநாதர் தலையாட்டிச் சித்தர் அவர்கள் என்னுடன் பதின்மூன்று நபர்களை உடன் அழைத்துச்சென்று மலை வளம் காணவைத்தபோது அவரை அகத்தியராகவும் எங்களை சீடனாகவும் பார்த்தேன். நான் எந்த ஜென்மத்தில் செய்த புண்ணியமோ- இப்பெரும்பேறு எனக்கு இப்பிறவியில் கிட்டியது. இந்த தெய்வீகப் பெருவாழ்வு இறைவன் எனக்குக் கொடுத்த பெருவரமாக நினைக்கிறேன். இம் மலையில் நாங்கள் மூன்று நாட்கள் தங்கியிருந்து புதுப் புது விடயங்கள் அறிந்து ஆனந்த மயமானோம்.

இம்மலையில் இருந்த நேரத்தில் என் சிந்தனையில் சில வினாக்கள் மலையாய் எழுந்தன. திரும்பத் திரும்ப என் மனதில் அந்த அலைகள் பாய்ந்து கொண்டிருந்தன. இந்த வினாக்கள் என்னுள் தோன்றியதற்கு காரணமே அகத்தியர் வாழ்ந்த இடம் என்பதால் தான், என்னவோ என்னுள் பொதிகையாய் வானளாவ உயர்ந்து நின்றது. நோயற்ற வாழ்வே குறைவற்ற செல்வம், என்று ஆரோக்கியத்தின் அருமையை அழகாகக் கூறிச்சென்றார். ஔவைப்பிராட்டிநோய்களைப் பற்றி வள்ளுவப் பெருந்தகையும் குறளில் குறிப்பிட்டுள்ளார். உண்ட உணவு உண்மையாக ஜீரணமாவதற்கு முன் உண்ணாமல்- நாவடக்கி உண்மையான பசி வரும்போது மட்டும் உண்டால் இந்த உடலுக்கு மருந்து என்பதே தேவைப்படாது என்று கூறியுள்ளார்.

ஆயினும், பிறக்கும்போதே உடன் பிறப்பாய் சில நோய்கள் மாந்தருடன்



பிறப்பது ஏன்? சில நோய்கள் பரம்பரையாக வருவதேன்? தீராத நோயுடன் பிறந்தவர்களைப்பார்த்து முன் ஜென்மவினை என்று மாந்தர் கூறுவது உண்மையா? குஷ்டநோய் போன்றவை முன் ஜென்ம பாவங்களின் சம்பளம் என்று சில நூல்கள் கூறுவதேன். இதை உண்மை என்பதை போல புராண கதைகள் கூட சொல்கின்றன.

இவை அடுத்த பிறவியிலும் தொடராமல் இருக்க என்ன வழி - வைத்தியரின் கடமை சிகிச்சை அளிப்பதோடு முடிந்து விடுகிறது.

அந்த நோய் குணமாவது இறைவன் கிருபை என்று பொருள்படுமாறு ஆங்கிலத்தில் வைத்தியர்களே என்று தம் கிளினிக்குகளில் எழுதி வைத்திருக்கிறார்களே! வைத்தியரிடம் வைத்தியம் பார்த்தாலும் ஆண்டவனை வேண்டி பூஜை செய்கிறார்கள்.

மொட்டை அடித்து கொள்வதாக, அலகு குத்திக்கொள்வதாக, தீப்பூ மிதிப்பதாக, காணிக்கை அளிப்பதாக, பலவாறு வேண்டிக் கொள்கிறார்கள். பல சமயங்களில் அவர்கள் வேண்டுதல் பலிக்க வேண்டியவாறு வேண்டுதலை நிறைவேற்றுகிறார்கள்.

சிலர் என்ன செய்தாலும் பலனின்றி இறந்து விடுகிறார்கள். அது கண்டு அவர் விதி முடிந்து விட்டது என்று தம்மைத் தாமே சமாதானம் செய்து கொள்கிறார்கள். இது ஏன்? வினாக்கள் மேலும் மேலும்! எழுந்தன தவிர அதற்கான விடை? என் மனம் குழம்பிய குட்டை ஆயிற்று.

ஆனால், குழம்பிய குட்டையில் தானே மீன் பிடிப்பது எளிது. ஆனால் வைத்துக் கொண்டு நெய்க்கு அலைகிறாய்? ஆசானை, அருகில் வைத்துக்கொண்டு இப்படி உன் மனம் அலை பாய்கிறது என்றது ஏதோ ஒரு சக்தி.

தொடரும்

# தமிழகத்தில் சூடுபிடிக்கும் அரசியல் போராட்டங்கள்

ராமர் பாலம் என்று கூறி சேது கால்வாய் திட்டத்தை தடுக்கிறார்கள் என்ற பிரசாரத்தை மேற்கொண்டுள்ளது தி.மு.க. இது முஸ்லிம்கள் மற்றும் கிறிஸ்தவர்கள் மத்தியில் அ.தி.மு.க.விற்குள்ள இமேஜை குறைக்க பயன்படுத்தப்படும் யுக்தி. அதனால்தானோ என்னவோ உடனடியாக மறுப்பு அறிக்கை வெளியிட்டுள்ள பா.ஜ.கவின் மாநில தலைவர் ராதாகிருஷ்ணன், ராமர் பாலம் பாதிக்கப்படாத வகையில் இந்தத் திட்டத்தை நிறைவேற்றுவதில் எங்களுக்கு ஆட்சேபணை இல்லை. அப்படி செயற்படுத்தத்தான் வாஜ்பாய் திட்டமிட்டார்.

ஆனால், அவருக்குப் பிறகுவந்த ஐக்கிய முற்போக்கு கூட்டணி அரசு அவசர அவசரமாக இத்திட்டத்தை மற்றவர்களின் உணர்வுகளை பாதிக்கும் வகையில் நிறைவேற்ற விரும்பியது என்று விளக்கமளித்தார். இதற்கு நேரடியாக இப்போதைக்கு எந்த எதிர்ப்பையும் காட்டாமல் அமைதி காக்கிறது அ.தி.மு.க அதே நேரத்தில், ஒருவேளை நரேந்திர



# அரசியல் ஆகிவிட்ட மரணச் சம்பவம்!

மோடியை முன்னிறுத்தி, பா.ஜ.கவுடன் அ.தி.மு.க எதிர்கால கூட்டணியில் இடம் பெற்றால் அதற்கு இந்த போராட்டம் முட்டுக்கட்டையாக இருக்கட்டும் என்பதும் தி.மு.க.வின் இன்னொரு வியூகம் என்பதில் சந்தேகமில்லை.

முஸ்லிம்கள் கோரும் 7.5 சதவீத ஒதுக்கீடும் போராட்டமும் சமீபத்தில் நடந்து முடிந்த ராஜ்ய சபை தேர்தல்வரை அ.தி.மு.கவுடன் நெருக்கமாக இருந்த கட்சி தமிழ் நாடு முஸ்லிம் முன்னேற்றக் கழகம். இதன் அரசியல் கட்சியான மனிதநேய மக்கள் கட்சிக்கு இரு சட்டமன்ற உறுப்பினர்கள் தமிழக சட்டமன்றத்தில் இருக்கிறார்கள். அவர்கள் இருவரும் நடந்து முடிந்த ராஜ்ய சபை தேர்தலில் தி.மு.க வேட்பாளர் கனிமொழிக்கு வாக்களித்தார்கள். அந்த வாக்கெடுப்பு முடிந்த பிறகு த.மு.மு.க முஸ்லிம் வாக்காளர்களை ஒருங்கிணைக்கும் அவசர முயற்சியில் இறங்கியுள்ளது.. வேலைவாய்ப்பில் முஸ்லிம்களுக்கு 7.5 சத வீத இட ஒதுக்கீடு வழங்க வேண்டும்என்ற கோரிக்கையை முன்வைத்து சென்னையில் மிகப் பிரம்மாண்டமான பேரணிக்கு அழைப்பு விடுத்தார்கள். ஆனால் திடீரென்று அப்பேரணிக்கு அரசு தடைவிதித்தது. ஆனாலும், தடையை மீறி கைது ஆவோம் என்று கூறி பேரணியை நடத்தி, த.மு.மு.கவினர் ஆயிரக் கணக்கானோர் கைதானார்கள். இவர்களின் பேரணிக்கு விதிக்கப் பட்ட தடையை தி.மு.க தலைவர் கருணாநிதி தண்டித்தார். ஜனநாயக ரீதியில் செயற்படவிடாமல் அரசியல் கட்சிகளை தடுக்கிறது அ.தி.மு.க அரசு என்று குற்றம் சாட்டினார்.

இடஒதுக்கீடு என்பது முஸ்லிம்களுக்கு மிகவும் சென்ஸிட்டிவான கோரிக்கை. இதற்கு உத்தரவாதம் கொடுங்கள் என்று அ.தி.மு.க தலைமையிடம் அடம்பிடித்தால்தான் நடந்து முடிந்த ராஜ்யசபை தேர்தலில் த.மு.மு.கவின் அரசில் இயக்கமான மனிதநேய மக்கள் கட்சி தி.மு.க பக்கம் போக நேர்ந்தது. இதை சமாளிக்கும் விதத்தில் அனைத்து மசூதிகளும் இலவச அரிசி வழங்கப்படும் என்று முதல்வர் ஜெயலலிதா அறிவித்தார். ஆனாலும் குஜராத் முதல்வர் நரேந்திரமோடியை பதவியேற்பு விழாவிற்கு முதல்வர் ஜெயலலிதா அழைத்தது, அதன் பிறகு நரேந்திரமோடியீன் பதவியேற்பு விழாவிற்கு முதல்வர் ஜெயலலிதா குஜராத் சென்றது. பா.ஜ.கவின் பிரசார கமிட்டி தலைவராக நரேந்திர மோடி நியமிக்கப்பட்[illegible] ரீதியில் அவ[illegible] அரசு வேலை வாய்ப்பில் 7.5% இட ஒதுக்கீடு வழங்கும் விடயத்தில் உத்தரவாதம் கொடுக்காதது எல்லாம் சேர்ந்து அ.தி.மு.கவிற்கும், மனிதநேய மக்கள் கட்சிக்கும் நெருடலை ஏற்படுத்தியிருக்கிறது. அதன் பிரதிபலிப்பாக தன் வாக்கு வங்கியை உஷார்படுத்திக்கொள்ள மனித நேய மக்கள் கட்சிக்கும் நெருடலை ஏற்படுத்தியிருக்கிறது. அதன் பிரதிபலிப்பதாக தன் வாக்கு வங்கியை உஷார்படுத்திக் கொள்ள மனித நேய மக்கள் கட்சி இந்த பேரணியை நடத்தி முடித்திருக்கிறது.

என்.எல்.சி. பங்கு விற்பனையும் தொழிலாளர்கள் போராட்டமும் நெய்வேலி அனல் மின்நிலையத்தின் 5 சதவீத பங்குகளை தனியாருக்கு விற்க வேண்டும்என்ற முடிவினை மத்திய அரசு எடுத்து அறிவித்தது. இந்த போராட்டம் 2003 இலிருந்து நடைபெற்று வருகிறது. தனியாருக்கு விற்க மத்திய அரசு அறிவிப்பு செய்யும். உடனே மாநில அரசும், மாநிலத்தில் உள்ள அரசியல் கட்சிகளும் எதிர்க்கும். உடனே அந்த முடிவு கைவிடப்படும். ஆனால், இந்த முறை விற்கும் முடிவில் உறுதியாக இருக்கிறது மத்திய அரசு. செபியின் வழிகாட்டுதல் படி பத்து சதவீத பங்குகளை தனியாருக்கு கொடுக்கவேண்டும். அதன் அடிப்படையிலேயே இப்போது 5 சதவீத பங்குகளை விற்பனை செய்ய முடிவு செய்திருக்கிறோம் என்று மத்திய அரசு அறிவித்துள்ளது. தமிழகத்தைச் சேர்ந்த மத்திய அமைச்சர் சுதர்ஸன நாச்சியப்பன், புதுவையைச் சேர்ந்த மத்திய அமைச்சர் நாராயணசாமிஆகியோரும்இதேகருத்தைசொன்னார்கள்.

தமிழக அரசின் சார்பில் பிரதமருக்கு கடிதம் எழுதிய முதல்வர் ஜெயலலிதா, அந்த 5 சதவீத பங்குகளை தனியாருக்கு விற்பதற்கு பதில் மாநில அரசின் பொதுத்துறை நிறுவனங்களான டிட்கோ, டிக், சிப்காட் போன்றவற்றிடம்விற்பனைசெய்யுங்கள்என்றுகோரிக்கை [illegible] முதல்வர் சொல்லியுள்ள [illegible]லோசனையை கருத்தில் கொண்டு இதில் முடிவெடுங்கள் என்று தி.மு.க தலைவர் கருணாநிதி காங்கிரஸ் தலைவி சோனியா காந்திக்கு கடிதம் எழுதிவிட்டு, அதன் நகல்களை பிரதமர் மன்மோகன்சிங்கிற்கும், நிதியமைச்சர் ப.சிதம்பரத்திற்கும் அனுப்பி வைத்தார். இந்நிலையில் மாநில அரசின் பொதுத்துறை நிறுவனத்திற்கு பங்குகளை விற்கமுன் வந்திருக்கும் மத்திய அரசு, தமிழகத்திலிருந்து ஒரு சீனியர் அதிகாரியை ஆலோசனையை நடத்த அனுப்பி வையுங்கள் என்று கூறியிருக்கிறது. ஆனால் இதற்கு திடீரென்று தி.மு.க.வின் தொழிற்சங்கமான தொழிலாளர் முன்னேற்ற சங்கம் எதிர்ப்பு தெரிவித்துள்ளது. மாநில அரசின் பொதுத்துறை நிறுவனத்திற்கு விற்றாலும், செபியின் வழிகாட்டுதல் படி தனியாருக்கு 5 சதவீதத்தை விற்றே தீருவார்கள். ஆகவே இந்த பங்குகளை விற்கமாட்டோம் என்று கூறி, மாநில அரசு மத்திய அரசிடம் எச்சரிக்கையாக இருக்க வேண்டும் என்று வற்புறுத்தியுள்ளது. இந்த பேச்சுவார்த்தைகள் ஒரு புறம் நடந்து கொண்டிருந்தாலும் என்.எல்.சி போராட்டம் ஐந்தாவது நாளாக தொடருகிறது. அத்துடன் சுரங்கப் பணிகள் மிகவும் மோசமாக பாதிக்கப்பட்டுள்ளன. மின் உற்பத்தி திறனும் படிப்படியாக குறைந்து வருகிறது. ஏற்கனவே மின்வெட்டு பிரச்சினையில் உள்ள தமிழகத்தில் இந்த என்.எல்.சி போராட்டம் மேலும் சிக்கலை தோற்றுவிக்கும். அது மட்டுமன்றி, அ.தி.மு.க மற்றும் தி.மு.க ஆகிய இரு முக்கியக் கட்சிகளின் தொழிற்சங்கங்களும் சேர்ந்து போராட்டத்தில் குதித்துள்ளதால், தொழிலாளர்கள் போராட்டம் சூடுபிடித்துள்ளது.

இப்போது தொடங்கியுள்ள இந்த நான்கு முக்கிய போராட்டங்களும் வெறும் முன்னோட்டமே. இனி வருகின்ற மாதங்களில் இது மாதிரியான போராட்டங்கள் மேலும் அதிகமாகும். ஏனென்றால் நாடாளுமன்ற தேர்தல் வரும்போது ஒவ்வொரு கட்சியும் தங்களுக்கு வேண்டிய களத்தை தேர்வு செய்து கொள்ள இது போன்ற போராட்டங்களையே அடித்தளமாக அமைத்துக்கொள்ளும். போராட்டக் களம் சூடுபிடிக்க, அடுத்த தேர்தலுக்கான தேர்தல் அணியும் உருவாகத் தொடங்கும்.

எம்.காசிநாதன் முற்றும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# சிறுவர் அரங்கம்

515

## கேவலமான திருடன்



நாராயணதாசுக்குப் பொருத்தமான மனைவி நாராயணி. இருவரும் கடைந்தெடுத்த கஞ்சர்கள்! அவர்களுக்கு பக்கத்து வீட்டில் கிருஷ்ணன் கிருஷ்ணவேணி தம்பதி வசித்து வந்தனர். அவர்கள் நாராயண நாராயணிக்கு நேர் மாறானவர்கள். நாராயணன் வீட்டு சமையல் அறையில் அடுப்பு பாதி நாட்கள் புகையாது.தன் வீட்டிலேதான் வயிறையும் வாயையும் கட்டி இருப்பார்களே தவிர, வெளியிடத்தில் யாராவது விருந்துக்கழைத்தால், அங்கு சென்று இருவரும் ஒரு பிடிபிடிப்பார்கள்.

ஒருநாள், தாஸ் தன் தோட்டத்தில் உலாவிக்கொண்டிருக்கையில், தன் தோட்டத்து மரத்திலிருந்து ஒரு மாங்காய் பக்கத்துவீட்டில் விழுந்தது. தாஸ் அதை எடுக்க, சுவரேறிக் குதித்து பக்கத்து வீட்டுத்

**அம்புலிமாமா கதைகள்**

தோட்டத்தில் குதித்தான். அப்போது கிருஷ்ணன் வீட்டு சமையல் அறையிலிருந்து வந்த நறுமணம் அவனைச் சுண்டியிழுத்தது. ஆகையால் ஏதாவது மாதிரிக்குக் கேட்டு வாங்கி சுவைக்கலாம்! என்று தாஸ் சமையல் அறைக்குள் நுழைந்தான். சமையல் அறை திறந்தே இருக்க, கிருஷ்ணனின் மனைவிவேணி அங்கே இல்லை. உடனே, தாஸ் அங்கிருந்து உணவுப் பண்டங்களை எடுத்துக் கொண்டு சுவரேறிக் குதித்து தன் வீட்டை அடைந்தான்.

"தான் திருடி வந்த உணவுப் ப்ண்டங்களைத் தன் மனைவி நாராயணிக்குக் காட்ட, அவளும் அவனைப் புகழ்ந்தாள். பிறகு இருவரும் திருடிய உணவுப்பண்டங்களை உண்டனர்.

மறுநாள், கிருஷ்ணன் தன்வீட்டில் சமைத்த உணவு காணாமற் போனதைப் பற்றி அமர்க்களம் செய்து ஊரைக் கூட்டுவார் என்று எதிர்பார்த்த தாஸ் தம்பதி ஏமாற்றமடைந்தனர். கிருஷ்ணன் தம்பதி மௌனமாக இருந்தனர்.

இதனால் மறுநாள் இரவும் தாஸ் இரகசியமாக சுவரேறிக் குதித்து, கிருஷ்ணனின் சமையல் அறைக்குச் சென்றான். அன்று அறைக் கதவுகள் தாழிடப்பட்டிருந்தன. தாஸ் தாழ்ப்பாளைத்திறந்து உள்ளே சென்று, சமைத்த உணவுப்பண்டங்களை அள்ளிக் கொண்டு வந்து விட்டான். அன்று இரவும், தாஸ் தம்பதிக்கு இரவு உணவு இலவசமாகக் கிடைத்தது. மூன்றாவது முறையாக அன்றும் இரவில் தாஸ் சுவரேறிக் குதித்து சமையல் அறையை அடைந்தான். அன்று விருந்து சாப்பாடு தயாராக இருந்தது. அதுமட்டுமல்ல!




இரண்டு இலைகளும் தரையில் போடப்பட்டிருந்தன. நல்லதாகப் போயிற்று என்று தாஸ் அத்தனை பண்டங்களையும் வாழையிலையில் சுருட்டிக் கொண்டு வெற்றிகரமாகத் திரும்பினான்.

அடுத்த நாள் காலையில், கிருஷ்ணன் வீட்டு வாயிலில் கும்பல் கூடி இருந்தது. தாஸ் வெளியே சென்று பார்த்தான். கிருஷ்ணன் அங்கு கூடியவர்களிடம், "அதிசயத்தைக் கேளுங்கள்!" எங்கள் வீட்டிற்குள் தினமும் இரவில் கடவுளே புகுந்து உணவுப் பொருட்களை எடுத்துச் சென்று விடுகிறார். நாங்கள் என்ன பாக்கியம் செய்தோமோ கடவுளின் திருவடிகள் எங்கள் இல்லத்தில் படுவதற்கு!

முதல் நாளிரவு சாப்பாடு காணாமல் போனபோது ஏதோ நாய் வீட்டிற்குள் நுழைந்து சாப்பிட்டுவிட்டது என்று நினைத்தேன். இரண்டாவது நாள் அறைக் கதவை மூடிவைத்தேன். அப்படியும் பாருங்கள்! தாழ்ப்பாளைத் திறந்து யாரோ நாங்கள் சமைத்ததை எடுத்துச் சென்றுவிட்டனர். ஆகவே, வருவது நாய் இல்லை என்றும், கடவுளே என்றும் அறிந்தோம்" என்றார்.


அதைக்கேட்டு அசடு, வழிய தாஸ் வீட்டிற்குள் திரும்பினான். அன்றிரவு, கிருஷ்ணனின் வீட்டிற்குள் நுழையும் கடவுளைப் பார்க்க அவர்களது தோட்டத்தில் ஒரே கும்பல் கூடிவிட, தாஸின் இலவசச் சாப்பாட்டில் மண் விழுந்தது. ஊரார் ஆவலுடன் எதிர்பார்த்தது போல் அன்றிரவு ஒன்றுமே நடக்கவில்லை. "நீங்கள் எல்லோரும் கும்பலாக நிற்பதால், இன்று கடவுள் வரவில்லை. நீங்கள் இனி மறைந்து நின்று பாருங்கள்!" என்று வந்தவர்களிடம் கூற, மறுநாள் இரவு முதல் அனைவரும் மறைந்து இருந்து கிருஷ்ணன் வீட்டுப் பின்பக்கத்தை நோட்டம் விடத்தொடங்கினர். தாஸ் தம்பதியின் பாடு திண்டாட்டமாகி விட்டது. இதனால் தாஸ் தன் மனைவியிடம் "நீ நாளைக்கே அவர்கள் வீட்டிற்குச் சென்று, வேணியிடம் கடவுள் அவர்கள் வீட்டிற்கு வருவதாகக் கூறி பிரசாரத்தை நிறுத்தச் சொல்!" என்றான்.

மறுநாள், நாராயணி பக்கத்து வீட்டிற்குச் சென்று வேணியை சந்தித்தாள். "வேணி! ஏதோ கடவுளே உங்கள் வீட்டிற்கு இரவில் வருவதாக ஊராரிடம் பிரசாரம் செய்திருக்கிறீர்களே! இது வீண்புரளி தானே! கடைசியில், கடவுள் ஒன்றும் உங்கள் வீட்டுப் பக்கம் வருவதாகத் தெரியவில்லை! வீணாக, உன் கணவருக்குப் பைத்தியக்காரன் என்ற



பட்டம்தான் மிச்சம்!" என்று கிண்டல் செய்தாள்.

"இல்லை நாராயணி! என் கணவர்



மிகவும் இரக்க குணம் படைத்தவர்! அவருக்குத் தெரியும் திருடுவது கடவுள் இல்லை. யாரோ ஒரு மனிதன் என்று! யாரோ தரித்திரம் பிடித்தவன், பிச்சைக்காரன் திருடிப் போகிறான் என்று எங்களுக்குத் தெரியும்.

வயிற்றுப் பசிக்காக இந்த கேவலமான வேலை செய்பவன் பிழைத்துப்போகட்டும் என்றுதான் கடவுள் வருகிறார் என்று அவர் திரித்துக் கூறினார்" என்றாள் வேணி.

நாராயணிக்கு அவள் கூறியது சுருக்கென்று தைத்தது! ஒருவேளை தன் கணவன் திருடியது அவளுக்கு தெரிந்து போய்விட்டதோ என்று தோன்றியது. ஆகையால், அவள் "வேணி! அதெப்படி சாப்பாட்டுக்கே வழியில்லாத பிச்சைக்காரன்தான் வந்து திருடுகிறான் என்று உறுதியாகச் சொல்கிறாய்?" என்று கேட்டாள். ஆனால் , வேணி நெத்தியடியாக, "இந்த மாதிரி கேவலமான செயலை எதிர் வீட்டுக்காரரோ, உன் வீட்டுக்காரரோ, செய்வாரா என்ன? ஒரு வேளை அப்படியே செய்து, அது ஊராருக்குத் தெரிந்தால் அவர்களுக்கு எத்தனை அவமானம்? என்றாள்.

தொடர்ந்து, "நாராயணி! யார் திருடுவது என்று எங்களால் கண்டு பிடித்துவிட முடியும். ஆனால், நாங்கள் அதை செய்ய விரும்பவில்லை. ஒருக்கால், இவ்வாறு கேவலமாகத் திருடுவது உன் வீட்டுக்காரராக... அதாவது ஒரு பேச்சுக்குச் சொன்னேன். உன்னவராக இருந்தால் எவ்வளவு அவமானம்? அதனால் தான் இப்படி ஒரு புரளியைக் கிளப்பி அந்த ஆள் திருடுவதை நிறுத்தினோம். வேண்டுமானால் அந்த ஆள் நேரே வந்து எங்களிடம் பிச்சை கேட்டால் தாராளமாகப் போடுகிறோம்" என்றாள் வேணி.

அவள் கூறிய வார்த்தைகள் நாராயணியை சம்மட்டியால் தலையில் அடிப்பதைப் போலிருந்தன. தங்களது இரகசியத் திருட்டு அம்பலமாகிவிட்டது என்றும், கிருஷ்ணன் தம்பதியினருக்கு யார் திருடன் என்று தெரிந்து விட்டது என்றும் நாராயணிக்குப் புலனாகிவிட்டது. பேசாமல் வாயை மூடிக் கொண்டு தன் வீட்டிற்குத் திரும்பியவள் தன் கணவனிடம் நடந்ததைக் கூறி "இந்த மட்டும் ஊரைக்கூட்டி நம்மை அவமானப்படுத்தாமல் விட்டார்களே! அதுவரைக்கும் அவர்கள் நல்லவர்கள் தான்! என்று முடித்தாள். தாசும் அதை ஆமோதித்தான்.

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# ஆடி மாத இராசி பலன்கள்

# 17.07.2013–16.08.2013



## மேடம்

**அச்சுவினி, பரணி, கார்த்திகை 1ஆம் பாதம்**

**முகஸ்துதிக்கு மயங்காமல் முன்னேற்றத்தில் அக்கறை காட்டும் மேட இராசி நேயர்களே! வசதிகள் பெருகும்! வாய்ப்புகள் வந்து சேரும்!**

## வசதிகள் பெருகும்! வாய்ப்புகள் வந்து சேரும்!

ஆடி மாத கிரக நிலைகளை ஆராய்ந்து பார்க்கும் பொழுது மாதத் தொடக்கத்திலேயே இராசிநாதன் செவ்வாய் குருவுடன் கூடி குருமங்களயோகத்தை உருவாக்குகிறார். எனவே, உடன்பிறப்புகளின் வழியே ஒரு சுபநிகழ்ச்சி நடைபெறுவதற்கான அறிகுறிகள் தென்படுகின்றன. விரயாதிபதி வியாழன் மூன்றில் சஞ்சரிப்பதால் உடன்பிறப்புகளுக்காக ஒரு தொகையை நீங்கள் கொடுத்து அந்த சுபநிகழ்ச்சியை நீங்களே முன்நின்று நடத்தும் சூழ்நிலை கூட உருவாகலாம்.

சப்தம ஸ்தானத்தில் சனி வக்ர நிவர்த்தியாகி உங்கள் இராசியைப் பாரக்கிறார். அதோடு சந்திரனும் இணைந்து சனி, சந்திர யோகத்தோடு மாதம் தொடங்குவதால் சங்கடங்கள் தீரும். சந்தோஷங்கள் கூடும். மங்கல நிகழ்ச்சிகள் மனையில் நடைபெறுவதற்கான சூழ்நிலை உருவாகலாம். தாய்வழி ஆதரவு கூடும். தொழில் வியாபாரத்தில் வளர்ச்சி அதிகரிக்கும்.

வசதிகள் பெருகும் இந்த நேரத்தில் குடும்பப் பிரச்சினைக்கு சுமூக தீர்வு காண்பீர்கள். மன நிம்மதியும் மகிழ்ச்சியும் மாதத் தொடக்கத்தில் ஏற்படும். பிள்ளைகளின் வழியே எடுத்த முயற்சிகளில் வெற்றி கிடைக்கும் அமைப்பு உண்டு. ஐந்துக்கு அதிபதி சூரியன் சுக ஸ்தானத்தில் சஞ்சரிக்கும் இந்த மாதத்தில் பிள்ளைகள் தங்கள் தேவைகளை தாங்களே பூர்த்தி செய்து கொள்வர். பிள்ளைகளுக்கு வேலை வாய்ப்பு கிடைத்து அதன் மூலம் உங்களுக்கு உதிரி வருமானங்களும் வந்து சேரலாம்.

ஜென்ம இராசியில் கேது சஞ்சரிப்பதால் தெய்வ பலத்தை நம்பி செய்யும் ஒவ்வொரு செயலிலும் வெற்றி கிடைக்கும். குறிப்பாக விநாயகப்பெருமானுக்கு அறுகம்புல் மாலை அணிவித்து அப்பமுடன் மோதகத்தையும் நைவேத்தியமாக வைத்து வழிபட்டு வந்தால் துயர நிலை மாறி இனிய பலன்கள் நடைபெறத் தொடங்கும்.

**சிம்ம சுக்ரனும் கன்னி சுக்ரனும்**

ஜூலை 18 ஆம் திகதி சிம்ம ராசியில் சுக்ரன் சஞ்சரிக்கப்போகிறார். 2,7 க்கு அதிபதி ஐந்தில் சஞ்சரிக்கும்பொழுது பிள்ளைகளின் நலன் கருதி எடுத்த முயற்சிகளில் வெற்றி கிடைக்கும். வீடு கட்டும் வாய்ப்பு அல்லது வீடு வாங்கும் வாய்ப்புகளில் இருந்த தடைகள் அகலும். பூர்வீக சொத்துக்களால் லாபம் கிட்டும். புதிய ஒப்பந்தங்களில் கையெழுத்திட்டு மகிழ்வீர்கள். ஆகஸ்ட் 12 ஆம் திகதி கன்னி இராசியில் சுக்ரன் சஞ்சரிக்கப்போகிறார். தனாதபதி நீச்சம் பெறும் இந்த நேரத்தில் எதிர்பாராத விதத்தில் சில விரயங்களையும் நீங்கள் சந்திக்க நேரிடலாம். கொடுக்கல்- வாங்கல்களில் சில ஏமாற்றங்களையும் சந்திக்கும் வாய்ப்பு உண்டு. குடும்ப சுமை கூடும். கூடுதல் உழைப்போடு செயற்படுவீர்கள். வாழ்க்கைத் துணை வழியே அனுசரித்து செல்ல வேண்டிய நேரமிது.

**கடக புதனும் சிம்ம புதனும்**

ஜூலை 30 ஆம் திகதி கடக இராசியில் புதன் சஞ்சரிக்கப்போகிறார். 3,6 க்கு அதிபதி நான்கில் சஞ்சரிக்கும்பொழுது பயணங்கள் அதிகரிக்கும். உத்தியோகத்தில் திடீர் இட மாற்றம், ஊர் மாற்றங்கள் ஏற்படலாம். வங்கிகளில் எதிர்பார்த்த கடனுதவி கிடைத்து வாகனம் வாங்கும் முயற்சிகளில் ஆர்வம் காட்டுவீர்கள்.


ஆகஸ்ட் 16 ஆம் திகதி சிம்ம புதனின் சஞ்சாரத்தால் பாகப்பிரிவினைகளில் ஏற்பட்ட பஞ்சாயத்துக்கள் முடிவடைவதில் தாமதம் ஏற்படலாம். எதிரிகளின் தொல்லை அதிகரிக்கும். உடன்பிறப்புகளின் வழியே பிரச்சினைகள் ஏற்படாமல் பார்த்துக்கொள்வது நல்லது.

இம்மாதம சனிக்கிழமை தோறும் அனுமன் வழிபாட்டை மேற்கொள்ளுங்கள்.

**பெண்களுக்கான சிறப்பு பலன்கள்**

இம்மாதம் கொடுக்கல்- வாங்கல்களில் கவனம் செலுத்த வேண்டிய மாதமாகும். வளர்ச்சி கூடுதலாக இருந்தாலும்கூட மன நிம்மதி குறைவாகவே இருக்கும். ஜூலை 30 க்கு மேல் இடமாற்றம், வீடு மாற்றம், ஊர் மாற்றம் போன்றவைகள் ஒருசிலருக்கு ஏற்படலாம். கணவன்- மனைவிக்குள் ஒற்றுமை பலப்பட விட்டுக்கொடுத்துச்செல்வது நல்லது. பூர்வீக சொத்துக்களை வாங்கக் கூடிய வாய்ப்பு ஒரு சிலருக்கு உருவாகும். பிள்ளைகள் வழியில் சுபகாரிய பேச்சுக்கள் நல்ல முடிவிற்கு வரும். பெண் குழந்தைகளின் சுப சடங்குகளும் எதிர்பார்த்தபடி நடைபெறும். உத்தியோகத்தில் இருக்கும் பெண்களுடன் பணிபுரிபவரை அனுசரித்துச்செல்வது நல்லது. கேது வழிபாடு கீர்த்தியை வழங்கும்.

## சிவல்புரி சிங்காரம்



## இடபம்

**கார்த்திகை 2,3,4 ஆம் பாதங்கள், ரோகிணி, மிருகசீரிடம் 1,2,3 ஆம் பாதங்கள்**

**மற்றவர்களின் மனக்குறை அகல மகத்தான யோசனை கூறும் இடப இராசி நேயர்களே!**

**சொத்துக்களால் ஆதாயம், சொந்த பந்தங்களின் ஆதரவு!**

## சொத்துக்களால் ஆதாயம்! சொந்த பந்தங்களின் ஆதரவு!

ஆடி மாதக் கிரக நிலைகளை ஆராய்ந்து பார்க்கும் பொழுது இராசிநாதன் சுக்ரன் சகாய ஸ்தானத்தில் சஞ்சரிக்கிறார். அதோடு சுகஸ்தானாதிபதி சூரியனும் இணைந்திருப்பதால் சுகங்களும் சந்தோஷங்களும் கூடும் மாதமாகவே கருதலாம். துணிவும் தன்னம்பிக்கையும் அதிகரிக்கும். வெற்றிச்செய்திகள் வீடு வந்து சேரும். உற்றார் உறவினர்ள் உங்கள் முன்னேற்றம் கண்டு ஆச்சரியப்படுவர்.

தன ஸ்தானத்தில் தானாதிபதி புதன், விரயாதிபதி செவ்வாய், லாபாதிபதி குரு ஆகிய மூன்றும் இணைந்து மாதத் தொடக்கம் அமைகிறது. பூமிகாரகன் என்று வர்ணிக்கப்படும் செவ்வாய் விரயாதிபதியாக இருந்து தன ஸ்தானத்தில் சஞ்சரிப்பதால் விரயத்திற்கேற்ற தன லாபம் வந்து கொண்டே இருக்கும். வீடு வாங்கப்போட்ட திட்டம் நிறைவேறும்.

கூட்டுக் குடும்பத்திலிருந்து விலகி ஒரு சிலர் தனிக்குடித்தனம் செய்ய முன்வருவர். கொடுத்த வாக்கைக் காப்பாற்றுவதோடு கொள்கைப்பிடிப்போடு செயற்படுவீர்கள். ஆறாம் இடத்தில் சஞ்சரித்து வந்த சனி இப்பொழுது வக்ர நிவர்த்தியாகிவிட்டதால் அடுத்தவர் நலன் கருதி எடுத்த முயற்சிகளில் ஆதாயம் கிடைக்கும். கொடுத்து வைத்தவர் நீங்கள் என்று கூட இருப்பவர்கள் சொல்வர்.

அடுத்தடுத்து ஒப்பந்தங்கள் வந்து அலை மோதும். அன்னியர்கள் தலையிட பிரச்சினை எண்ணியபடியே முடியும். ஆறாம் இடத்து ராகு அள்ளிக்கொடுக்கும் இராகு என்பதால் சீரான வாழ்க்கை தனில் செல்வ வளம்பெருகும். ஊர் மாறும் எண்ணங்கள் உள்ளத்தில் மறைந்துவிடும். நூதன பொருட்களின் சேர்க்கை உண்டு. சாதனைகள் நிகழ்த்தும் ஜாதக அமைப்பைப்பெற்ற நீங்கள், சோதனைக் காலம் முடிந்து சொகுசான வாழ்க்கை அமையும் காலத்தை கண்எதிரில் காணப் போகிறீர்கள்.

**சிம்ம சுக்ரனும் கன்னி சுக்ரனும்**

ஜூலை 18 ஆம் திகதி சிம்மத்தில் சுக்ரன் சஞ்சரிக்கப்போகிறார். இராசிநாதன் மட்டுமல்ல சுக்ரன் ஆறுக்கு அதிபதியாகவும் விளங்குகிறார். அவர் நான்கில் சஞ்சரிக்கும்பொழுது நல்ல காரியங்கள் இல்லத்தில் நடைபெறும். தொழிலில் வரவு அதிகரிக்கும். தாய்வழி ஆதரவு பெருகும். தங்கம், வெள்ளி போன்றவைகள் வாங்கும் வாய்ப்பு கைகூடி வரும்.

ஆகஸ்ட் 12 ஆம் திகதி கன்னி இராசியில் சுக்ரன் நீச்சம் பெறப்போகிறார். இராசிநாதன் நீச்சம் பெறும் இந்த நேரத்தில் ஆசைகளை அடக்கிக் கொள்வது நல்லது. அலைச்சல் கூடும். ஆதாயம் குறையும். மனதில் உளைச்சல் ஏற்படும். உதவிக்கரம் நீட்டுவதாக சொன்னவர்கள் உங்களை விட்டு விலகலாம். இந்த நேரத்தில் பெண் தெய்வ வழிபாடு பெருமை சேர்க்கும்.

**கடக புதனும் சிம்ம புதனும்**

கடக இராசியில் ஜூலை 30 ஆம் திகதி புதன் சஞ்சரிக்கப்போகிறார். தனாதிபதி மூன்றில் சஞ்சரிக்கும் பொழுது பணப்புழக்கம் அதிகரிக்கும். பாராட்டும் புகழும் கூடும். இனத்தார் பகை மாறும். எடுத்த காரியத்தில் எளிதில் வெற்றி கிடைக்கும். நங்கையரால் நன்மை உண்டு. நண்பர்களால் ஏற்பட்ட துன்பம் விலகும்.

ஆகஸ்ட் 16 ஆம் திகதி சிம்ம இராசியில் புதன் சஞ்சரிக்கப்போகிறார். சுகஸ்தானத்தில் 2,5 க்கு அதிபதி சஞ்சரிக்கும் பொழுது பிள்ளைகளின் கல்வி நலன் கருதி எடுத்த முயற்சி கைகூடும். பெற்றோர்களின் ஆசைகளைப் பூர்த்தி செய்வீர்கள். புனிதப் பயணங்கள் அதிகரிக்கும். வாக்குவாதங்களை தவிர்ப்பதன்மூலம் வாழ்க்கையை வளமாக்கிக் கொள்ளலாம்.

அம்மாதம் அம்பிகை வழிபாடு இன்பம் வழங்கும்.

**பெண்களுக்கான சிறப்பு பலன்கள்**

இம்மாதம் வரவு அதிகரிக்கும் மாதமாகும். கொடுக்கல்- வாங்கல்களை ஒழுங்கு செய்து கொள்வீர்கள். கடன் சுமை குறையும். குடியிருக்கும் வீட்டால் ஏற்பட்ட பிரச்சினைகளை ஒரு வழியாக தீர்த்துக்கொள்வீர்கள். பொதுவாழ்வில் ஈடுபட்டிருப்பவர்களுக்கு புதிய பொறுப்புகள் வந்து சேரும். கணவன், மனைவிக்குள் அன்யோன்யம் அதிகரிக்கும். மாமியார், நாத்தனார் மற்றும் அருகில் இருப்பவர்களின் ஆதரவோடு கரைந்த சேமிப்புகளை ஈடுகட்டுவீர்கள். பதவி உயர்வு, ஊதிய உயர்வு கூட ஒரு சிலருக்கு கிடைக்கலாம். பிரதோஷ வழிபாடு பெருமை சேர்க்கும்.


(தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலங்கையில் மனித உரிமை நிலைப்பாடானது மிக மோசமானது- பிரித்தானிய நீதிமன்றம்



இலங்கையில் உள்நாட்டுப்போர் முடிவடைந்து நான்கு ஆண்டுகள் கடந்த நிலையில் மனித உரிமை நிலைப்பாடானது மோசமாகக் காணப்படுவதாக தற்போது பிரித்தானியாவின் புதிய குடிவரவு நடைமுறை ஒன்றில் தெரிவிக்கப்பட்டுள்ளது.



பிரித்தானியாவில் புகலிடம் கோரிய ஒருவர் இலங்கை அரசாங்கத்தால் தமிழ்ப் புலி உறுப்பினர் எனச் சந்தேகிக்கப்பட்டிருப்பின் அது தொடர்பான முழுமையான விசாரணை தேவைப்படுவதாக தற்போது பிரித்தானியாவால் வெளியிடப்பட்ட புதிய வழிகாட்டியில் குறிப்பிடப்பட்டுள்ளது.

இலங்கையில் தொடரப்பட்ட யுத்தம் தொடர்பான ஆதாரங்களை வழங்கிய தமிழ்ப் புலம்பெயர் ஆர்வலர்கள், தமிழ்ப் புலி உறுப்பினர்கள், அவர்களது குடும்ப உறுப்பினர்கள், ஊடகவியலாளர்கள், மனித உரிமைச் செயற்பட்டாளர்கள் போன்ற பலதரப்பட்டவர்கள் கொழும்பு விமானநிலையத்தில் தடுத்து வைக்கப்படக்கூடிய, கைது செய்யப்படக் கூடிய அல்லது நீதிமன்றால் பிடியாணை பிறப்பிக்கப்பட்டவர்கள் பலரின் வாழ்வானது தற்போது ஆபத்தில் உள்ளது.

இலங்கை பாதுகாப்புப் படையினரால் தடுத்து வைக்கப்படும் எவரும் உச்ச ஆபத்தான சித்திரவதைகளுக்கு உட்படுவதாகவும் இவர்களுக்கு அனைத்துலக ரீதியான பாதுகாப்பு என்பது தேவைப்படுவதாகவும் பிரித்தானிய நீதிமன்றம் உறுதிப்படுத்தியுள்ளது.

இந்நிலையில் பிரித்தானிய உச்சநீதிமன்ற மேன்முறையீட்டு நீதிமன்றம் மற்றும் உயர்நீதிமன்றம் போன்ற அனைத்து நீதிமன்றங்களும் இப்புதிய நடைமுறையைப் பின்பற்ற வேண்டும்என குடிவரவுச் சட்டவாளர் அருண் கணநாதன் தெரிவித்துள்ளார். இப்புதிய புகலிடக்கோரிக்கையாளர் தொடர்பான தீர்மானமானது ஏனைய நாடுகளிலும் ஐரோப்பிய ஒன்றியத்திலும் செல்வாக்குச் செலுத்தும் எனவும் சட்டவாளர் மேலும் குறிப்பிட்டுள்ளார்.

பிரித்தானியாவில் தஞ்சம் புகுவதற்கு முன்னர் இலங்கை பாதுகாப்பு படையினரால் சித்திரவதைக்கு உள்ளாக்கப்பட்டு அல்லது பாலியல் வன்புணர்வுகளுக்கு உட்படுத்தப்பட்ட பலர் சார்பாக வாதாடி வரும் புலம்பெயர் சட்டவாளர்களுக்கு இப்பரீட்சார்த்த தீர்மானமானது வெற்றியைப் பெற்றுக் கொடுத்துள்ளது.

பிரித்தானியாவிலிருந்து இலங்கைக்கு திருப்பி அனுப்பப்பட்டவர்களில் 15 பேர் சித்திரவதைக்கு உள்ளாக்கப்பட்டுள்ளமை உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

பிரித்தானியாவிலிருந்து திருப்பி அனுப்பப்படுபவர்களில் பெரும்பாலானவர்கள் கொழும்பு விமான நிலையத்தில் தடுத்து வைக்கப்படாது இவர்கள் அவர்களது வீடுகளுக்குச் சென்று சில நாட்களின் பின்னர் கைது செய்யப்பட்டு சித்திரவதைக்கு உட்படுவதாக புகலிடம் கோரும் தமிழர்கள்சார்பான வழக்குகள் விசாரணை செய்யப்பட வேண்டிய புதிய வழிகாட்டலில் குறிப்பிடப்பட்டுள்ளது. இலங்கையிலும் வெளிநாடுகளிலும் அரசியல் ரீதியாகச் செயற்படும் பல்வேறுதரப்பட்டவர்கள் தொடர்ந்தும் கண்காணிக்கப்படுவதாகவும் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

பிரித்தானியா, பிரான்ஸ், நோர்வே, கனடா போன்ற பல்வேறு நாடுகளில் செயற்படும் தமிழ் ஆர்வலர்களை இலங்கை புலனாய்வு அமைப்புகள் இணையம் மற்றும் தொலைபேசிகள் வாயிலாக கண்காணித்து வருவதாக பிரித்தானிய நீதிமன்றால் தெரிவிக்கப்பட்டுள்ளது. இவ்வாறு செயற்படுபவர்கள் தொடர்பாக வடக்கு கிழக்கில் வாழ்கின்றவர்கள் மற்றும் புலம்பெயர் சமூகத்தைச் சேர்ந்த இலங்கை அரசாங்கத்திற்குச் சார்பானவர்கள் தகவல் வழங்குவதுடன் இலங்கை அரசாங்க ஆதரவுடன் கொழும்பு பல்கலைக்கழகத்தில் செயற்படுத்தப்படும் திட்டம் எடுக்கப்படும் ஒளிப்படங்களில் உள்ளவர்கள் அடையாளங் காட்டப்படுகின்றனர்.

இலங்கையில் 2009 இல் இடம்பெற்ற இறுதிக்கட்டப் போரில் 40,000 தொடக்கம் 100,000 வரையான தமிழ் மக்கள் படுகொலை செய்யப்பட்டதற்கான ஆதாரங்கள் உள்ளதாக பிரித்தானிய நீதிமன்றில் மேற்கொள்ளப்பட்ட அண்மைய வழக்கொன்றில் நீதிபதிகள் தெரிவித்துள்ளனர். தமிழ் மக்களைப் பாதுகாப்பதற்காக மனிதாபிமான நடவடிக்கை ஒன்று மேற்கொள்ளப்பட்டது என்கின்ற இலங்கை அரசாங்கத்தின் அறிவிப்பை பிரித்தானிய நீதிபதிகள் மறுத்துள்ளனர்.

போர் முடிவுக்குக்கொண்டு வரப்பட்ட வேளையில் இலங்கை அரசாங்கத்தால் தடுத்து வைக்கப்பட்ட 11,000 வரையான முன்னாள் தமிழ்ப்புலி உறுப்பினர்கள் தொடர்பில் எவ்வாறான சட்டரீதியான நடவடிக்கை எடுக்கப்பட்டது என்பது தெளிவற்றதாக உள்ளதாக பிரித்தானிய நீதிமன்றம் அறிவித்துள்ளது. எந்தவொரு நீதிமன்ற விசாரணைகளுமின்றி தொடர்ந்தும் பலர் தடுத்து வைக்கப்பட்டுள்ளதாக பிரித்தானிய நீதிமன்றம் சுட்டிக் காட்டியுள்ளது.

இலங்கையின் வடக்கில் தொடர்ந்தும் சிங்களக் குடியேற்றங்கள் இடம்பெறுவதாகவும் இங்கு இராணுவமயமாக்கல் அதிகரித்துள்ளதாகவும் தமிழர் பகுதிகளில் சிங்கள இராணுவத்தினர் குடியேறுவதற்கு பெருமளவான நிதி வழங்கப்படுவதாகவும் பிரித்தானிய நீதிமன்றத் தீர்மானத்தில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளது.

இலங்கையின் வடக்கில் தமிழ் மக்களின் வர்த்தக நடவடிக்கைகளில் சிங்கள இராணுவத்தினர் தலையிடுவதாகவும் இங்கு இராணுவத்தினர் விடுதிகள், உணவகங்கள், பண்ணைகள், கடைகள், சுற்றுலா மையங்கள் போன்றவற்றை நடாத்துவதாகவும், பிரித்தானிய இராணுவத்தைவிட சிங்கள இராணுவத்தினர் எண்ணிக்கையில் அதிகம் காணப்படுவதாகவும் பிரித்தானிய நீதிமன்றம் தெரிவித்துள்ளது.

இலங்கையின் வடக்கில் வாழும் ஐந்து பொதுமக்களுக்கு ஒரு இராணுவ வீரர் என்ற நிலை காணப்படுவதாகவும் பிரித்தானிய நீதிமன்றம் தெரிவித்துள்ளது.

இலங்கையில் ஒவ்வொரு ஆண்டும் காணாமற்போதல் சம்பவங்கள் குறைவதற்குப் பதிலாக அதிகரித்துச் செல்கிறது. குறிப்பாக இலங்கையில் சமாதானம் நிலவும் தற்போதைய நிலையில் மனித உரிமை மீறல்கள் மேலும் அதிகரித்துள்ளன என பிரித்தானிய நீதிமன்றம் சுட்டிக்காட்டியுள்ளது.

பிரான்சிஸ் ஹரிசன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இனப்பிரச்சினை தீர்வுத் திட்டமொன்றை முன்வைக்கவுள்ளதாம் ஜே.வி.பி.கட்சி

தேசிய இனப்பிரச்சினைக்கு ஜே.வி.பி. கட்சி தீர்வுத்திட்ட மொன்றை முன்வைக்கவுள்ளதாக ஜே.வி.பி. நாடாளுமன்ற உறுப்பினர் விஜித ஹேரத் தெரிவித்துள்ளார்.

மாகாண சபை முறைமையை இல்லாதொழித்து அதற்குப் பதிலாக தேசிய இனப்பிரச்சினைக்குத் தீர்வுகாணும் யோசனைத் திட்டமொன்று முன்வைக்கப்படவுள்ளது.

எதிர்வரும்23 ஆம் திகதி இனப்பிரச்சினைக்குத் தீர்வு காணும் ஜே.வி.பியின் தீர்வுப்பொதி குறித்த ஆவணம் வெளியிடப்படவுள்ளது.

83 கறுப்பு ஜூலை வன்முறைகள் இடம்பெற்று 30 ஆண்டுகள் பூர்த்தியாகவுள்ள நிலையில் அந்த வடுக்களை நீக்கக்கூடிய வகையிலான தீர்வுத் திட்டமொன்று முன்வைக்கப்படும் என அவர் தெரிவித்துள்ளார்.

தமிழ், சிங்கள, முஸ்லிம் மக்களிடையே தேசிய ஐக்கியத்தைக் கட்டியெழுப்பவேண்டும். மாகாண சபைகளை இல்லாதொழித்து தமிழ்மக்களின் பிரச்சினைகளுக்கு குறுகிய கால மற்றும் நீண்டகால அடிப்படையில் தீர்வுத்திட்டங்களை முன்வைக்க வேண்டும். இந்தத் தீர்வுப்பொதி குறித்து பல்வேறு தரப்பினரதும் கருத்துக்கள் கோரப்படும் என அவர் குறிப்பிட்டுள்ளார். (அ-2)

# 13 ஆவது திருத்தச் சட்டம் குறித்து எனக்கு எதுவும் தெரியாது

## மனந்திறந்தார் கே.பி

(கொழும்பு)

தமிழ்மக்களுக்குஅதிகாரப்பகிர்வை வழங்குவதற்காக உருவாக்கப்பட்ட 13 ஆவது திருத்தச் சட்டம் குறித்து தனக்கு எதுவுமே தெரியாது என்று கே.பி எனும் குமரன் பத்மநாதன் தெரிவித்துள்ளார்.

விடுதலைப் புலிகளின் முன்னாள் அனைத்துலக நிதிப் பொறுப்பாளரான குமரன் பத்மநாதனின் பேட்டி திவயின பத்திரிகையில் வெளிவந்துள்ளது.

இந்தப் போட்டியின் போது 13 ஆவதுதிருத்தச்சட்டம்குறித்து அவரிடம் கேட்கப்பட்ட கேள்விக்கு அது தொடர்பில் தனக்கு எதுவுமே தெரியாது என்றும் குறித்த திருத்தச்சட்டம் தொடர்பில் இனிமேல் தான் ஆராய்ந்து பார்க்க வேண்டும் என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

மேலும் தான் ஒருபோதும் அரசியலுக்கு வரப்போவதில்லை என்றும் அவர் திட்டவட்டமாக தெரிவித்துள்ளார்.

தொடர்ந்தும் கருத்து தெரிவித்த அவர்,

அரசியலைவிட தனக்கு சமூக சேவையிலேயே நாட்டம் அதிகம் இருப்பதாகவும் அரசியலுக்கு வரும் எண்ணமே தனக்கு இல்லை என்றும் தெரிவித்துள்ளார்.

உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு ஊடகங்கள் தன்னைப் பற்றி எவ்வாறு எழுதினாலும் தான் கவலைப்படப் போவதில்லை என்று தெரிவித்துள்ள அவர், பாதிக்கப்பட்ட மக்களுக்கான சமூக சேவைகளை முன்னெடுப்பதே தனது நோக்கம் என்றும் குறிப்பிட் டார். (அ-2)

# சந்தேக நபர்களுக்கு ஆட்பிணை வழங்கியது மன்று

(கரவெட்டி)

வடமராட்சி துன்னாலை வேம்படி பகுதியில் இரு தரப்பினருக்கு இடையில் ஏற்பட்ட மோதல் சம்பவத்தில் இரு தரப்பையும் சேர்ந்த நான்கு சந்தேக நபர்களை தலா 25 ஆயிரம் ரூபா பெறுமதியான ஒரு ஆட்பிணையில் செல்ல பருத்தித்துறை நீதிமன்றம் கடந்த வெள்ளிக்கிழமை உத்தரவிட்டுள்ளது.

துன்னாலை வேம்படி பகுதியில் கடந்த மாதம் இரு தரப்பினருக்குமிடையே ஏற்பட்ட மோதல் சம்பவத்தில் இரு தரப்பையும் சேர்ந்த இருவர் காயத்திற்கு உள்ளாகினர்.

இச்சம்பவம் தொடர்பாக நெல்லியடி பொலிஸாரால் இருதரப்பையும் சேர்ந்த நான்கு சந்தேக நபர்கள் கைது செய்யப்பட்டு பருத்தித்துறை நீதிமன்றினால் 14 நாட்கள் விளக்கமறியலில் வைக்கப்பட்டிருந்தனர்.

இவ்வழக்கு விசாரணை நேற்று முன்தினம் பருத்தித்துறை நீதவான் நீதிமன்ற நீதவான் திருமதி ஸ்ரீநிதி நந்தசேகரம் முன்னிலையில் மீண்டும் விசாரணைக்காக எடுத்துக் கொள்ளப்பட்டது.

இதன் போது ஒரு தரப்பைச் சேர்ந்த மூன்று சந்தேக நபர்களையும் மறு தரப்பைச் சேர்ந்த ஒரு சந்தேக நபரையும் பிணையில் விடு வித்ததுடன் வழக்கை மறுதவணைக்கு நீதவான் ஒத்தி வைத்தார். (ம-24)

# கடல் வழியாக உலகை சுற்றி வந்த மூதாட்டி

லண்டனைச் சேர்ந்த 70 வயது பெண் தன்னந்தனியாக கடல் வழியாக உலகை சுற்றி வந்து சாதனை படைத்துள்ளார்.

மேற்குலண்டனைசேர்ந்தஜியேன் சாக்ராட்டீஸ் என்ற இப்பெண் கடந்த ஆண்டு ஒக்டோபர் மாதம் கனடாவிலுள்ள விக்டோரியா துறைமுகத்தில் இருந்து இந்த சாகச பயணத்தைத்தொடங்கினார்.

இவர் தன்னந்தனியாக கடல் வழியாக 25 ஆயிரம் மைல் பயணித்து உலகை சுற்றி வந்து 259 நாட்களில் இந்த சாதனையைப் படைத்துள்ளார்.

இதன் மூலம் கடல் வழியாக தன்னந்தனியாக உலகை சுற்றி வந்த அதிக வயதான பெண் என்ற புதிய சாதனையையும் இவர் ஏற்படுத்தியுள்ளார். (அ-2)




❖1240 - அலெக்சாண்டர் நெவ்ஸ்கி தலைமையிலான ரஷ்யப் படைகள் சுவீடன் படைகளை "நேவா" என்ற இடத்தில் இடம்பெற்ற சமரில் தோற்கடித்தனர்.

❖1381 - லண்டனில் உழவர்களின் கிளர்ச்சிக் குத் தலைமை வகித்த "ஜோன் போல்" என்ற மதகுரு இரண்டாம் ரிச்சார்ட் மன்னனின் முன்னிலையில் தூக்கிலிடப்பட்டார்.

❖1741 -அலெக்சி சிரிக்கொவ் தென்மேற்கு அலாஸ்காவைக் கண்ணுற்று தனது ஆட்கள் சிலரை படகில் அங்கு அனுப்பினார். இவர்களே முதன் முதலில் அலாஸ்காவில் தரையிறங்கிய முதலாவது ஐரோப்பியரகள் ஆவர்.

❖1815 - நெப்போலியன் பொனபார்ட் பெலெரொபோன் என்ற கப்பலில் இருந்து அதன் கப்டனிடம் சரணடைந்தான்.

❖1840 - ஆஸ்திரியா, பிரித்தானியா, புருசியா, மற்றும் ரஷ்யா ஆகியன ஓட்டோமான் பேரரசுடன் லண்டனில் அமைதி ஒப்பந்தத்தை ஏற்படுத்தின.

❖1857 - சிப்பாய்க் கலகம்: கான்பூரில் இரண்டாவது படுகொலைகள் இடம்பெற்றன.

❖1860 - இலங்கையின் பிரதம நீதியரசராக சேர் எட்வேர்ட் ஷெப்பர்ட் கிறீசி நியமிக்கப்பட்டார்.

❖1870 - புரூசியாவும் இரண்டாம் பிரெஞ்சுப் பேரரசும் தமக்கிடையே போரை ஆரம்பித்தன.

❖1870 - அமெரிக்க உள்நாட்டுப் போர்: ஜோர்ஜியா அமெரிக்கக் கூட்டணியில் மீண்டும் இணைந்தது. அமெரிக்க மாநிலங்களின் கூட்டமைப்பு கலைக்கப்பட்டது.

❖1888 - ஜப்பானின் பண்டாய் எரிமலை வெடித்ததில் 500 பேர் உயிரிழந்தனர்.

❖1916 -வோஷிங்டன், சியாட்டில் நகரில் வில்லியம் போயிங், ஜோர்ஜ் வெஸ்டர் வெல்ட் போயிங் விமான நிறுவனத்தை ஆரம்பித்தனர்.

❖1954 - இரண்டு வருட உருவாக்கத்தின் பின்னர் ஐக்கிய அமெரிக்காவின் போயிங் 707 விமானம் பறக்கவிடப்பட்டது.

❖1955 -அணுவாயுதங்களுக்கு எதிராக 18 நோபல் விருதாளர்கள் உடன்படிக்கையில் கைச்சாத்திட்டனர்.

❖1974 - சைப்பிரஸ், நிக்கோசியாவில் கிரேக்க ஆதரவு தேசியவாதிகள் ஜனாதிபதி மக்காரி யோசைப் பதவியில் இருந்து அகற்றி நிக்கோஸ் சாம்ப்சனை ஜனாதிபதியாக்கினர்.

❖1991 - ஈழத்து எழுத்தாளர் நெல்லை க. பேரன் எறிகணை வீச்சில் குடும்பத்தோடு கொல்லப்பட்டார்.

❖2002 - வோல் ஸ்ட்றீட் ஜேர்னல் ஊடகவியலாளர் டானியல் பேர்ளப்பைப் படுகொலை செய்த குற்றத்துக்காக பிரித்தானியாவில் பிறந்த "அகமது ஷேக்" என்பவனுக்கு பாகிஸ்தான் நீதிமன்றம் தூக்கு தண்டனை வழங்கித் தீர்ப்பளித்தது.

❖2003 - மொசில்லா நிறுவனம் ஆரம்பிக்கப்பட்டது.

### பிறப்புகள்

❖1606 - ரெம்பிரான்ட், டச்சு ஓவியர் (இ. 1669)

❖1876 -மறைமலை அடிகள், தனித்தமிழ் இயக்கத்தை ஆரம்பித்தவர் (இ. 1950)

❖1903 - கே. காமராஜ், தமிழ்நாட்டின் முன்னாள் முதல்வர் (இ. 1975)

❖1926 - கே. ஷங்கர், தமிழ்த் திரைப்பட இயக்குநர் (இ. 2006)

### இறப்புகள்

❖1904 - அன்ரன் செக்கோவ், ரஷ்ய எழுத்தாளர் (பி. 1860)

❖1991 - நெல்லை க. பேரன், ஈழத்து எழுத்தாளர் (பி. 1946)

❖2002 - எம். எச். எம். ஷம்ஸ், இலங்கையின் ஊடகவியலாளர் (பி. 1940)

❖2003 - என். கே. பத்மநாதன், ஈழத்தின் பிரபல நாதஸ்வரக் கலைஞர் (பி. 1931)

## மறைமலை அடிகள்



மறைமலை அடிகளின் இயற்பெயர் வேதாசலம். இவர் 1876 ஜூலை 15 ஆம் திகதி திருக்கழுக்குன்றத்திலே பிறந்தார். இவர் தந்தையார் சொக்கநாதர், தாயார் சின்னம்மையார். தந்தையார் நாகப்பட்டினத்தில் அறுவை மருத்துவராய் பணியாற்றி வந்தார். பல்லாண்டுகள் பிள்ளைப்பேறு இல்லாமல் இருந்து திருக்கழுக்குன்றம் சிவன் வேதாசலரையும் அம்மை சொக்கம்மையையும் வேண்டி நோன்பிருந்து பிள்ளைப்பேறு பெற்றதால், தம்பிள்ளைக்கு வேதாசலம் என்று பெயரிட்டார். பின்னர் தனித்தமிழ்ப்பற்று காரணமாக 1916 இல் தம் பெயரை மறைமலை என மாற்றிக்கொண்டார்.

மறைமலை அடிகள், நாகையில் வெசுலியன் தொண்டு நிறுவனக் கல்லூரியைச் சேர்ந்த உயர்நிலைப்பாடசாலையில் நான்காம் வகுப்பு வரை படித்தார். அவருடைய தந்தையாரின் மறைவு காரணமாக அவரால் பாடசாலைப்படிப்பைத் தொடர முடியவில்லை. சென்னைக்கு வந்த பின்னர் கிறிஸ்தவ கல்லூரியில் வீ.கோ.சூரியநாராயண சாத்திரியாருடன் தமிழாசிரியராகப் பணிபுரிந்தார்.1905 இல் சைவ சித்தாந்த மகா சமாசம் என்ற அமைப்பைத் தோற்றுவித்தார்.

மறைமலை அடிகள் புகழ் பெற்ற தமிழறிஞர், தமிழ் ஆய்வாளர். தமிழையும் வடமொழியையும் ஆங்கிலத்தையும் நன்கு கற்றவர். உயர்தனிச் செம்மொழியாம் தமிழை, வடமொழிக்கலப்பின்றித் தூய நடையில் எழுதி பிறரையும் ஊக்குவித்தவர். சிறப்பாக தனித்தமிழ் இயக்கத்தைத் தொடங்கி தமிழைச் செழுமையாக வளர்த்தவர். சமயப் பற்று உண்டாகும் வகையில் சொற்பொழிவுகள் ஆற்றுவதில் வல்லவர். சைவத் திருப்பணியும், சீர்திருத்தப் பணியும் செவ்வனே செய்து தமிழர்தம் உள்ளங்களில் நீங்காத இடம் பெற்றவர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வடக்கு நெடுஞ்சாலை அமைக்கும் பணி இரு சீன நிறுவனங்களிடம் ஒப்படைப்பு


(கொழும்பு)

**போரினால் பாதிக்கப்பட்ட வடக்குப் பகுதியை தென்பகுதியுடன் இணைக்கும் அதிவேக நெடுஞ்சாலையை அமைக்கும் பணியை இரண்டு சீன நிறுவனங்களிடம் ஒப்படைக்க அமைச்சரவையில் முடிபு செய்யப்பட்டுள்ளது.**

வடக்குக்கான அதிவேக நெடுஞ்சாலையின் 100 கிலோமீற்றர் பகுதியை அமைக்கும் 1.5 பில்லியன் டொலர் திட்டத்தை சைனா மேர்ச்சன்ட் ஹோல்டிங்ஸ், சைனா மேர்ச்சன்ட்ஸ் ஹுவாஜியான் முதலீட்டு நிறுவனம் ஆகியவற்றுக்கு அளிக்கும் உடன்பாட்டுக்கு அங்கீகாரம் அளிக்கும்படி ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ அமைச்சரவையிடம் அனுமதி கோரியிருந்தார்.

இந்தத் திட்டத்திற்கான நிதியை குறித்த இரண்டு நிறுவனங்களே முதலீடு செய்யவுள்ளதாக அமைச்சரவைப் பேச்சாளர் கெஹலிய ரம்புக்வெல தெரிவித்துள்ளார்.

எனினும் வடக்குக்கான அதிவேக



நெடுஞ்சாலையின் முதற்கட்டப் பணிகளுக்கான செலவு எவ்வளவு என்பதை பகிரங்கப்படுத்த அவர் மறுத்து விட்டார்.

இந்தத் திட்டத்தை மதிப்பீடு செய்து முதலாவது மற்றும் இரண்டாவது கட்டத்தின் திட்டமிடல், வடிவமைப்பு, நிதியிடல், கட்டுமானம், செயற்பாடு குறித்து முடிபுகளை எடுக்க பேச்சுக் குழு மற்றும் திட்டக்குழு என்பனவற்றை அமைச்சரவை நியமித்துள்ளது. திட்டத்தின் முதற்கட்டம் நான்கு கட்டங்களாக அமைக்கப்படவுள்ளன.

1.5 பில்லியன் பெறுமதியான முழுமையான திட்டம் எதிர்வரும் 2016 இல் நிறைவடையும் என்று நிதிய மைச்சின் செயலர் பி.பி. ஜயசுந்தர தெரிவித்துள்ளார். போர்முடிக்குவந்த பின்னர் இலங்கைக்கு கடன் வழங்கும் பெரிய நாடாகசீனாஉருவெடுத்துள்ளது.

கடந்த 2008 ஆம் ஆண்டில் இருந்து 8 பில்லியன் டொலரை இலங்கைக்கு கடனாக சீனா வழங்கியுள்ளமை குறிப்பிடத்தக்கது. (அ-2)

# மாகாண சபை தேர்தலில் எம்.பி.க்கள் போட்டியிட முடியாது- அரசு தீர்மானம்

நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கும்அமைச்சர்களுக்கும்மாகாண சபைத் தேர்தல்களில் போட்டியிடச் சந்தர்ப்பம் வழங்குவதில்லை என்று அரசாங்கம் தீர்மானித்துள்ளது.

அதேபோல் மாகாண சபைத்தேர்தலில் போட்டியிடும் நோக்கில் எதிர்க்கட்சி நாடாளுமன்ற உறுப்பினர்கள் தமது பதவியை இராஜினாமா செய்துவிட்டு அரசுடன் இணைந்து கொள்ள உத்தேசித்துள்ளவர்களுக்கும் மாகாண சபைத்தேர்தல்களில் போட்டியிடச் சந்தர்ப்பம் வழங்கப் படமாட்டாதெனவும் அரசாங்கம் தீர்மானித்துள்ளதாக தெரியவருகிறது.

முன்னர் மாகாண சபைகளைப் பிரதிநிதித்துவப்படுத்தி அதன் பின்னர் அப்பதவியை இராஜினாமா செய்துவிட்டு கடந்த நாடாளுமன்றத் தேர்தலில் போட்டியிட்டு வெற்றி பெற்ற சில எம்.பி.க்களும் அமைச்சர்களும் தற்பொழுது தமது பதவிகளை இராஜினாமா செய்துவிட்டு வடமேல் மற்றும் மத்திய மாகாண தேர்தல்களில் போட்டியிட முன்வந்துள்ளமையை முன்னாள் மாகாண சபைகளின் உறுப்பினர்களும் அமைச்சர்களும் விரும்பவில்லை.

அவர்கள் கூட்டாக சேர்ந்து இது குறித்து தமது எதிர்ப்பை அரசின் உயர்மட்டத்துக்கு தெரிவித்தமையாலேயே இந்நடவடிக்கைஎடுக்கப்பட்டுள்ளதாக அரச வட்டாரங்கள் தெரிவிக்கின்றன. (அ-2)

# 13 ஆவது திருத்தத்தை நீக்கினால் வீதியில் இறங்கிப் போராடுவோம்

## எதிர்க்கட்சி தலைவர் எச்சரிக்கை

(கொழும்பு)

13 ஆவது திருத்தச் சட்டத்தில் மாற்றம் செய்தால் வீதியில் இறங்கி போராட நேரிடும் என ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவர் ரணில் விக்கிரம சிங்க தெரிவித்துள்ளார்.

இலங்கைக்கு அண்மையில் விஜயம் மேற்கொண்டிருந்த சிவ்சங்கர் மேனன் எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்கிரம சிங்கவை சந்தித்துக் கலந்துரையாடிய போதே மேற்குறித்த நிலைப்பாட்டை ரணில் மேனனிடம் எடுத்துக் கூறியுள்ளார்.

இவ் விடயம் தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்,

13 ஆவது திருத்தச்சட்டத்தை பாதுகாக்க சகல வழிகளிலும் முயற்சி எடுக்கப்படும்.

முன்னாள் ஜனாதிபதி ஜே.ஆர் ஜயவர்த்த னவினால் கைச்சாத்திட்ட உடன்படிக்கையை இரத்துச் செய்ய அனுமதிக்கப் போவதில்லை.

13 ஆவது திருத்தச் சட்டத்தில் மாற்றங்களைக் கொண்டு வர அரசாங்கம் முயற்சித்தால் அதற்கு எ்திராக போராட்டங்கள் வெடிக்கும்.

ஜே.ஆர்.ஜயவர்த்தன கையெழுத்திட்ட உடன் படிக்கையில் மாற்றங்களை ஏற்படுத்த அரசாங்கத்திற்கு எந்த வகையிலும் இடமளிக்கப் போவதில்லை என்றார்.

இதேவேளை 13 ஆவது திருத்தச் சட்டம் தொடர்பான ஐக்கிய தேசியக் கட்சியின் நிலைப்பாட்டை இந்திய தேசியப் பாதுகாப்பு ஆலோசகர் சிவ்சங்கர் மேனன் வெகுவாக பாராட்டியுள்ளார். (அ-2)

# கொரிய வேலைவாய்ப்புக்காக புதிய விசா நடைமுறை அறிமுகம்

தென்கொரிய வேலைவாய்ப்புக்காக செல்வோருக்கு புதிய விசா முறை அறிமுகம் செய்யப்பட்டுள்ளது.

தென்கொரியாவுக்கு வேலைவாய்ப்புக்காகச் செல்பவர்களுக்காக தற்போது வழங்கப்பட்டு வரும் விசா முறையை விட மிகவும் சாதகமான முறையில் இலங்கையர்களுக்கு வேலைவாய்ப்பை பெற்றுக் கொள்வதற்கு ஏதுவாக புதிய விசா முறையொன்றை அறிமுகப்படுத்த இருப்பதாகவெளிநாட்டுவேலைவாய்ப்புஊக்குவிப்பு அமைச்சர் டிலான் பெரேரா தெரிவித்துள்ளார்.

தென்கொரிய கடற்றொழில் தகவல் தொலைத்தொடர்பு திணைக்களத்தின் பொது முகாமையாளர் லீ சியோங் ஜொங், தென்கொரிய சட்டமா அதிபர் திணைக்களத்தின் அதிகாரிகள் இருவருடன் நடத்திய பேச்சுவார்த்தையின் பின்னரே இத் தகவலை அமைச்சர் தெரிவித்துள்ளார்.

புதிய விசாநடைமுறையின் ஊடாக தென்கொரியாவில் மீன்பிடித்துறையில் இலங்கையர்களுக்கு அதிகளவு வேலைவாய்ப்புக்களைப் பெற்றுக் கொடுக்க நடவடிக்கை எடுக்கப்படவுள்ளது. இதற்காக சட்டரீதியான நடைமுறைச் சாத்தியமான விடயங்கள் ஆராயப்பட்டு வருகின்றன.

அதுவரை தற்போது நடைமுறையில் உள்ள விசா முறையே அமுலில் இருக்கும்.ஈ9 விசா முறையின் ஊடாக தென்கொரிய புரீட்சையில் சித்தி பெற்றவர்களுக்கு மட்டுமே வேலைவாய்ப்புக்கள் வழங்கப்படவுள்ளன. (அ-2)

# தற்காலிக அ.அட்டையை வழங்க நடவடிக்கை

(கொழும்பு)

மாகாணசபைத்·தேர்தலில் வாக்களிக்க ஆளடையாளத்தை உறுதிப்படுத்தும் ஆவணங்கள் இல்லாதவர்கள் தமது பகுதி கிராமசேவகரிடம் தற்காலிக ஆளடையாளத்தை உறுதிப்படுத்தும் ஆவணமொன்றைப் பெற்றுக்கொள்ள முடியுமென தேர்தல்கள் திணைக்களம் அறிவித்துள்ளது.

கிராமசேவகரிடம் தற்காலிக ஆளடையாளத்தை உறுதிப்படுத்த விரும்புவர்கள் 1 X 1 1/4 சென்ரிமீற்றர் அளவு கொண்ட புகைப்படத்தையும் தமது பெயர் மற்றும் விபரங்களையும் ஒப்படைக்க வேண்டும்.

தேர்தல்களில் வாக்களிக்க தேசிய அடையாள அட்டை, செல்லுபடியான கடவுச் சீட்டு, சாரதி அனுமதிப் பத்திரம் ஓய்வூதிய அடையாள அட்டை ஆகியவற்றை சமர்ப்பிக்க வேண்டும்.

மேற்கூறிய ஆவணங்கள் இல்லாதவர்கள் கிராமசேவகரிடம் ஆளடையாளத்தை நிரூபிக்கும் தற்காலிக ஆவணத்துக்கு விண்ணப்பிக்க முடியும். (அ-2)

# 6 ஆயிரம் மாத்திரைகளுடன் பாகிஸ்தான் பிரஜை கைதானார்

(கொழும்பு)

பாகிஸ்தான் பிரஜையொருவர் 6 ஆயிரம் மாத்திரைகளுடன் கட்டுநாயக்க சர்வதேச விமான நிலையத்தில் வைத்து கைது செய்யப்பட்டுள்ளார்.

மாத்திரைகளை பயணப் பொதியில் மறைத்து வைத்து நேற்றைய தினம் கொண்டு வந்தபோதே சுங்க போதைப்பொருள் கட்டுப்பாட்டு பிரிவு அதிகாரிகள் அவற்றை மீட்டுள்ளதுடன் அவரையும் கைது செய்தனர்.

மூன்று இலட்சம் ரூபா பெறுமதியான இந்த மாத்திரைகள் மன நோயாளிகள் சிகிச்சைக்கு பயன்படுத்துகின்ற மாத்திரைகளாகும். எனினும் அந்த மாத்திரைகளை மாணவர்கள் பயன்படுத்துவதாக வதந்தி நிலவுகிறது.

ஓமன் ஏர்வேஸ் விமானத்தில் மஸ்கட்டிலிருந்து நேற்றுக்காலை வந்து இறங்கிய போதே அவர் கைது செய்யப்பட்டார். (அ-2)

# இணையவழி ஓவிய கண்காட்சி

(யாழ்ப்பாணம்)

ஐ.எ.ரி சித்திரப் பயிற்சி நிறுவனம் இணையவழி ஓவியக் கண்காட்சி ஒன்றை ஏற்படுத்தியுள்ளது.

இன்று முதல் ஆரம்பமாகும் இக் கண்காட்சியில் இந் நிறுவனத்தின் சான்றிதழ் பயிற்சிநெறி, மாணவர்களின் ஓவியங்கள் காட்சிப்படுத்தப்பட்டுள்ளன.

www. iatart.webs.com எனும் நிறுவன இணையத்தளமூடாக இக்கண்காட்சியைப் பார்வையிட முடியும் என நிறுவன இயக்குநர் அறிவித்துள்ளார். (அ)

# கபே அமைப்பின் ஏற்பாட்டில் நேற்று கருத்தரங்கு

(குருமன்காடு)

வவுனியாவில் சுதந்திரமும் நீதியுமான தேர்தலுக்கான மக்கள் இயக்கம் இலங்கை மனித உரிமைகள் நிலையம் மற்றும் ஆட்பதிவு திணைக்களத்துடன் இணைந்து தெளிவூட்டல் கருத்தரங்கு ஒன்றை நேற்று முன்தினம் நடத்தியது.

கபே அமைப்பு மற்றும் மனித உரிமைகள் நிலையம், ஆட்பதிவு திணைக்களம் முதலானவை இணைந்து அரச சேவையில் உள்ள உத்தியோகத்தர்களுக்கு தெளிவூட்டல் கருத்தரங்கு ஒன்றை வவுனியா மாவட்ட செயலகத்தில் நேற்று முன்தினம் நிகழ்த்தினர்.

இந்நிகழ்வில் கலந்து கொண்ட கபே அமைப்பின் நிறைவேற்று பணிப்பாளர் கீர்த்தி தென்னக்கோன் தெரிவிக்கையில்,

கடந்த வருடம் கபே அமைப்பு முல்லைத்தீவு,மன்னார் மாவட்டங்களில் நடமாடும் சேவையை நடத்தி 10 ஆயிரத்து 564 பேருக்கு ஆட்பதிவு அடையாள அட்டை, பிறப்பு சான்றிதழ், இறப்பு சான்றிதழ், திருமண சான்றிதழ் என்பவற்றைப் பெற்று கொடுத்தது.

2012 வாக்காளர் இடாப்பின்படி 85 ஆயிரத்திற்கு மேற்பட்டவர்களுக்கு அடையாள அட்டை மற்றும் ஏனைய சான்றுகள் இல்லை.

இந்த மக்களுக்கு சிவில் அமைப்பு என்ற வகையில் அடையாள அட்டை பெற்று கொடுப்பதற்கான செயற்பாடுகளை மேற்கொண்டு வருகின்றோம்.

இவர்களால் எதிர்வரும் தேர்தலில் இவ் அடையாள அட்டையைப் பயன்படுத்த முடிவதோடு இனி வரும் காலங்களில் அனைத்து தேவைகளுக்கும் இவ் அடையாள அட்டையே பயன்படுத்த முடியுமெனவும் கூறினார்.

இந்நிகழ்வில் ஆட்பதிவு திணைக்கள ஆணையாளர், உதவி ஆணையாளர் அடையாள அட்டையின் அவசியத்தை வலியுறுத்தினர்.

வன்னி மாவட்டத்தைச் சேர்ந்த பிரதேச செயலர் , கிராமசேவகர், ஆட்பதிவு திணைக்கள உத்தியோகத்தர்கள் மற்றும் பொலிஸ் அதிகாரிகள் இந்நிகழ்வில் கலந்து கொண்டனர். (அ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தனி ஈழம் அமைப்பது குறித்து கருத்து கணிப்பு நடத்த வேண்டும்


ஈழத்தமிழர் விடயத்தில் மத்திய அரசு உறுதியான நிலைப்பாடு எடுக்க வேண்டும் என்று நம்பிக்கை தெரிவித்ததோடு ஜெயலலிதா தமிழர்களுக்கு அதிகாரத்தை பகிர்ந்தளிக்க இலங்கை அரசு அக்கறை காட்டவில்லை என்றும் தெரிவித்துள்ளார்.

(சென்னை)

**இலங்கையில் 13 ஆவது சட்ட திருத்தத்தை நீர்த்துப் போகச் செய்யும் முயற்சியைத் தடுக்க வேண்டும் என்று பிரதமரை முதல்வர் ஜெயலலிதா வலியுறுத்தி கேட்டுக் கொண்டுள்ளார். இது தொடர்பாக அவர் நேற்றைய தினம் பிரதமர் மன்மோகன் சிங்குக்கு எழுதியுள்ள கடிதத்திலேயே இவ்வாறு கூறியுள்ளார். அதில் அவர் தெரிவித்துள்ள விடயங்கள் வருமாறு, தமிழர்களுக்கு கிடைக்கும் ஒரு சில அரசியல் உரிமைகளையும் பறிக்க இலங்கை அரசு முயற்சி செய்வதாகவும் ஜெயலலிதா தெரிவித்துள்ளார்.**

இலங்கை அரசின் நடவடிக்கை தமிழர்களை மீண்டும் அடிமைப்படுத்தும் வகையில் உள்ளது என்றும் தமிழர்களின் பாதுகாப்புக்கு பங்கம் ஏற்படுத்தும் வகையில் இலங்கை செயற்படுகிறது என்றும் ஜெயலலிதா அதில் குறிப்பிட்டுள்ளார்.

மேலும் இலங்கையில் இன்னும் தமிழர்கள் மீதான கொடுமைகள், துன்புறுத்தல்கள் தொடர்ந்து நடந்து வருகின்றன. அங்கு சிங்களவர்களுக்கு இணையான சமஉரிமை அந்தஸ்தை தமிழர்களுக்கு வழங்குவதற்கான அடையாளங்கள் எதுவும் தெரியவில்லை. மேலும் தன்னாட்சி உரிமை மற்றும் ஜனநாயக உரிமைகளையும் மாற்றம் செய்யும் நடவடிக்கை மேற்கொள்ளப்படுகின்றது.

கடந்த மார்ச் மாதம் 27 ஆம் திகதி தமிழக சட்டசபையில் தனி தமிழ் ஈழ தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. தனி ஈழம் குறித்து உலக தமிழர்களிடையே கருத்துக் கணிப்பு நடத்த வேண்டும். இதையேதான் இலங்கைத் தமிழர்களும் விரும்புகின்றனர்.

அதே நேரத்தில் இலங்கையின் அரசியல் சட்டமான 13 ஆவது சட்ட திருத்தம் கவலைக்குரியதாகவுள்ளது. இலங்கை தமிழர்களுக்கு தன்னாட்சி உரிமை வழங்கும் 13 ஆவது சட்டத்தை திருத்த வலியுறுத்தி இலங்கை அரசு போராட்டம் நடத்தியுள்ளது.

எதிர்வரும் செப்டெம்பரில் வடக்கு மாகாண சபை தேர்தல்கள் நடைபெறவுள்ளன. இந்நிலையில் இலங்கை பாதுகாப்புச் செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷ இந்த சட்டத்தை திருத்த வேண்டும் என பகிரங்கமாகவே தெரிவித்துள்ளார்.

சமீபத்தில் இந்தியா வந்த இலங்கை பொருளாதார அபிவிருத்தி அமைச்சர் பசில் ராஜபக்ஷ வெளியுறவு அமைச்சர் சல்மான் குர்சித்தை சந்தித்து பேசிய போது சட்ட திருத்தம் செய்வதை நியாயப்படுத்தியுள்ளார். 1987 ஆம் ஆண்டு உருவான இந்திய- இலங்கை ஒப்பந்தத்தின் படி 13 ஆவது திருத்தச் சட்டப் பிரிவு உருவானது. அதன் மூலம் இலங்கைத் தமிழர்களுக்கு சம உரிமை, பாதுகாப்பு, மதிப்பு, மரியாதை ஏற்படும் வாய்ப்புள்ளது. ஆனால் இலங்கை அரசு தமிழர்களுக்கு அதிகாரம் வழங்குவதில் தீவிர நடவடிக்கை மேற்கொள்ள வில்லை.

வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களை ஒன்றிணைத்து ஒரே நிர்வாகத்தின் கீழ் கொண்டு வரவேண்டும் என்றும் இந்த 13 ஆவது சட்டப் பிரிவில் உள்ளது. ஆனால் ஜனதா விமுக்தி பெரமுனா கட்சியின் வழக்கின் மூலம் 2007 ஆம் ஆண்டு இலங்கை உயர் நீதிமன்றம் அரசின் இந்த முடிவை இரத்துச் செய்தது.

அதனால் 2 மாகாணங்களும் இணைக்கப்படவில்லை. இதுவே இந்தோ- இலங்கை ஒப்பந்தத்துக்கு பின்னடைவை ஏற்படுத்தியது.

இலங்கையில் வடக்கு மற்றும் கிழக்கு பகுதிகளில் வாழும் பெரும்பான்மையான தமிழர்களின் வாழ்வு மற்றும் உரிமைகள் பாதுகாக்கப்பட வேண்டியது அவசியமாகும்.

அது 13 ஆவது சட்ட பிரிவினால் மட்டுமே முடியும். தற்போதுள்ள சூழ்நிலையில் தமிழர்களுக்கு அரசியல் உரிமைகளை வழங்குவதில் இலங்கை அரசு விதிவிலக்காகவுள்ளது. எனவே இலங்கையின் சட்டப்பிரிவில் திருத்தம் கொண்டு வராமல் தடுக்க மத்திய அரசு அனைத்து வகையான நடவடிக்கைகளை எடுப்பதோடு நெருக்கடிகளையும் கொடுக்க வேண்டும் என அதில் ஜெயலலிதா கூறியுள்ளார். (அ-2)

# 66ஆவது படைப்பிரிவு முகாம் அமைக்க காணி சுவீகரிப்பு

(பூநகரி)

பூநகரி நகர்ப்பகுதியில் பரந்தன் வீதியில் அமைந்துள்ள 66 ஆவது படைப்பிரிவு முகாமை விஸ்தரிப்பதற்காக அதன் சுற்றாடலில் உள்ள 12 குடும்பத்தவர்களின் வீடுகளும் அவர்களின் காணிகளும் சென்றவாரம் சுவீகரிக்கப்பட்டுள்ளன. மேற்படி காணிகளை சுவீகரிப்பதற்கான அறிவித்தல்கள் சம்பந்தப்பட்ட குடியிருப்பாளர்களுக்கு மட்டுவில் நாடு கிழக்கு கிராம சேவை அலுவலர் எஸ். தமிழினி மூலம் விடுக்கப்பட்ட நிலையில் குடியிருப்பாளர்கள் படைமுகாமுக்கு சமூகம் அளித்திருந்தனர்.

அங்கு படைமுகாம் அதிகாரிகளுக்கும் காணிச் சொந்தக்காரர்களுக்குமிடையில் இடம்பெற்ற சுமுகமான கலந்துரையாடலையடுத்து காணி மற்றும் வீட்டு உரிமையாளர்களின் சம்மதம் பெறப்பட்டு அவற்றைச் சுவீகரிப்பதற்கான ஒப்புதல் பெறப்பட்டது.

இக்கலந்துரையாடலில் அப்பிரதேச கிராம சேவை அலுவலர், பிரதேச செயலக காணி உத்தியோகத்தர், மாவட்ட காணி திணைக்கள அதிகாரிகள் ஆகியோர் கலந்து கொண்டதோடு சுவீகரிக்கப்பட்ட காணிகள் அனைத்தும் அளக்கப்பட்டு படவரைபின்படி பதிவுகள் மேற்கொள்ளப்பட்டன.

சுவீகரிக்கப்பட்ட பல காணிகளில் குடியிருப்புக்கான வீடுகள் சேதமடையாது இருக்கின்றன என்பதும் சுட்டிக்காட்டத்தக்கது.

காணிகளையும் வீடுகளையும் கையளித்தவர்களுக்கான மாற்றுக்காணிகள் வழங்குவதற்கோ நட்டஈடு வழங்குவதற்கோ நடவடிக்கை எடுக்கப்படலாம் என்று அங்கு கூறப்பட்டதாக காணிகளின் உரிமையாளர்கள் தெரிவித்துள்ளனர்.

தற்போதுள்ள பிரதான படைமுகாம் உள்ள கட்டடத்தில் போர்க்கால நடவடிக்கைக்கு முன்னர் பூநகரி அரசினர் வைத்தியசாலையே இயங்கி வந்தது.

தற்போது பூநகரி- சங்குப்பிட்டி வீதியில் வடக்கின் வசந்தம் திட்டத்தின் கீழ் பல கோடி ரூபா செலவில் வைத்தியசாலைக்காக புதிய கட்டடத் தொகுதி அமைக்கப்பட்டு நிர்மாணப் பணிகள் முடிவுற்ற நிலையில் திறப்பு விழா நடைபெறவுள்ளது. (அ-9-84)

# திறப்பு விழா

E-Transition (PVT) LTD நிறுவனம் மாணவர்களின் நலன் கருதி வன்னி மாவட்டத்தில் கிளைகளை விரிவுபடுத்தி வருவதாக இந் நிறுவன வன்னி மாவட்ட பணிப்பாளர் க.ஜசிந்தா அறிவித்துள்ளார்.

இதன்படி புதுக்குடியிருப்பு வேணாவில் பிரதேசத்தில் இன்று திங்கட்கிழமை பிற்பகல் 2.30 மணிக்கு புதிய கிளை ஒன்றைத் திறந்து வைக்கவுள்ளதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

இந் நிறுவனத்தில் தரம் ஒன்று தொடக்கம் தரம் 13 வரையிலான மாணவர்களுக்கான சகல பாடங்களும் கற்பிக்கப்படுகின்றன. அத்துடன் கணனிக்கற்கையும் இடம் பெறுகின்றது.

எனவே இந் நிலையத்தில் வறுமைக்கோட்டிற்குட்பட்ட மாணவர்கள் நேரில் சமுகமளிப்பதன் மூலம் கற்கை நெறிகளை இலவசமாகப் பயில முடியுமென அவர் அறிவித்துள்ளார். (அ-2)

# 13 ஆவது சரத்தில் மாற்றங்கள் செய்யப்படுவதை விரும்பவில்லை

## மட்டக்களப்பு மறை மாவட்ட ஆயர் தெரிவிப்பு

13 ஆவது சரத்தை நீக்குவதையும் அதில் மாற்றத்தை ஏற்படுத்துவதையும் ஒருபோதும் நாங்கள் ஏற்றுக் கொள்ளவில்லை என மட்டக்களப்பு மறை மாவட்ட ஆயரும் மட்டக்களப்பு சிவில் சமூகத்தின் போசகருமான கலாநிதி ஜோசப் பொன்னையா தெரிவித்துள்ளார். மட்டக்களப்பு சிவில் சமூகம் கடந்த வெள்ளிக்கிழமை நடத்திய ஊடகவியலாளர் சந்திப் பொன்று மட்டு. சார்ள்ஸ் மண்டபத்தில் நடை பெற்றது. இதன்போது ஆயர் மேற்கண்டவாறு கூறியுள்ளார். அவர் தொடர்ந்து உரையாற்றுகையில்,

13 ஐ நீக்குவதற்கோ அல்லது அதில் மாற்றத்தை ஏற்படுத்துவதற்கோ நாம் ஒரு போதும் விரும்பவில்லை. 13 ஆவது சரத்து தொடர்ந்திருக்க வேண்டும். இதை எமது ஆயர் பேரவையும் அண்மையில் தெரிவித்திருந்தது என ஆயர் ஜோசப் பொன்னையா மேலும் தெரிவித்தார். இதேவேளை மட்டக்களப்பு சிவில் சமூகத்தின் தலைவர் எஸ். மாமங்கராஜா கருத்துத் தெரிவிக்கையில்,

13 இல் மாற்றம் கொண்டு வருவதை எமது மட்டக்களப்பு சிவில் சமூகம் கண்டிக்கின்றது. 13 ஐ அதன் ஆரம்பத்தில் எல்லோரும் எதிர்த்தாலும் தற்போது சிறுபான்மை மக்களுக்குள்ள ஒரே ஒரு பாதுகாப்பு கவசம் இந்த 13 தான் என்பதை ஏற்றுக் கொண்டே ஆக வேண்டும்.

இதனால் சிறுபான்மை மக்களுக்குள்ள இந்த ஒரே ஒரு அதிகாரத்தையும் மாற்றுவதற்கு அல்லது அதில் திருத்தம் கொண்டு வருவதற்கு நாம் இடமளிக்க முடியாது என மட்டக்களப்பு சிவில் சமூகம் தெரிவிக்க விரும்புகின்றது.

கிழக்குப் பல்கலைக்கழகத்தின் திருகோணமலை வளாகம் ரஜரட்ட பல்கலைக்கழகத்துடன் இணைக்கப்படவுள்ளதாக சில தகவல்கள் எமக்கு கிடைக்கின்றன. இது தொடர்பாக நாங்கள் ஆராய்ந்து வருகின்றோம். அவ்வாறு கிழக்குப் பல்கலைக்கழகத்தின் திருகோணமலை வளாகம் ரஜரட்ட பல்கலைக் கழகத்துடன் இணைக்கப்படுவதை ஒருபோதும் நாம் அனுமதிக்க முடியாது.

இதை மட்டக்களப்பு சிவில் சமூகம் வன்மையாக எதிர்க்கின்றது. இவ்விடயம் தொடர்பில் மட்டக்களப்பு சிவில் சமூகத்தினால் ஜனாதிபதிக்கும் உயர்கல்வி அமைச்சருக்கும் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் தலைவருக்கும் இப்பல்கலைக்கழகம் இணைக்கப் படக்கூடாது என்பதை எழுத்து மூலம் தெரியப்படுத்தவுள்ளோம்.

கடந்த 30 வருட கால யுத்தத்தின் போது மட்டக்களப்பில் மக்களுக்கு சமயப் பிரமுகர்கள் ஆற்றிய பணிகள் மகத்தானவை.

அதனால் இங்கு வரும் அனைத்து வெளிநாட்டு இராஜதந்திரிகள், தூதுவர்கள் அனைவரும் ஆயரை சந்திப்பது ஒரு வழக்கமாக இருந்து வருகின்றது.

எனவேதான் மட்டக்களப்புக்கு வரும் வெளிநாட்டு தூதுவர்கள் மற்றும் வெளிநாட்டு இராஜதந்திரிகள் மட்டக்களப்பு ஆயரையும் சிவில் சமூகத்தினரையும் சந்திக்க வேண்டும் என்பதை எமது சிவில் சமூக அமைப்பு வலியுறுத்துகின்றது என்றார். (அ-2)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### முல்லை.மாவட்டத்தில் அனைத்து குடும்பங்களையும்

# சமுர்த்தி திட்டத்தில் உள்வாங்க வேண்டும்

(முல்லைத்தீவு)

**முல்லைத்தீவு மாவட்டத்திற்குட்பட்ட சமுர்த்தி திட்டத்திற்குள் இதுவரை உள்வாங்கப்படாது வறுமை நிலையிலுள்ள மக்களையும் சேர்த்துக் கொள்ள நடவடிக்கை எடுக்குமாறு முல்லை.மாவட்ட சமுர்த்தி உதவி ஆணையாளருக்கு மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். முல்லை.மாவட்டத்தில் 39 ஆயிரத்து 352 குடும்பங்கள் உள்ளபோதிலும் 11 ஆயிரத்து 12 குடும்பங்கள் மாத்திரமே சமுர்த்திப் பயனாளிகளாக உள்ளனர்.**



இம்மாவட்டத்திலுள்ள பிரதேச செயலர் பிரிவுகளில் மாந்தை கிழக்கு 2 ஆயிரத்து 687 குடும்பங்களில் 950 குடும்பங்களும் துணுக்காய் 3 ஆயிரத்து 584 குடும்பங்களில் ஆயிரத்து 571 குடும்பங்களும் ஒட்டுசுட்டான் 5 ஆயிரத்து 483 குடும்பங்களில் ஆயிரத்து 593 குடும்பங்களும் சமுர்த்தி பயனாளிகளாக உள்ளனர்.

அத்தோடு கரைதுறைப்பற்று பிரதேச செயலர் பிரிவில் 12 ஆயிரத்து 602 குடும்பங்களில் 4 ஆயிரத்து 412 குடும்பங்களும் புதுக்குடியிருப்பு 11 ஆயிரத்து 660 குடும்பங்களில் ஆயிரத்து 441 குடும்பங்களும் வெலிஓயா 3 ஆயிரத்து 336 குடும்பங்களில் ஆயிரத்து 45 குடும்பங்களும் சமுர்த்தி பயனாளிகளாக காணப்படுகின்றனர்.

சமுர்த்தி திட்டத்தினூடாக கல்வி கற்கும் மாணவர்கள், மாற்றுத் திறனாளிகள், கணவனை இழந்தோர் போன்ற பலருக்கு உதவித் தொகைகளும் உபகரணங்களும் வழங்கப்பட்டு வருகின்றன.

இவ்வாறான சலுகைகளை முல்லை.மாவட்டத்திலுள்ள வறுமைக் கோட்டுக்குட்பட்ட அனைத்து குடும்பங்களும் பெற்றுக் கொள்ளவில்லையென மக்களால் சுட்டிக் காட்டப்பட்டுள்ளது.

இந்நிலையை மாற்றியமைக்க முல்லை.மாவட்டத்தில் சேவையாற்றி வருகின்ற 166 சமுர்த்தி உத்தியோகத்தர்களும் கிராமங்களுக்குச் சென்று மக்களின் நிலைமைகளை நேரில் பார்வையிட வேண்டும். இதனூடாகத்தான் சமுர்த்தி திட்டத்திற்குள் உள்வாங்கப்படாத தேவையுடையோர் இனங் காணப்படுவார்கள்.

அதுமட்டுமன்றி சமுர்த்தி வங்கியானது தற்போது வெலிஓயா பிரதேச செயலர் பிரிவில் மட்டும் இயங்கி வருகின்றது. ஏனைய 5 பிரதேச செயலர் பிரிவுகளில் ஒரு பகுதியாகத்தான் சமுர்த்தி வங்கி சேவை நடைபெற்று வருகின்றது.

சமுர்த்தி வங்கிச் சேவையை அனைத்து பிரதேச செயலர் பிரிவுகளிலும் விஸ்தரித்து மக்களுக்கு உதவ முன்வர வேண்டும்.


எனவே, சமுர்த்தி திட்டத்தினுள் உள்வாங்கப்படவுள்ளவர்கள் முல்லை.மாவட்டத்தில் அதிகமாக காணப்படுகின்றனர்.

இதனைக் கருத்திற் கொண்டு சம்பந்தப்பட்டவர்கள் சமுர்த்தி திட்டத்தினூடாக கிடைக்கப் பெறுகின்ற சலுகைகளையும் உதவு தொகைகளையும் தேவையுடையோருக்கு இனங்கண்டு வழங்க ஆவன செய்ய வேண்டும் என மக்கள் வேண்டுகோள் விடுத்துள்ளனர்.

(ம-9-267)




## பாதசாரிக்கடவை; விழிப்புணர்வு தேவை



(முல்லைத்தீவு)

வீதிகளில் போடப்பட்டுள்ள பாதசாரிக்கடவைகளுக்கான முக்கியத்துவம் வழங்கப்படுவதில்லை என முல்லை.மாவட்ட பாதசாரிகள் விசனம் தெரிவித்துள்ளனர்.

முல்லைத்தீவில் வீதி அபிவிருத்தி அதிகார சபையினரால் பெரும்பாலான வீதிகள் காப்பெற் இடப்பட்டுள்ளதுடன் தேவையான இடங்களில் பாதசாரி கடவைகளையும் அமைத்துக் கொடுத்துள்ளனர்.

ஆனால், பாதசாரிக் கடவைகளினால் கடந்து செல்வது ஆபத்தாக உள்ளது என பாதசாரிகள் அச்சம் வெளி யிட்டுள்ளனர்.

வாகன ஓட்டுநர்கள் பாதசாரிக் கடவையினால் மக்கள் கடக்கின்ற வேளையிலும் வாகனங்களை செலுத்துகின்றனர். இதனால் பாதசாரிக் கடவைகளிலே விபத்து ஏற்படக் கூடிய வாய்ப்புக்கள் அதிகமாக உள்ளதென மக்களால் சுட்டிக் காட்டப்பட்டுள்ளது.

எனவே, முல்லை.மாவட்ட பொலிஸார் வாகன ஓட்டுநர்களுக்கும் மக்களுக்கும் பாதசாரிக் கடவை தொடர்பாக விழிப்புணர்வை ஏற்படுத்த வேண்டும் என மக்கள் வேண்டுகோள் விடுத்துள்ளனர்.

(9-267)

## நிறைவடையாத நிலையில் வீதி புனரமைப்பு வேலைகள்

(புளியம்பொக்கணை)

புளியம்பொக்கணை சந்தியிலிருந்து வட்டக்கச்சி செல்லும் பிரதான வீதியின் புனரமைப்பு வேலைகள் முற்றாக நிறைவடையாமல் இடைநிறுத்தப்பட்டுள்ளது.

இவ்வீதி போக்குவரத்துச் செய்ய முடியாத அளவுக்கு சேதமடைந்திருந்த நிலையில் புனரமைப்பு வேலைகள் ஆரம்பிக்கப்பட்டு கிரவல் மட்டும் இடப்பட்ட நிலையில் இடைநிறுத்தப்பட்டுள்ளது.

வீதி மருங்கில் புனரமைப்பு வேலைகளுக்காக கற்கள் குவிக்கப்பட்டுள்ள போதிலும் வீதிக்கு தற்போது கிரவல் மட்டுமே போடப்பட்டுள்ளது.

வீதியின் புனரமைப்பு வேலைகள் முற்றாக செய்து கொடுக்கப் படாவிட்டால் இனிவரும் மழை காலங்களில் போக்குவரத்தை செய்ய முடியாத நிலை ஏற்படும் எனவும் இவ்வீதியால் வெள்ளம் ஊடறுத்து பாய்வதால் அதற்கு ஏற்றால் போல் புனரமைப்புப் பணிகளை மேற்கொள்ளுமாறும் மக்கள் சம்பந்தப்பட்ட தரப்பினருக்கு வேண்டுகோள் விடுத்துள்ளனர். (ம-9-263)

## தர்மபுரம் பொதுச்சந்தையில் நீர்வசதி இன்மையால் சிரமம்

(புளியம்பொக்கணை)

கரைச்சி பிரதேச சபைக்கு சொந்தமான தர்மபுரம் பொதுச்சந்தையில் நீர் வசதி இன்மையால் வியாபாரிகள் மற்றும் நுகர்வோர் பெரும் சிரமங்களை எதிர்கொள்கின்றனர்.

மேற்குறித்த பொதுச்சந்தைக்கு முன்னர் பவுசர் மூலம் நீர் வழங்கப்பட்டது. ஆனால், தற்போது வழங்கப்படாமையால் நீர் இன்றி அல்லலுற வேண்டிய நிலை காணப்படுகின்றது.

குறிப்பாக மீன் சந்தையை கழுவி துப்புரவு செய்வதற்கும் மலசலகூடத்திற்கும் நீர் இன்மையால் கஷ்டங்களை எதிர்கொள்ள வேண்டியுள்ளது.

தற்போது வரட்சிக் காலமாகையால் அருகில் உள்ள கிணறுகளிலும் நீர் வற்றிக் காணப்படுவதால் நீரைப் பெற முடியாத நிலை காணப்படுகின்றது.

எனவே, உரியவர்கள் இதனைக் கருத்திற் கொண்டு உடன் நடவடிக்கை எடுத்து நீரைப் பெற்றுக் கொள்ள ஆவன செய்யுமாறு வியாபாரிகளும் நுகர்வோரும் வேண்டுகோள் ஒன்றை முன்வைத்துள்ளனர். (ம-263)

## ஆங்கில தின போட்டி


(சிவநகர்)

கிளிநொச்சி மாவட்ட கல்வி வலயத்தின் கரைச்சி, கண்டாவளை, பூநகரி, பளை ஆகிய கோட்டங்களுக்கான வலய மட்ட ஆங்கில தினப் போட்டிகள் இன்றும் நாளையும் கிளிநொச்சி பரந்தன் இந்து மகாவித்தியாலயத்தில் காலை 9 மணி தொடக்கம் நடைபெறவுள்ளது.

எனவே, கோட்ட மட்டங்களில் தெரிவு செய்யப்பட்ட அனைத்து மாணவர்களையும் உரிய நேரத்திற்கு தவறாது கலந்து கொள்ளுமாறு கிளிநொச்சி கல்வி வலய ஆங்கில பாட உதவிக் கல்விப் பணிப்பாளர் க.மயில்வாகனம் அறிவித்துள்ளார்.

(ம-9-254)





வவுனியா தமிழ் மத்திய மகாவித்தியாலயத்தில் கல்வி பயின்று உயர்தர பரீட்சையில் சிறப்பு சித்திகளைப் பெற்று பல்கலைக்கழகம் சென்ற மாணவர்களை கௌரவிக்கும் நிகழ்வு நேற்று பாடசாலை மண்டபத்தில் நடைபெற்றது. இந்நிகழ்வில் கல்வி அமைச்சர் பந்துல குணவர்த்தன உரையாற்றுவதையும் மாணவரொருவர் கௌரவிக்கப்படுவதையும் கலை நிகழ்வையும் படங்களில் காணலாம். (படங்கள்:- பூந்தோட்டம், குருமன்காடு செய்தியாளர்கள்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சுதந்திரமான மனிதன் என்றால், தான் சிந்தித்ததைத் செய்து முடிக்கும் வலிமை உடையவன் என்று பொருள் ~ வால்ட்டேர்

வலம்புரி

T.P : 021 567 1530

website : www.valampurii.lk


# ஜனாதிபதியையும் பாதுகாப்புச் செயலரையும் விரைவில் நீதிமன்றத்தில் நிறுத்துவேன்

## சனல் 4 பணிப்பாளர் தெரிவிப்பு

(கொழும்பு)

இலங்கையின் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவையும் பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷவையும் யுத்த நீதிமன்றத்தில் குற்றவாளிகளாக நிறுத்திய பின்னரே எனக்கு நித்திரை வரும் என சனல் 4 தொலைக்காட்சி சேவையின் பணிப்பாளர் கெலம் மக்ரே தெரிவித்துள்ளார். இவ்வாறு இலங்கைக்கு ஆதரவாக இயங்கும் பத்திரிகை செய்தி வெளியிட்டுள்ளது.

கனடாவில் நோ பயர் ஸோன் என்ற சனல் 4 தொலைக்காட்சி சேவையின் இலங்கையின் விபரணப் படம் காண்பிக்கப்பட்டது. இந்நிகழ்வின் போது அங்கு குழுமியிருந்தவர்கள் மத்தியிலேயே இந்தக் கருத்தை மக்ரே வெளியிட்டுள்ளார்.

மேலும் இணையத்தளமொன்றுக்கு அவர் அளித்த சிறப்பு பேட்டியில்.

சர்வதேச அளவிலான சுயேட்சையான விசாரணை நடத்த சர்வதேச சமூகம் தயக்கம் காண்பித்து வரும் நிலையில் தனது ஆவணப்படம் எதிர்காலத்தில் முக்கிய சான்றாக இருக்கும்.

இலங்கையில் 70 ஆயிரத்துக்கும் மேற்பட்ட அப்பாவி மக்கள் கொல்லப்பட்டதில் உலக நாடுகளுக்கும் பங்குண்டு. உலகின் மற்றப் பகுதிகளில் வசிக்கும் தமிழர்கள் குரல் கொடுத்தபோதும், உலக நாடுகள் செவி சாய்க்கவில்லை.

இறுதிப் போரில் புலிகள் முழுமையாக தனிமைப்படுத்தப்பட்டனர். மறுபுறம் இலங்கை அரசு மிகத் தந்திரமாக செயல்பட்டது.

மேலும் நம்பவே முடியாத அளவில் எதிர், எதிர் நாடுகளின் ஆதரவைப் பெற்ற இலங்கை, இந்தியா - பாகிஸ்தான், அமெரிக்கா - சீனா, இஸ்ரேல் - ஈரான் நாடுகளின் கூட்டுடன் போரை முன்னெடுத்து சென்றது. இந்த நாடுகளின் ஆதரவுடன் தான் அங்கே கொடூரமான படுகொலைகள் நடந்தன.

இலங்கை அரசு இன்னமும் மனித உரிமை மீறல்களில் ஈடுபட்டு வருகின்றது. நீதித்துறை சுயேட்சையாக செயல்படும் நிலை இல்லை.

இதுவரை இழந்திருந்த அதிகாரத்தை எப்படியாவது தக்கவைக்க அங்குள்ள அரசு செயல்பட்டு வருகின்றது. அதற்காக அனைத்து விதமான அடக்குமுறைகளும் அங்கு செயல்படுத்தப்படுகின்றது.

சிங்களமயமாதல் தொடர்ந்து நடந்து வரும் இலங்கையில், ஒரு வகையான பாசிசப்போக்கு நிலவுகின்றது.

மேலும், முஸ்லிம்கள் உள்ளிட்ட சிறுபான்மையினர் மத்தியில் அச்ச உணர்வு தூண்டப்படுகிறது. நீதித்துறை, பத்திரிகைத்துறை மீதான அத்துமீறல்களும் அதிகரித்துள்ளன.

கொழும்பில் நடக்கும் பொதுநலவாய நாடுகளின் மாநாட்டில் பங்கேற்க எனக்கும் அனுமதியளிக்கப்படவில்லை. மனித உரிமைகளை அடிப்படை நோக்கமாக கொண்ட கொமென்வெல்தின் இலட்சியத்திற்கே இலங்கை நாடு எதிராக இருக்கின்றது.

நடைபெற்ற குற்றங்களுக்கு மன்னிப்புக் கேட்டும் பெருந்தன்மை கூட இல்லாத இலங்கையில் பொதுநலவாய நாடுகளின் மாநாட்டை நடத்துவதன் மூலம் பொது நலவாய அமைப்பே கேலிக்கு உள்ளாக்கப்பட்டுள்ளது.

அடுத்த 2 ஆண்டுகளுக்கு பொது நலவாய நாடுகளின் மாநாட்டின் தலைவராக இலங்கைத் தலைவர்கள் பதவி வகிக்கவுள்ளனர். இருப்பினும் இந்த மாநாடு மூலமாக இலங்கை போர்க்குற்றங்கள் மீது உலகின் கவனம் குவியும்.

எனினும் இம் மாநாட்டின் மூலம் போர்க்குற்றங்கள் குறித்து சுதந்திரமான சர்வதேச விசாரணயை அனுமதிக்க இலங்கை அரசுக்கு மேலும் அழுத்தம் கொடுக்கலாம் என்பது சர்வதேச மனித உரிமை ஆர்வலர்களின் நம்பிக்கையாக உள்ளது.

ஆனால் இந் நாடுகள் அமைப்பின் தலைவராக இலங்கை ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ அடுத்த இரண்டு ஆண்டுகள் பதவி வகிக்கவுள்ள நிலையில் இலங்கை சர்வதேச விசாரணை நடத்துவதற்கு வலியுறுத்தப்படுமா? என்பது அவரது ஆதங்கமாகவுள்ளது. (அ-2)

## சம்பந்தர் ஐயாவின் பெருக்கல் சரி; பிரித்தல் பிழை

வகுப்பறையில் பாடம் நடக்கின்றது. உபாத்தியாயர் பிரித்தல் கணக்கை பயிற்சிக்காகக் கொடுக்கின்றார். மாணவர்களில் ஒருவன் அந்தக் கணக்கை செய்து கொண்டு வருகின்றான்.

கணக்கைப் பார்த்த ஆசிரியர் கணக்குப் பிழை என்று கூறி மாணவனைக் கடிந்து கொள்கின்றார்.

அடுத்து பெருக்கல் கணக்கை கொடுக்கிறார். அந்த மாணவன் குறித்த கணக்கை செய்து முடித்து விட்டு ஆசிரியரிடம் காட்டுகிறான்.

இந்தக் கணக்கை சரியாகச் செய்துள்ளாய் என்று கூறி சரியும் போட்டு நன்று என்றும் எழுதி விடுகிறார் ஆசிரியர்.

அருகிலிருந்த இன்னொரு மாணவன் சேர், இவன் முதலில் செய்த கணக்குப்பிழை. ஆகையால் இரண்டாவது கணக்கும் பிழை. முதல் கணக்கில் பிழைவிட்டவன் இரண்டாவது கணக்கை எப்படிச் சரியாகச் செய்யமுடியும் என்று கூறுகின்றான்.

பிழைவிட்டவன் எப்போதும் பிழைதான் என்ற அந்த மாணவனின் விதண்டாவாதத்திற்கு முடிவு கட்டுவதற்காக ஆசிரியர் அறிவுரை கூறுகிறார்.

'மாணவர்களே! ஒருபோதும் நாங்கள் சுயநலம் மிக்கவர்களாக வாழக்கூடாது. எதிலும் எப்போதும் பொது நலத்தையே நாம் நோக்க வேண்டும்.

எங்களுடைய திட்டம் நிறைவேறவேண்டும் என்பதற்காக மற்றவர்களைக் குறைகூறுவது அநீதியானது.

எது வேண்டுமானாலும் நாம் பேசலாம்; எழுதலாம் என்ற நினைப்பு இருந்தால் தர்மம் அழிந்துவிடும்.

ஒரு மாணவன் முதலில் செய்த கணக்கு பிழை என்பதற்காக அவன் எப்போதும் பிழை விடுபவன் என்ற முடிவுக்கு வருவது என்பது மகா மடமைத் தனம்.

உதாரணத்திற்கு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா. சம்பந்தன் அவர்களை எடுத்துக்கொள்ளுங்கள்.

அவர் வடக்கு மாகாணசபைத் தேர்தலில், ஓய்வுபெற்ற நீதியரசர் சி. வி. விக்னேஸ்வரனை முதன்மை வேட்பாளராக்க வேண்டும் என்ற கருத்தை முன்வைத்துள்ளார்.

இவரின் கருத்து ஏற்புடையதும் தீர்க்கதரிசனம் உடையதுமாகும்.

சம்பந்தரின் இந்த முடிபு அந்த மாணவன் சரியாகச் செய்த பெருக்கல் கணக்கிற்கு ஒப்பானது.

அதேநேரம் ஆளும்வர்க்கம் 13ம் திருத்த சட்ட மூலத்தில் கைவைக்க முற்பட, அதனை இந்தியா தடுத்தது.

அமைச்சர் பசில் ராஜபக்ஷவை இந்தியாவிற்கு அழைத்து சில விடயங்களை இறுக்கமாகக் கூறியது.

கூடவே இந்தியப் பாதுகாப்பு ஆலோசகர் மேனனை இலங்கைக்கு அனுப்பி அவர் மூலமாகவும் சில எச்சரிக்கைகளை விடுத்தது.

இந்தியாவின் கடும் பிடியால் 13வது திருத்த சட்ட மூலத்தில் எதுவும் செய்யமுடியாது என்ற நிலை இருந்தபோது,

ஜனாதிபதி கூப்பிட்டவுடன் சம்பந்தர் ஓடிப் போனமை பிழையான ஒரு செயல்.

இது இந்தியாவிற்கு அவமானத்தை ஏற்படுத்தக்கூடியது.

இந்த இடத்தில் சம்பந்தர் விட்ட பிழை குறித்த மாணவன் பிரித்தல் கணக்கில் விட்ட பிழையைப் போன்றது.

எனவே செயற்பாடுகள் நடக்கும் போது அவற்றைச் சரிபார்ப்பதும் - சரிப்படுத்துவதும் ஆசிரியர்களின் கடமை.

இந்தக்கடமையை ஆசிரியர்கள் மட்டுமல்ல; பத்திரிகை ஆசிரியர்களும் செய்தாகவேண்டும். அதனால்தான் அவர்களையும் ஆசிரியர்கள் என்று நம் தமிழ் மொழி உயர்வுபடுத்துகின்றது என்றார்' அந்த ஆசிரியர்.

## இளவரசனின் இறுதி நிகழ்வு பலத்த பாதுகாப்புடன் நடந்தது

(சென்னை)

தர்மபுரியில் சர்ச்சைக்குரிய வகையில் காதல் திருமணம் செய்துகொண்ட நிலையில் பின்னர் சந்தேகத்துக்கு இடமான வகையில் சடலமாகக் கண்டெடுக்கப்பட்ட இளவரசனின் மரணச் சடங்குகள் நேற்று பலத்த பாதுகாப்புக்கு மத்தியில் நடந்திருக்கிறது.

ஆயிரக்கணக்கானோர் அவரது உடலுக்கு அஞ்சலி செலுத்திய பின்னர் இறுதிச் சடங்கு நடந்தது.

சுமார் 3000 பேர் அவரது இறுதிச் சடங்கில் கலந்துகொண்ட போதிலும் பலத்த பாதுகாப்பு ஏற்பாடுகள் காரணமாக உறவினர்கள் பலர் அதில் கலந்து கொள்ள அனுமதிக்கப்படவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

இளவரசனின் காதல் மனைவியான திவ்யாவும் அவரது குடும்பத்தினரும் கூட அதில் கலந்து கொள்ளவில்லை. முன்னதாக திவ்யா இறுதி நிகழ்வுகளில் கலந்து கொள்ள வேண்டும் என்று இளவரசனின் தந்தை வேண்டுகோள் விடுத்திருந்தார்.

அரசியல் கட்சித்தலைவர்களுக்கு இந்த இறுதி நிகழ்வில் கலந்துகொள்ள தடை இருந்தபோதிலும், சில இரண்டாம் கட்ட தலைவர்கள் இந்த நிகழ்வில் கலந்துகொண்டனர். (எ-8)

## சிசுவின் சடலம் மீட்பு

மட்டக்களப்பு மாவட்டம் கொக்கட்டிச்சோலை பிரதேசத்தில் உள்ள காணியொன்றிலிருந்து சிசுவின் சடலம் ஒன்றை பொலிஸார் நேற்று மீட்டுள்ளனர்.

பொலிஸாருக்கு கிடைத்த தகவலை அடுத்து அங்கு சென்ற பொலிஸ் குழுவினர் விசாரணைகளை நடத்தியதுடன், சிசுவின் சடலத்தை மீட்டு வைத்தியசாலையில் ஒப்படைத்துள்ளனர்.

இந்த சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை கொக்கட்டிச்சோலை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (எ-8)

## படுகாயமடைந்த குடும்பஸ்தர் சிகிச்சை பலனின்றி மரணம்

(யாழ்ப்பாணம்)

மிதிவெடி வெடித்ததில் படுகாயமடைந்த ஹலோ ரஸ்ட் பணியாளர் சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளார்.

கடந்த 12 ஆம் திகதி நாகர்கோவில் குடாரப்பு பகுதியில் காலை 9.30 மணிக்கு இடம் பெற்ற மிதிவெடி வெடிப்புச் சம்பவத்தில் இக் குடும்பஸ்தர் படுகாயமடைந்திருந்தார்.

இதில் நாகர்கோவிலைச் சேர்ந்த யேசுதாசன் லியோ (வயது 29) என்ற குடும்பஸ்தரே படுகாயமடைந்து சிகிச்சை பெற்று வந்த நிலையில் சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளார்.

குடாரப்பில் மிதிவெடியகற்றும் பணியில் ஈடுபட்டிருந்த பொழுது மிதிவெடி தவறுதலாக வெடித்ததில் தலைப்பகுதி உட்பட உடலின் அனைத்து பாகங்களும் கடுமையாக படுகாயமடைந்த நிலையில் சம்பவ இடத்தில் வைத்து ஹலோ ரஸ்ட் நிறுவனத்தின் முதலுதவியுடன் அம்புலன்ஸில் கொண்டுவரப்பட்டு யாழ். போதனா வைத்தியசாலையில் அதிதீவிர சிகிச்சைப் பிரிவில் இவர் அனுமதிக்கப்பட்டிருந்தார்.

கடந்த இரு நாட்களாக வைத்தியசாலையில் சிகிச்சை பெற்றுவந்த நிலையில் நேற்றுக் காலை 6.10 மணியளவில் சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளார்.

இதேவேளை குறித்த மிதிவெடியகற்றும் பணியாளர் மிதிவெடியகற்றும் பணியில் ஈடுபட்டிருந்த இடம் கடற்கரையினை அண்மித்த மணற்பாங்கான இடமாகும்.

இப்பகுதியில் ஏனைய இடங்களினை விட அதிகமான மிதிவெடிகள் புதைக்கப்பட்டுள்ளதனால் இப்பகுதியில் மிதிவெடியகற்றும் பணியில் ஈடுபடுவது கடினமானது எனவும் தெரிவிக்கப்படுகின்றது. (எ-4)

### வேதாத்திரி மகரிஷியின் நற்சிந்தனை

## பிறவித் தொடர்பு



எரியும் விளக்கிலிருந்து தோன்றும் வெப்பமும் வெளிச்சமும் விளக்கை நிறுத்திய உடனே எங்கே போகின்றன? சுற்றிலும் தொடர்பாக உள்ள அணுக்களில் அவ்வெளிச்சம் பிரதிபலித்துக்கொண்டே இருக்கிறது. அணுவில் காந்தமாகிறது. அந்த அணுக்கள் தாங்கும் அளவு போக மீதம் சூனியம் என்ற ஈர்ப்புச் சக்தியில் சேர்ந்து விடுகிறது. வெளிச்சம் தோன்றிக்கொண்டே பிரதிபலித்துக்கொண்டே சூனியமாகிக் கொண்டே இருக்கிறது.

ஆற்றில் தண்ணீர் வந்து கொண்டேயிருக்கிறது; போய்க்கொண்டேயும் இருக்கிறது. ஆனால் பார்வைக்கு ஆறு நிலையான வடிவமாகத் தெரிந்து கொண்டிருக்கிறது. வரவு நின்று விட்டால் பார்க்கும் நீரானது ஓடி மறைந்து விடும், ஆறு க்ாலியாகத் தெரியும். இதுபோன்றுதான் ஒளி மறைந்து விடுகிறது. இதுபோன்றே உடலில் சுவாச ஓட்டம், இரத்த ஓட்டம் நின்றவுடன் அதனால் உற்பத்தியாகி இயங்கிக்கொண்டேயிருந்த காந்த அலைகளின் உணர்ச்சிச் செயற்பகுதி செயலற்றதாகி விடுகிறது. அலை அடங்கின நீராகும் தன்மை போலவும் நீராவி குளிர்ந்துவிட்டால் தண்ணீராகிவிடும் தன்மை போலவும் அறிவு (Consciousness) என்ற உணரும் சக்தியும் ஆதி என்ற மௌன சக்தியாகி விடுகிறது.

எழுச்சி, இயக்கம் என்னும் நிலையில் எல்லையுடையதாக இருந்த சக்தி இயக்கம் நிற்க எல்லையற்று நிரவி நிர்விகற்ப நிலையாகிவிடுகிறது. உயிரைப் பற்றிக் கற்பனைகளாக எழுதப்பட்டவற்றை, சொல்லப்பட்டவற்றை மறந்து அறிவை நிறுத்தி ஆராய்ந்து பார்த்தால் இது நன்றாக விளங்கும்.

நாத விந்துவின் சேர்க்கையே எல்லாப் பிறவிகளுக்கும் முன் தொடர்பும் பின் தொடர்பும் ஆகும். அதாவது தாய் தகப்பன் முன்பிறவி, மக்கள் பின்பிறவியாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## எகிப்து முன்னாள் ஜனாதிபதி மோர்ஷி மீது

# குற்ற விசாரணை



(கெய்ரோ)

எகிப்து முன்னாள் ஜனாதிபதி மோர்சி மீது குற்ற விசாரணை நடத்தவுள்ளதாக அந்நாட்டு அரசு அறிவித்துள்ளது. எகிப்தில் ஜனநாயக முறையில் தேர்ந்தெடுக்கப்பட்ட முஹமது மோர்சியின் ஆட்சிக்கு எதிராக மக்கள் போராட்டம் நடத்தினர். இதைத் தொடர்ந்து இராணுவம் கடந்த 3 ஆம் திகதி ஆட்சியைக் கைப்பற்றியது. இதனால் ஏற்பட்ட கலவரத்தில் நூற்றுக்கும் அதிகமானோர் உயிரிழந்தனர். இதனால் இராணுவம் மோர்சியைக் கைது செய்து இரகசிய இடத்தில் சிறை வைத்துள்ளது.

இந்நிலையில் அவர் மீது குற்ற விசாரணை நடத்தவுள்ளதாக அரசு அறிவித்துள்ளது.

உளவு வேலையில் ஈடுபட்டது, வன்முறையைத் தூண்டியது, நாட்டின் பொருளாதாரத்தை சீர் குலைத்தது போன்ற பல புகார்கள் அவர் மீது எழுந்துள்ளன.

மேலும், முஸ்லிம் சகோதரத்துவக் கட்சியின் 8 முக்கிய தலைவர்கள் மீதும் புகார்கள் எழுந்துள்ளன.

இந்தப் புகார்களை அரசு வழக்கறிஞர்கள் ஆராய்ந்து வருகின்றனர். இதனால் அவர் மீது விரைவில் குற்ற விசாரணை ஆரம்பமாகுமென தகவல்கள் தெரிவிக்கின்றன.

இதற்கிடையே, அமெரிக்கா மோர்சியை விடுவிக்கக் கேட்டுள்ளது. மேலும், இஸ்லாமிய சகோதரத்துவ கட்சியினரைக் கைது செய்யக் கூடாது என்றும் கேட்டுக் கொண்டுள்ளது. (அ-2)

## 2000 ஆண்டுகளுக்கு முந்தைய எலும்புக்கூடுகள் கண்டுபிடிப்பு



மெக்சிக்கோவில் 2 ஆயிரம் ஆண்டுகளுக்கு முந்தைய பிரமிட்களையும், 30 எலும்புக்கூடுகளையும் அகழ்வாராய்ச்சியாளர்கள் கண்டுபிடித்துள்ளனர்.

வெராக்ருஸ் பகுதியின் தென் கிழக்கில் உள்ள ஜல்டிபன் நகரில் புதிய கட்டடம் கட்டுவதற்காக பள்ளம் தோண்டியபோதே இவை கண்டுபிடிக்கப்பட்டன.

கி.பி. முதல் நூற்றாண்டில் தொடங்கி 700ஆம் நூற்றாண்டு வரை பயன்பாட்டில் இருந்த பழங்கால நகர்மாக ஜல்டிபன் இருந்திருக்கலாம் என ஆராய்ச்சியாளர்கள் கருதுகின்றனர்.

கண்டெடுக்கப்பட்ட 30 எலும்புக் கூடுகளில் 2 குழந்தைகளுக்குரியவை என தெரிய வந்துள்ளது. புதைக்கப்பட்ட மனிதர்களுடன் அவர்களின் அடுத்த பிறவித் தேவைக்கென மான், நாய், மீன் மற்றும் பறவைகளையும் சேர்த்தே அவர்களது உறவினர்கள் புதைத்துள்ளனர்.

மேலும், சில மண் பொம்மைகளும் அந்தக் குழிகளில் இருந்து எடுக்கப்பட்டுள்ளன.

இவை சில மாதங்களுக்கு முன்னர் கோமாகால்கோ பகுதியில் கண்டெடுக்கப்பட்டவை போல் மாயன் காலத்து கலை நுணுக்கத்தை சார்ந்துள்ளது என ஆராய்ச்சியாளர்கள் கூறுகின்றனர்.(அ-2)

## வெளிநாட்டில் குடியேற சர்தாரி விருப்பம்



(இஸ்லாமாபாத்)

ஜனாதிபதி பதவியிலிருந்து விலகிய பின்னர் வெளிநாட்டில் குடியேற ஆசிப் அலி சர்தாரி விரும்பம் கொண்டுள்ளதாக அவருக்கு நெருங்கிய வட்டாரங்கள் தகவல் வெளியிட்டுள்ளன.

பாகிஸ்தான் ஜனாதிபதியாக ஆசிப் அலி சர்தாரி பதவி வகிக்கிறார். அண்மையில் நடந்து முடிந்த பாராளுமன்ற தேர்தலில் இவரது பாகிஸ்தான் மக்கள் கட்சி படுதோல்வி அடைந்தது.

நவாஸ் செரீப்பின் பாகிஸ்தான் முஸ்லிம் லீக் (என்) கட்சி அமோக வெற்றி பெற்று ஆட்சியை கைப்பற்றியது. இருந்தாலும் சர்தாரியின் பதவிக்காலம் எதிர்வரும் செப்டெம்பர் மாதம் 8ஆம் திகதியே முடிவுறவுள்ளது.

அதன்பின்னர் அவர் அரசியலில் இருந்து ஓய்வு பெறுகிறார்.

மேலும், அவர் பாகிஸ்தானில் இருந்து வெளியேறி வெளிநாட்டில் குடியேற திட்டமிட்டுள்ளார். இந்த தகவலை அவருக்கு நெருங்கிய வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

இதற்கிடையே, அடுத்த ஜனாதிபதி தேர்தல் எதிர்வரும் ஓகஸ்ட் மாதம் 8ஆம் திகதி நடைபெறவுள்ளது. அதற்கான ஏற்பாடுகள் தீவிரமாக நடைபெறுவதாக தேர்தல் குழுவின் மூத்த அதிகாரிகள் தெரிவித்துள்ளனர். (அ-2)

## அஷாத்திற்கு எதிராக போராட

# தலிபான் அமைப்பு தீர்மானம்

சிரியாவுக்கு பயங்கரவாதிகளை அனுப்ப தலிபான் பயங்கரவாத அமைப்பு முடிவு செய்துள்ளது. சிரிய ஜனாதிபதிக்கு எதிராகப் போரிடுவதற்காகவே தனது அமைப்பினரைச் சேர்ந்தவர்களை அனுப்ப உள்ளதாக குறித்த அமைப்பு தகவல் வெளியிட்டுள்ளது.

இது குறித்து தலிபான் வட்டாரங்கள் கூறுகையில்,

எங்கள் நபர்கள் (பயங்கரவாதிகள்) சிரியா சென்று ஜனாதிபதி பஷார் அல்-அஸாதின் படைகளை எதிர்த்துப் போராடுவார்கள். முதற்கட்டமாக, கொரில்லா போர் முறைகளில் நிபுணத்துவம் பெற்ற நபர்கள் அங்கு அனுப்பி வைக்கப்படவுள்ளனர்.

பாகிஸ்தானில் இருந்து சிரியா செல்பவர்களில் அரபு, உஸ்பெக், செசன் தீவிரவாதிகளும் அடங்குவர். அவர்கள் ஆப்கானில் கடந்த 2001ஆம் ஆண்டு அமெரிக்கப் படையெடுப்பு நடத்தியதில் இருந்து, பாகிஸ்தானின் மலைப்பாங்கான பழங்குடியினப் பகுதிகளில் வசித்து வருகின்றனர் என்று தெரிவித்துள்ளன.

ஆப்கானில் இருந்து எதிர்வரும் 2014 ஆண்டு அமெரிக்கப் படைகள் முற்றிலும் வாபஸ் பெறப்படவுள்ளன. இந்த நிலையில், ஆப்கான் எல்லையையொட்டிய பாகிஸ்தானின் பழங்குடிப் பகுதி மீது அங்கு தங்கியுள்ள வெளிநாட்டுத் தீவிரவாதிகளில் பெரும்பாலோர் அங்கிருந்து வேறு பகுதிகளுக்கு இடம்பெயர்ந்து செல்லத் தொடங்கியுள்ளனர்.

எனவே, சிரியாவில் நிலவும் போர்ச் சூழல் அவர்களுக்கு உகந்ததாக உள்ளது. அந்நாட்டில் ஜனாதிபதியை எதிர்த்துப் போராடும் சன்னி கிளர்ச்சியாளர்கள் மீது அவர்களுக்கு அனுதாபம் உண்டு என்பதால் அங்கு சென்று போரிடவே தலிபான் பயங்கரவாதிகள் விரும்புகின்றனர் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (அ-2)

## பூட்டான் தேர்தலில் எதிர்க்கட்சி வெற்றி

பூட்டானில் நடைபெற்ற நாடாளுமன்ற பொதுத் தேர்தலில் எதிர்க்கட்சியான மக்கள் ஜனநாயக கட்சி 47இற்கு 32 இடங்களை கைப்பற்றி வெற்றி பெற்றுள்ளது.

பூட்டான் நாட்டில் நேற்று முன்தினம் பொது தேர்தல் நடைபெற்றது. நாடாளுமன்றத்துக்கு நடைபெறும் 2ஆவது பொது தேர்தலான இதில் மொத்தமுள்ள 47 தொகுதிகளுக்கும் வாக்கு பதிவு நடைபெற்றது. இதில் 80 சதவீத வாக்குகள் பதிவாகின. வாக்கு பதிவுக்காக இந்தியாவில் இருந்து வாங்கப்பட்ட 4 ஆயிரத்து 130 மின்னணு வாக்கு பதிவு இயந்திரங்கள் பயன்படுத்தப்பட்டன.

பூட்டானில் மொத்தம் 3 இலட்சத்து 81 ஆயிரம் வாக்காளர்கள் உள்ளனர். 850 வாக்கு சாவடி மையங்கள் அமைக்கப்பட்டிருந்தன. தேர்தலை நடத்த 10 ஆயிரம் அலுவலர்கள் பணியில் ஈடுபடுத்தப்பட்டனர். இந்திய தேர்தல் ஆணையர் சம்பத் தேர்தல் பார்வையாளராக பங்கேற்றார்.

பூட்டான் தேர்தலில் பிரதான கட்சிகளான, ஆளும் டிபிடி கட்சிக்கும் எதிர்கட்சியான மக்கள் ஜனநாயக கட்சிக்கும் நேரடி போட்டி நிலவியது. இதில் 47 இடங்களில் மக்கள் ஜனநாயக கட்சி 32 இடங்களை கைப்பற்றி வெற்றி பெற்றது. பிரதமர் ஜிக்மி ஒய் தின்லேயின் ஆளும் கட்சியான டிபிடி கட்சி 15 இடங்களில் மட்டுமே வென்றது.

மண்ணெண்ணெய் மற்றும் சமையல் எரிவாயு மானியம் தொடர்பான பிரச்சினைதான் தற்போதைய ஆளும் கட்சி படுதோல்வி அடைந்ததற்கான முக்கிய காரணம் என்று கூறுகின்றனர்.

மக்கள் ஜனநாயக கட்சியின் தலைவர் ஷெரிங் டோப்கே புதிய பிரதமராக பதவியேற்பார் என எதிர்பார்க்கப்படுகிறது. (அ-2)

## இறுக்கமான ஆடை அணிவோருக்கு தலிபான்கள் எச்சரிக்கை

பாகிஸ்தானிலுள்ள தலிபான் தீவிரவாதிகள், தங்களது ஆதிக்கம் இடம்பெறும் பகுதிகளில் சில துண்டுப் பிரசுரங்களை விநியோகம் செய்துள்ளனர். அதில் பெண்களும் ஆண்களும் உடலை கவர்ச்சியாக காட்டும் வகையில் இறுக்கமான மற்றும் மெல்லிய வகை ஆடைகளை அணியக் கூடாதென்றும் ஜீன்ஸ் அணியக் கூடாதென்றும் எச்சரிக்கை விடுத்துள்ளனர். அவ்வாறான உடைகள் அணிந்தால் கடும் நடவடிக்கை எடுக்கப்படும் என்று மிரட்டல் விடுத்துள்ளனர்.

தலிபான்கள் வெளியிட்ட துண்டு பிரசுரத்தில், நாங்கள் இது போன்ற ஆடைகளை விற்பனை செய்யும் கடைக்காரர்களுக்கும் எச்சரிக்கை விடுத்துள்ளோம். அதேபோல் இறுக்கமான மற்றும் மெல்லிய ஆடைகளை தைத்து தரும் தையல்காரர்களுக்கும் எச்சரிக்கை விடப்பட்டுள்ளது. இறுக்கமான ஆடைகளை விற்பவர்கள் மற்றும் தைத்து கொடுப்பவர்களுக்கு கடும் தண்டனை விதிக்கப்படும் என்று தலிபான்கள் அதில் கூறியுள்ளனர். ஆண்கள், பெண்கள் யாராக இருந்தாலும் தண்டனையில் இருந்து தப்ப முடியாது. அவ்வாறு குற்றத்தில் ஈடுபடுபவர்களுக்கு 50 ஆயிரம் ரூபா வரை அபராதம் விதிக்கப்படும் என்று தெரிவித்துள்ளனர்.

தற்போது நோன்பு கடைப்பிடிக்கப்படுவதால் இந்த மாதம் முழுவதும் இறுக்கமான, கவர்ச்சியான ஆடைகள் அணியக்கூடாது என்று தடை விதித்துள்ளதாக கூறுகின்றனர். ரம்ழான் மாதத்தில் நோன்பைக் கடைப் பிடிக்காதவர்களுக்கும் ஒரு மாத சிறை தண்டனை வழங்கப்படும் என தலிபான்கள் எச்சரிக்கை விடுத்துள்ளனர். இதனால் தெற்கு வசிரிஸ்தான் உள்ளிட்ட பகுதிகளில் பரபரப்பு ஏற்பட்டுள்ளது. சிரியாவை மையமாக கொண்டு இயங்கி வரும் பாகிஸ்தான் தலிபான் தீவிரவாதிகளில் முல்லா நஷீர் தலிபான் குழுவினர் தான் இந்த மிரட்டல் விடுத்துள்ளதாக செய்தி வெளியாகியுள்ளது. (அ-2)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இங்கிலாந்து அணி வெற்றி

## ஆஷஸ் தொடர்

அவுஸ்திரேலிய அணிக்கு எதிரான ஆஷஸ் தொடரின் முதல் போட்டியில் இங்கிலாந்து அணி 14 ஓட்டங்கள் வித்தியாசத்தில் வெற்றி பெற்றது.

இங்கிலாந்து சென்றுள்ள அவுஸ்திரேலிய அணி, வரலாற்று சிறப்புமிக்க ஆஷஸ் டெஸ்ட் தொடரில் பங்கேற்கிறது.

ஆஷஸ் தொடரின் முதலாவது டெஸ்ட் கிரிக்கெட் போட்டி நாட்டிங்காமில் கடந்த 10-ம் திகதி ஆரம்பமானது.

இதில் முதல் இன்னிங்சில் இங்கிலாந்து 215 ஓட்டங்களை எடுத்தது. அதிகபட்சமாக டிராட் 48 ஓட்டங்கள் எடுத்தார். அவுஸ்திரேலிய அணி சார்பில் சிடில் 5 விக்கெட்டுகளை வீழ்த்தினார். அடுத்து விளையாடிய, அவுஸ்திரேலிய அணி 280 ஓட்டங்களுக்கு தனது இன்னிங்சை முடித்தது.

அதிகபட்சமாக அறிமுக வீரர் அகர் 98 ஓட்டங்கள் எடுத்தார். இங்கிலாந்து அணி சார்பில் அன்டர்சன் 5 விக்கெட்டுகளை வீழ்த்தினார்.



65 ஓட்டங்கள் பின்தங்கிய நிலையில் 2-வது இன்னிங்சைத் தொடங்கிய இங்கிலாந்து 375 ஓட்டங்களைக் குவித்தது.

பெல் சிறப்பாக விளையாடி சதம் அடித்தார். அவுஸ்திரேலிய பந்து வீச்சாளர் ஸ்டார்க் 3 விக்கெட் வீழ்த்தினார். இங்கிலாந்து அணி ஆஸ்திரேலியாவை விட 310 ஓட்டங்கள் அதிகமாக எடுத்திருந்தது.

இதனால் 311 ஓட்டங்கள் எடுத்தால் வெற்றி என்ற இலக்குடன் அவுஸ்திரேலியா களம் இறங்கியது. நேற்றுமுன்தின 4-வது நாள் ஆட்ட முடிவில் அவுஸ்திரேலிய அணி 6 விக்கெட் இழப்பிற்கு 174 ஓட்டங்களை எடுத்திருந்தது.

பிராட் ஹடின் 11 ஓட்டங்களுடனும், அகர் 1 ஓட்டத்துடனும் களத்தில் இருந்தனர்.

நேற்று 5-வது நாள் ஆட்டம் தொடங்கியது. அவுஸ்திரேலியா வெற்றி பெற 137 ஓட்டங்கள் தேவைப்பட்டது. கையில் 4 விக்கெட்டுகள் இருந்தது. ஆட்டம் தொடங்கிய சிறிது நேரத்தில் அகர் 14 ஓட்டங்களில் அன்டர்சன் பந்தில் ஆட்டம் இழந்தார். அடுத்து வந்த ஸ்டார்க் 1 ஓட்டத்திலும் சிடில் 11 ஓட்டத்திலும் ஆட்டம் இழந்தனர். அப்போது ஆஸி 9 விக்கெட் இழப்பிற்கு 231 ஓட்டங்களை எடுத்திருந்தது.

10-வது விக்கெட்டுக்கு ஹடின் உடன் பட்டின்சன் ஜோடி சேர்ந்தார். அப்போது அவுஸ்திரேலிய அணிக்கு 80 ஓட்டங்கள் தேவைப்பட்டது. ஒருபுறம் விக்கெட் வீழ்ந்தாலும் ஹடின சிறப்பாக விளையாடி அரைச்சதம் அடித்தார். அத்துடன் அணியை வெற்றி நோக்கி அழைத்து சென்றுகொண்டிருந்தார். அவருக்கு பட்டின்சன் உறுதுணையாக இருந்தார்.

இதனால் ஆட்டத்தில் பரபரப்பு ஏற்பட்டது. இங்கிலாந்து ஜெயிக்குமா? ஆஸ்திரேலியா ஜெயிக்குமா? என்று பரபரப்பு மைதானத்தில் ஏற்பட்டது. மதிய உணவு இடைவேளை வரை அவுஸ்திரேலியா 9 விக்கெட் இழப்பிற்கு 191 ஓட்டங்கள் எடுத்திருந்தது. வெற்றிக்கு 20 ஓட்டங்கள் மட்டுமே தேவைப்பட்டது.

இடைவேளை முடிந்து ஆஸி களம் இறங்கியது. அன்டர்சன் வீசிய முதல் ஓவர் மெய்டனானது. 2-வது ஓவரை சுவான வீசினார்.

இந்த ஓவரில் அவுஸ்திரேலியாவிற்கு 5 ஓட்டங்கள் கிடைத்தது. அடுத்த ஓவரை அன்டர்சன் வீசினார். இந்த ஓவரின் 5-வது பந்தில் ஹடின் விக்கெட் காப்பாளரிடம் பிடி கொடுத்து அவுட் ஆனார். ஹடின் 71 ஓட்டங்கள் எடுத்தார். கடைசி வரை நின்ற அவரால் அணியை வெற்றி பெற செய்ய முடியவில்லை.

இதனால் பரபரப்பான ஆட்டத்தில் இங்கிலாந்து 14 ஓட்டங்கள் வித்தியாசத்தில் வெற்றி பெற்றது. இங்கிலாந்து அணியின் அன்டர்சன் சிறப்பாக பந்து வீசி 5 விக்கெட்டுகள் வீழ்த்தினார். இதன் மூலம் இங்கிலாந்து 5 போட்டிகள் கொண்ட ஆஷஸ் தொடரில் 1-0 என முன்னிலையில் உள்ளது.

## தோனியை கண்டுகொள்ளாத பி.சி.சி.ஐ

இங்கிலாந்தில் சமீபத்தில் நடந்த சம்பியன்ஸ் கிண்ணத் தொடரிலும், மேற்கிந்திய தீவுகளில் நடந்த முத்தரப்பு கிரிக்கெட் போட்டியிலும் தோனி தலைமையிலான இந்திய கிரிக்கெட் அணி கிண்ணத்தை வென்றது.

சம்பியன்ஸ் கிண்ணத்தொடர் தொடங்குவதற்கு முன்னர் இந்திய அணித் தலைவர் தோனிக்கு கடும் நெருக்கடி இருந்தது.

ஒருபுறம் ஐ.பி.எல் சூதாட்ட விவகாரம் விஸ்வரூபம் எடுக்க தனியார் விளையாட்டு கம்பனியின் பங்குகளை தோனி வைத்திருப்பதாகவும் அந்த நிறுவனத்தில் ஒப்பந்தத்தில் உள்ள ரெய்னா, ஜடேஜா ஆகியோருக்கு தோனி சலுகை காட்டி வருவதாகவும் குற்றச்சாட்டு எழுந்தது. இந்த விவகாரம் பூதாகரமாக வெடித்ததால் பிசிசிஐ விசாரணை நடத்த முடிவு செய்தது.

சம்பியன்ஸ் கிண்ணம் மற்றும் முத்தரப்பு கிரிக்கெட் தொடர் முடிந்ததும் தோனியிடம் விசாரணை நடைபெறும் என்று தகவல்கள் வெளியானது.

இந்நிலையில் அடுத்தடுத்து 2 கிண்ணத்தை இந்திய அணி வென்று அசத்தியுள்ளதால் தனியார் கம்பனியில் தோனியின் பங்கு தொடர்பாக பி.சி.சி.ஐ விசாரணை நடத்தும் முடிவை தள்ளிப்போட்டுள்ளதாக கிரிக்கெட் வட்டாரங்கள் தெரிவித்தன.

## கௌரவிப்பு நிகழ்வு

(முல்லைத்தீவு)

சென்ற வாரம் நடைபெற்றுமுடிந்த மாகாணமட்ட மெய்வல்லுநர் போட்டியில் சாதனை படைத்த மு/ விசுவமடு மகா வித்தியாலய மாணவிகளைக் கௌரவிக்கும் நிகழ்வு பாடசாலை அதிபர் பெ.பாலகிருஸ்ணன் தலைமையில் பாடசாலை கேட்போர் கூடத்தில் இன்று முற்பகல் 11 மணியளவில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக முல்லைத்தீவு வலயக் கல்விப் பணிப்பாளர் மா.இராஜகுமார் கலந்துகொள்ளவுள்ளார்.

## தொழில்நுட்பத்துறை பாடநெறி ஆரம்பம்

க.பொ.த உயர்தரப் பிரிவில் புதிதாக அறிமுகப்படுத்தப்பட்ட தொழில்நுட்பத்துறை பாடநெறியின் ஆரம்ப விழா இன்று காலை 9 மணிக்கு வயாவிளான் மத்திய மகா வித்தியாலயத்தில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வு அதிபர் வி.ரி.ஜெயந்தன் தலைமையில் நடைபெறவுள்ளது. (எ)

# பிரான்ஸ் சம்பியன்

## உலகக்கிண்ண தொடரில் அசத்தல்



"பிபா" உலகக் கிண்ணக் கால்பந்து (20 வயதுக்குட்பட்டோர்) தொடரில் பிரான்ஸ் அணி இறுதிப் போட்டியில் உருகுவே அணியை வீழ்த்தி சம்பியன் பட்டம் வென்றது.

துருக்கியில், 20 வயதுக்குட்பட்டோருக்கான 19-வது "பிபா" உலக கோப்பை கால்பந்து தொடர் நடந்தது.

இஸ்தான்புல் நகரில் நடந்த இறுதிப்போட்டியில் பிரான்ஸ், உருகுவே அணிகள் மோதின.

ஆட்டநேர முடிவில் (90 நிமிடம்) இரு அணி வீரர்களால் ஒரு கோல் கூட அடிக்க முடியவில்லை. பின், இரு அணிகளுக்கும் வழங்கப்பட்ட கூடுதல் நேரத்திலும் (தலா 15 நிமிடம்) ஒரு கோல் கூட அடிக்கவில்லை.

இதனால் போட்டியின் முடிவு, "பெனால்டி ஷூட் அவுட்" முறைக்கு சென்றது. இதில் அபாரமாக செயல்பட்ட பிரான்ஸ் அணி 4-1 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்று, சம்பியன் பட்டத்தைக் கைப்பற்றியது.

இது, உலக கோப்பை (20 வயது) வரலாற்றில், பிரான்ஸ் அணி வென்ற முதலாவது கோப்பை. கடந்த 2011-ல், மூன்றாவது இடம் பிடித்தது.

இரண்டாவது முறையாக (1997, 2013) இறுதிப் போட்டிக்கு முன்னேறிய உருகுவே அணி, மீண்டும் இரண்டாவது இடம் பிடித்தது.

கானா வெற்றி: மூன்றாவது இடத்துக்கான போட்டியில் கானா- ஈராக் அணிகள் மோதின. அபாரமாக ஆடிய கானா அணி 3-0 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்று, மூன்றாவது இடத்தை கைப்பற்றியது.

## ஓய்வுபெற முன் பல பட்டம் வெல்வேன்


இந்தியாவின் முன்னணி டென்னிஸ் வீராங்கனை சானியா மிர்சா அடிக்கடி காயம் ஏற்பட்டு சிகிச்சை பெறுவதால் நீண்டகாலமாக சர்வதேச அரங்கில் அவரால் சோபிக்க முடியவில்லை. சமீபத்தில் நடைபெற்ற விம்பிள்டன் தொடரில் கலப்பு இரட்டையர் பிரிவில் விளையாடிய சானியா காலிறுதி வரை முன்னேறினார்.

அடுத்து, இந்த ஆண்டின் கடைசி கிராண்ட்ஸ்லாம் போட்டியான அமெரிக்க ஓபனில் விளையாட உள்ளார்.

அவரது முயற்சிகளுக்கு காயம் முட்டுக்கட்டையாக இருப்பினும் ஓய்வு பெறுவதற்கு முன்னதாக பல பட்டங்களை வெல்ல முடியும் என்ற நம்பிக்கையில் இருக்கிறார் சானியா.

இதுகுறித்து சானியா மிர்சா மேலும் கூறுகையில், 'மணிக்கட்டு காயம், இடுப்பு வலி, மூட்டு தொந்தரவு என பலமுறை காயம் அடைந்துள்ளேன். இதற்காக 3 முறை அறுவை சிகிச்சை செய்துள்ளேன். இது எனது வாழ்நாளில் மோசமான நேரம்.

இந்த விளையாட்டு உலகில் உள்ள மிக கடினமான விளையாட்டுகளில் ஒன்று. இதுவரை 2 கிராண்ட்ஸ்லாம் பட்டங்களை வெல்ல எனக்கு அதிர்ஷ்டம் இருந்தது. நான் ஓய்வு பெறுவதற்கு முன்னால், மேலும் பல கிராண்ட்ஸ்லாம் பட்டங்களை வெல்ல முடியும் என்ற நம்பிக்கை உள்ளது. குறிப்பாக அமெரிக்க ஓபனில், எனக்கு பிடித்தமான அந்த ஆடுகளத்தில் சிறப்பாக விளையாடி பட்டம் வெல்வேன்" என்றார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலங்கையருக்கு உதவியவர் பதவி நீக்கப்பட்டார்

(சென்னை)

இலங்கையர் ஒருவருக்கு சட்ட விரோதமாக கடவுச்சீட்டினை வழங்க உதவியாக குற்றம் சுமத்தப்பட்ட தமிழ்நாட்டு பொலிஸ் அதிகாரி ஒருவர் பதவி நீக்கம் செய்யப்பட்டுள்ளார்.

தமிழ்நாடு திரும்பங்களம் உதவி காவல்துறை அத்தியட்சகர் கே.தங்கவேலுவே இவ்வாறு பதவி நீக்கம் செய்யப்பட்டதாக இந்திய ஊடகங்கள் தெரிவித்துள்ளன.

கடந்த 2009ஆம் ஆண்டு இலங்கையர் ஒருவருக்கு இந்திய கடவுச் சீட்டினை பெற்றுக் கொடுப் பதற்கான அனுமதியை அவர் இது தொடர்பான அதிகாரிகளுக்கு வழங்கியமைக்காக அவர் பதவி நீக்கப்பட்டுள்ளார்.

இது தொடர்பில் இந்திய மத்திய புலனாய்வுத் தரப்பினர் விசாரணை நடத்தியதன் அடிப் படையில், இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. (எ-8)

# சோமாலியக் கடலில் மூழ்கிய கப்பலிலிருந்த 11 பேர் தப்பினர்

## உயிர் தப்பியோரில் மூவர் இலங்கையர்கள்

(லண்டன்)

சோமாலியாவில் கடந்த இரண்டு ஆண்டுகளாக கடற்கொள்ளையர்களின் பிடியிலிருந்த போது, கடந்த வாரம் கடலில் மூழ்கிய கப்பலில் இருந்த 11 கப்பல் பணியாளர்கள் உயிரதப்பியுள்ளதாக அந்தப் பிராந்திய கடற் பாதுகாப்பு அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

இந்த 11 பேரில் இலங்கையர்கள் 3 பேர் என்றும் அவர்கள் கூறியுள்ளனர்.

கடற்கொள்ளையர்களின் பிடியிலுள்ள இன்னொரு மீன்பிடி கப்பலுக்கு இவர்கள் கடைசி நேரத்தில் மாற்றப்பட்டுள்ளதாக கிழக்கு ஆபிரிக்க கடற்பிராந்திய பாதுகாப் புக்கான செயலகத்தின் தலைவர் ஜோன் ஸ்டீட் பிபிசியிடம் தெரிவித்தார்.

கப்பலில் இருந்துள்ள 4 பேரின் கதி என்னவென்று தெரியவில்லை என்று கூறிய ஜோன் ஸ்டீட், காணா மல்போன 4 பேருமே இலங் கையர்கள் என்றும் கூறினார்.

எல்பேடோ என்ற இந்தக் கப்பல் மூழ்கிய போது அதிலிருந்து வெளிப்பட்ட அவசர உதவி உயிர்காப்பு படகுகள் பல நீண்டதூரம் கடந்து கரையொதுங்கியுள்ளதை ஐரோப்பிய கடற்படையினர் உறுதிசெய்துள்ளனர்.

அந்தப் படகுகள் மூலம் கடற் கொள்ளையர்கள் அல்லது கப் பல் பணியாளர்கள் உயிர்தப்பியிருக்கலாம் என்று நம்பப்படுகிறது.

மூழ்கிய எல்படோ வர்த்தகக் கப்பலில் இருந்து 11 பணியாளர்கள் நாய்ஹம்-3 என்ற மீன்பிடிக் கப்பலுக்கு மாற்றப் பட்டநிலையில், ஏற்கெனவே 29 பேருடன் பிடித்து வைக்கப்பட்டிருந்த நாய்ஹம்-3 கப்பலும் மூழ்கும் அபாயத்தில் உள்ளதாக ஜோன் ஸ்டீட் தெரிவித்தார்.

இவர்கள் அனைவரையும் விடுவிப்பதற்கான பேச்சுவார்த்தைகள் நடத்தப்படு வதாகவும், பணயம் வைக்கப்பட்டுள்ள சில கப்பல் பணியாளர்களை குடும்பத்தினருடன் பேச கொள்ளையர்கள் அனுமதித்துள்ளதாகவும் கிழக்கு ஆபிரிக்க கடற் பிராந்திய பாதுகாப் புக்கான செயலகத்தின் தலைவர் மேலும் கூறினார். (எ-8)

## புதியதோர்...

யுமான சரத் பொன்சேகா தெரிவித்துள்ளார்.

எதிர்வரும் வடமேல் மாகாணசபைத் தேர்தலில் எனது கட்சி, தீப்பந்தம் சின்னத்தில் போட்டியிடவுள்ளது. யுத்தத்தை எதிர் கொள்ளும் போதும் சிறைச்சாலையில் காலத்தைக் கடத்தும் போதும் கிடைக்கப்பெற்ற அனுபவத்தைக் கொண்டு அடிமைப்பட்டுள்ள மக்களின வெற்றிக்காக போராட முடியும் என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

குருநாகல், தம்பதெனிய பிரதேசத்தில் இடம்பெற்ற தேர்தல் பிரசாரக் கூட்டத்தில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே சரத் பொன்சேகா மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார். (எ-11)

# மனிதாபிமானத்தை விட தேசிய பாதுகாப்பே முக்கியம்

## கேரள நீதிமன்றம் தெரிவிப்பு

இலங்கை அகதிகளுக்கு காட்ட வேண்டிய மனிதாபிமானத்தை விட, இந்திய தேசிய பாதுகாப்பு அத்தியவசியமானது என்று, கேரளாவின் மேல் நீதிமன்றம் தெரிவித்துள்ளது.

அண்மையில் கேரளா வின் கொச்சியூடாக அவுஸ்திரேலியா செல்ல முற்பட்ட நிலையில் கைதான இரண்டு இலங்கை யர்கள பிணை கோரி தாக்கல் செய்த வழக்கு விசாரணையின் போது நீதிமன்றம் இதனை தெரிவித்துள்ளது. (செ-8)

## தேசிய மட்ட தமிழ்...

றோயல் கல்லூரியில் 6,7 மற்றும் 14-ம் திகதிகளில் நடைபெற்றன.

நடைபெற்ற 50 போட்டிகளில் 25 போட்டிகளில் முதல் நிலையினையும், 7 போட்டிகளில் 2-ம் நிலையினையும், 4 போட்டிகளில் 3-ம் நிலையினையும் பெற்று வட மாகாணம் முதலிடத்தைப் பெற்றுக் கொண்டுள்ளது என வட மாகாணக் கல்விப் பணிப்பாளர் வி.செல்வராஜா அறிவித்துள்ளார்.

இதேவேளை, தமிழ்த்தினப போட்டிகளில் வெற்றிபெற்ற மாணவர்களுக்கு வட மாகாண ஆளுநர்ஜி.ஏ.சந்திரசிறி, மாகாண அமைச்சின் செயலாளர் சி.சத்தியசீலன், மாகாணக் கல்விப் பணிப்பாளர் வி.செல்வராஜா ஆகியோர் தமது வாழ்த்துக்களைத் தெரிவித்துள்ளனர். (எ-8)

## ஆளுநரின் தலை...

கூறுபவர்களாகவும் இருக்க வேண்டும் என்பதை ஜனாதிபதி வலியுறுத்தியதாகக் குறிப்பிட்டார்.

அமைச்சுக்களின் செயலாளர்கள் மற்றும் திணைக்களத் தலைவர் உள்ளடக்கிய மாதாந்த கூட்டங்களை மாகாண அமைச்சர்களே கூட்ட வேண்டும் என்று ஜனாதிபதி தங்களுக்கு பணிப்புரை விடுத்ததாகவும் அவர் கூறினார்.

இந்தச் சந்திப்பில் ஜனாதிபதியினால் தெரிவிக்கப்பட்ட கருத்துக்கள் மற்றும் விடுக்கப்பட்ட பணிப்புரைகளை பொறுத்தவரை மாகாண நிர்வாகத்தில் வேறு தலையீடுகள் இன்றி சுமுகமாகத் தம்மால் இனி செயற்பட முடியும் என்ற நம்பிக்கை தமக்கு உருவாகியுள்ளதாகவும அவர் குறிப்பிட்டார்.

ஜனாதிபதியின் ஆலோசகர்களில ஒருவரான முன்னாள் மாகாண முதலமைச்சரும் மாகாண சபை உறுப்பினருமான சிவநேசதுரை சந்திரகாந்தன் இது குறித்துக் கூறுகையில்,

கிழக்கு மாகாண சபையின் ஆட்சி சீராக நடைபெறுவதற்கு ஆளுநர், முதலமைச்சர் மற்றும் ஆளும் கட்சி உறுப்பினர்கள் கூட்டாக செயல்பட வேண்டியதன் அவசியம் பற்றி ஜனாதிபதி வலியுறுத்தியதாகத் தெரிவித்தார். (எ-8)

## கட்சிக்கு புதிய தலைமை...

யில், வடமாகாண சபைத் தேர்தல் தொடர்பில் கூட்ட மைப்பின் தலைவர் இரா.சம்பந்தனுக்கு தமிழரசுக் கட்சியின் யாழ். மாவட்டக் கிளை பிரேரணை ஒன்றை ஏற்கெனவே அனுப்பிவைத்துள்ளது.

அதில் வேட்பாளர்களின் தெரிவு அந்தந்த மாவட்டங்களின் கட்சி முக்கியஸ்தர்களிடம் ஒப்படைக்க வேண்டும், மாவட்டத்தில் தெரிவு செய்யப்படும் வேட்பாளர்கள் அம் மாவட்டததை சொந்த இடமாகவும், அங்கு வசிப்பவராகவும் கொண்டிருக்கவேண்டும், முதலமைச்சர் வேட்பாளராக மாவை சேனா திராஜாவை களமிறக்கவேண்டும் ஆகிய மூன்று கோரிக்கைகள் முன்வைக்கப்பட்டுள்ளன.

இக்கோரிக்கைகளுக்கமைய கூட்டமைப்பின் தலைவர் சம்பந்தன் செயற்படவேண்டும்.

வட மாகாண சபைத் தேர்தலில் கூட்டமைப்பின் முதலமைச்சர் வேட்பாளராக மாவை சேனா திராஜாவை களமிறக்காவிட்டால் இலங்கைத்தமிழரசுக்கட்சியின் மத்திய குழுவை உடனடியாகக் கூட்டு மாறு வலியுறுத்துவோம். அதில தீர்க்கமான ஒரு முடிபை நாம் எடுப்போம் என்று தெரிவித்தார் இலங்கைத் தமிழரசுக் கட்சியின் துணைப் பொதுச் செயலாளர் சீ.வீ.கே.சிவஞானம்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப் புக்குள் இன்று பதவிப் பிசாசுகள், உள் நுழைந்துள்ளனர். தமிழ் மக்களைப் பற்றி சற்றேனும் சிந்திக்கா மல் இன்று செயற்படுகின்றது கூட்டமைப்பு என பேராசிரியர் சி.க.சிற்றம்பலம் தெரிவித்துள்ளார்.

வடக்கில் மக்கள் போரின் கொடுமையால் அந்தரித்துக் கொண்டு இருக்கும்போது அதைக் கவனிக் காதவர்கள் இன்று கொழும்பிலிருந்து முதலமைச்சர் கதிரைக்கு ஆசைப் படுகின்றார்கள்.

கடந்த மூன்று தினங்களாக முதலமைச்சரைத் தெரிவு செய்யத் தெரியாத இந்தக் கூட்டமைப்பு தமிழருக்கான தீர்வுத்திட்டத்தை எப்படித் தயாரிக்கும்? எனவே, தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கு புதிய தலைமை வேண்டும்.

தமிழ் மக்களை கடவுள்தான் காப்பாற்ற வேண்டும் என்று தந்தை செல்வா அன்று கூறியிருந்தார். இன்று நான் கூறுகின்றேன், அதாவது தமிழ் மக்களை கூட்டமைப் பின் தற்போதைய தலைமையிடமிருந்து கடவுள்தான் காப்பாற்ற வேண்டும் என்று தெரிவித்தார் இலங்கைத் தமிழரசுக் கட்சியின் சிரேஷ்ட துணைத் தலைவரும் யாழ். பல்கலைக்கழக ஓய்வுநிலை தகைசார் சிரேஷ்ட பேராசிரியருமான சி.க.சிற்றம்பலம். (எ-8)


## வீடு விற்பனைக்கு

அம்பலவாணர் வீதி, உடுவிலில் அமைந்துள்ள நில.பர. 4.3/4-ம் வீடும், கிணறும், சுற்று மதிலும் கொண்ட ஆதனம் விற்பனைக்கு உண்டு.

தொடர்பு : சு.கிருபாகரன், புத்தூர் வடக்கு.
தொ.பே.இல : 077 4832247, 077 8094439
(3354)

## மணல் விற்பனைக்கு

கட்டிட வேலைகளுக்கும் பூச்சு வேலைகளுக்கும் சிறந்த மண். இப்போது மிகக் குறைந்த விலையில்...

4 1/2 ரக்ரர் 15,500/-

தொடர்புகளுக்கு குகன்
0777 590 792
071 368 4639
(C-4000)

## A/L தமிழ் கருத்தரங்கு - 2013

திரு.க.சந்திரலிங்கம்
B.A(Hons)Ta-spl,P.G.D.E, M.A(Tamil) -Ind

வெளி மாணவர்களும் பங்குபற்றலாம்
5 நாட்கள் நடைபெறும்
இன்று முதல் பதிவுகளை அலுவலகத்தில் மேற்கொள்ளவும்
ஆரம்பம் 22.07.2013 திங்கள் பி.ப 2 மணி
DCM
யாழ்நகர் (வேம்படி மகளிர் கல்லூரி அருகில்)
"கருமையான கற்றல் இலகுவான பரீட்சை"

## விற்பனைக்கு

அலுவலகத் தளபாடங்கள், Projector, Revolving chairs, Executive chairs, Tables விற்பனைக்குண்டு.
(C-4002)
0785285342

## தேவை

அலுவலகம் ஒன்றுக்கு Clerk (Female) தேவை. A/L சித்தி முக்கியம்.
யாழ் நகரிற்கு அண்மையானவர்கள் மாத்திரம்.
(C-4003) 0785285342

## மங்கலகரமான ஆரம்பம்

அன்புடையீர்,
நிகழும் மங்கலகரமான விஜய வருடம் ஆனித் திங்கள் 31 ஆம் நாள் (15.07.2013) திங்கட்கிழமை 11.45 மணிமுதல் 12.30 மணிவரை வரும் அத்த நட்சத்திரமும் ஸப்தமி திதியும் கூடிய சுப வேளையில்
மங்கலகரமான ஆரம்பம்




No: 341, K.K.S. Road, Jaffna. T.P: 021 222 2042.


இப்பத்திரிகை வலம்புரி அன்.கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 15.07.2013 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org